ஓம் பரப்பிரம்மணேநம:

# அமிர்தகுணபோதினி

(முந்திய "ஆநந்த குணபோதினி"யே இப்பொழுது "அமிர்த குணபோதினி" என்று புதுப்பெயருடனும் புதுவிதமாக வெளிவருகின்றது.)

**அறிவை விளக்கி, உற்சாகத்தைப் பெருக்கி, ஆநந்தத்தைத் தரவல்லதான அநுபவ விநோத ஞான கலா விலாஸங்கள் நிறைந்திலங்கும் அமிர்தச் சுவையுள்ள மாதப் பத்திரிகை.**

**பத்திராசிரியர்:—திரிசிரபுரம் - எஸ். ஜி. இராமாநுஜலு நாயுடு.**

" எண்ணிய எண்ணியாங் கெய்துப ; எண்ணியார்
COPY RIGHT] திண்ணிய ராகப் பெறின். " (திருக்குறள்.) [REGISTERED.

கமலம்-4. Vol. 4. } சென்னை: விபவஸு ஆடிமீ 1உ
1929-ம்ஸு ஜூலைமீ 16உ { இதழ்-40. No. 40.




"சிவோஹம்" என்று பெரியோர்கள் ஸதா சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். இதன் பொருள் என்ன? சிவனே நான் என்பதன்றோ? தன்னையே சிவன், அல்லது சிவனே தான் என்று கூறுவது எவ்வாறு பொருந்தும்? வியவகாரதிசையில் சிவன் வேறு; தான்வேறு. ஆயினும், தத்வ ஆராய்ச்சி செய்து ஆத்ம விசாரம் புரிந்த ஞானிகள் வியவகாரத்தை விட்டு விடுவர். அன்னோர்க்கு சிவன் வேறு, தான் வேறு என்னும் பேத புத்தி உண்டாகாது. "சிவனே தான்; தன்னைத்தவிர வேறு பொருளில்லை; அவ்வாறிருக்குமாயின் அவைகள் வெறும் தோற்றங்களே; நாமரூபங்களுள்ள ஸகலமும் நாசமாகின்றன; என்றும் நிலைத்துள்ளது ஆத்மா ஒன்றுதான்; அவ்வாத்மாவாகிய நான் சிவனேயன்றிவேறல்ல" —என்பதாய் ஞானிகள் கூறுகிறார்கள். இது எதுபோலெனில் அடுப்பில் எரிக்கப்போட்ட விறகு நெருப்புடன் சேர்ந்து தானும் அதைப்போல ஆகித் தன்னையும் நெருப்பு என்று சொல்லிக்கொள்வது போலாம். ஆனால், அத்தகைய பக்குவியாய் பிரம்மஞான மடைந்த பிறகன்றோ சிவோஹம் எனல் வேண்டும்; இப்போதே அப்படிச் சொல்வது எவ்வாறு ஒக்கும் எனில், அதற்குக் காரணம் கூறுகிறோம். காசி யாத்திரை போகிறவன் மார்க்க மத்தியில் காசி காசியென்று ஸ்மரிப்பது போலும், காசியின் நினைவே அவனுக்கு உண்டாவது போலும், தாசில் வேலை செய்வோன் வீட்டுக்கு வந்து மனைவியோடு பேசிக்

---

"அமிர்த குண போதினி"க்கு வியாசங்கள் வரையப் பழகுவ தெப்படி? முதலில் பக்கத்தின் அடிக்குறிப்புகளை அநுபவமாக எழுதப் பயின்றால் அதினின்றும் படிப்படியாக உயர்ந்து விடலாம்.

கொண்டிருக்கும் காலத்திலும் தான் தாசில்தாரென்று நினைத்துக்கொள்வது போலும், நாடகத்தில் வீரவாகு வேஷம் தரிக்கும் ராமசர்மா தான் பறைய னல்ல பிராமணனென்றெண்ணிக்கொள்வது போலும்—உண்மையில் சிவனு யிருக்கிற தான் பிரமையால், பிரபஞ்ச மாயையால் அதை மறந்து போனு லும், ஸ்மரணை வந்தபோது சிவோஹம் என்று சொல்லிக்கொள்ளத் தடை யென்ன ? இன்னொரு காரணமும் கூறுவோம்:—கிருக கிருத்தியங்களைச் செய் யும் உத்தமி சில காரணங்களால் அண்டைவீட்டு ஸ்திரீகளோடு பேசிக்கொண் டிருக்கும்போதே, "நான் சமையல் செய்யப் போகவேண்டும், வீட்டுக்காரர் வந்துவிடுவர்" என்று கூறுவாள். இதைப்போல் தத்துவ ஆராய்ச்சி செய்யும் மகானுபாவர்கள் லௌகிக காரியங்களைச் செய்யும்போதும் சிவோஹம் சிவோ ஹம் என்று சொல்லிக்கொள்வர். அவர்களுடைய பக்குவ திசையில் இங்ஙனம் சொல்லிக்கொள்வது நியாயமேயாகும். ஆதலின், மகான்கள் போற்றும் பரம மூர்த்தியை நாமும் அவர்களைப் போன்ற பக்குவமடைவதற்காகத் தியானித்து அவரது திருவருளைப் பெறக் கடவோம்.

***

"**ஈசனடி வணங்கு**" ஸதா மங்களத்தையே தரும்படியானது எதுவோ, அதை இன்னதென்றறிந்த பின் அதனிடமே நம்பிக்கை வைத்து அதையே சிந்தித்துக்கொண் டிருப்பதுதான் உண்மையான பக்தி. இதைவிட்டு மோக்ஷம் வெகு இலகுவாகக் கிடைக்கக் கூடியதென்றெண்ணி வாயால் மட்டும் பகவத் நாமங்களை வெறுமனே கூறுவது அத்தனை பிரயோஜனத்தை விளைக்காது. உள்ளன்புடன் பரப்பிரம்மத்தைத் தியானிப்பதுதான் சிறந்த பக்தி. ஆதலின் பரப்பிரம்ம ஸ்வரூபமாகிய பகவானை மனப்பூர்வமாய் ஸ்தோத்திரம் செய்யக் கடவோம்.

***

"**நல்லவனும் கெட்டவனும்**" ஆவது ஸகவாசத்தாலே தான். மனிதனை நல்வழிக்குக் கொண்டுவர மூன்று உபாயங்களுண்டு. (1) அவனுக்கு நல்வழி யைப் பின்பற்றுவதிலுள்ள பிரயோஜனத்தை எடுத்துரைப்பது. (2) தான் நல் வழியில் நடந்து காட்டுவது. (3) அநேகர் அவ்வழியை அநுஸரித்துக் கடைத் தேறினுர்களென்று கதை சொல்வது. இம்மூன்றினுலும் சிறு பிள்ளைகளின் மனதை ஸன்மார்க்கத்திற் றிருப்பலாம். அதிகாலையில் எழுந்திருப்பது ஆரோக் கிய விருத்தி யென்று போதிப்பதுடன் தானும் அந்தப்படி எழுந்திருக்கவேண் டும். அநேகர் பிராதக் காலத்தில் எழுந்து பரோபகாரமான காரியங்களைச் செய்து பிரக்யாதி யடைந்தார்களென்று கதைகளால் விளக்கிக் காட்டுவதும் முக்கியமானவை. இப்படி செய்யாமல் தீயவழியைக் காட்டுவது பிசகு. கெட்ட வழியென்ற ஒரு வழியைப்பற்றி சிறு பிள்ளைகள் தெரிந்துகொள்ளாம லிருப்பதே சிலாக்யம். உரோமன் பாதிரிகள் ஸ்திரீகளின் மத்தியில் வஸியாம லிருப்பதால் ஸ்திரீ சுகத்தையே மறந்தவர்களாகின்றனர். இதனுல் அவர்கள் கர்த்தருக்கு ஊழியம் செய்யவும், கிறிஸ்து மதத்தைப் போதிக்கவும், குடும்பக் கவலையின்றி ஸ்வாமியை ஸ்தோத்திரம் செய்யவும் அருகர்களாகின்றனர். ஸ்திரீ

---

சிலர் சிறு வியாதிக்கும் தங்களுக்கு அவர்கள் மிகவும் வேண்டியவர்களா யிருந்தால் பெரிய காபுரா செய்துவிடுகிறுர்கள். வேண்டாதவனுக இருந் தாலோ அவனுக்குக் காலரா கண்டாலுங்கூட அருகில் நெருங்குவதில்லை.

களின் மத்தியிலிருந்து அவர்களுடைய ஸகவாசத்தால் மனம் சலனமடையு மென்று அறிந்த பின்னர், அவர்களை விட்டு நீங்குவதிலும் ஆரம்பத்திலேயே விவாகமின்றித் துறவியாய் விடுவது எத்தனை மேன்மை. ஆதிசங்கரர் அவ் விதமே ஆனார். எவ்வளவுதான் மனதை யுறுதிப்படுத்தினாலும் 'பூர்வாசிரம நினைவு' போகிறதில்லை யன்றோ?

***

'ஹம்ஸ விம்சதி'' என்று கன்னட பாஷையில் ஒரு புஸ்தகம் இருக்கிறது. இதில் துராசாரம் செய்ய எத்தனித்த ஒரு ஸ்திரீக்கு புத்தி கற்பிக்குமாறு அவளுடைய பர்த்தாவினால் வளர்க்கப்பட்ட ஹம்சம் இருபது கதைகளைச் சொல்லி அவளைத் தடுத்துக் கடைசி நாள் அம்மாதை யாத்திரை போய் வந்த கணவனிடம் ஒப்பித்தது. ஸ்திரீ புருஷர்கள் பரஸ்பரம் விட்டுப் பிரிந்து தனியே இருந்தால் அவர்களுடைய சித்தம் சலனமடையுமென்றும், அக்காலத்தில் யோக்யர்களின் ஸகவாஸமும் நல்லுரையும் வேண்டுமென்றும் வியக்தமாகிறது. ஆகவே, நாம் ஸாதுக்களோடு ஸகவாஸம் சேய்யவேண்டும். இல்லையேல் நல்ல புஸ்தகங்களையேனும் படித்துக்கொண்டிருக்க வேண்டும்.

***

"சந்தேகமாம் பேபே'' என்று ஒரு ஆசிரியர் சந்தேகத்தைப் பேய்க்குச் சமமாகச் சொல்லியிருக்கிறார். ஆசார சீலர்களிடத்து அத்யந்த பிரீதிகொண்ட ஒரு பிரபுவைத் தரிசிக்க இரு வைதீக பிராமணர்கள் சென்றனர். இதற்காக அவர்கள் காவிரி நதியில் ஸ்நானம் செய்து புறப்பட்டனர். ஒரு வைதீகர் தாம் ஸ்நானம் செய்து புறப்பட்டதும் வழியில் ஒரு பழய கந்தல் துணியைக் கண்டு தான் அதை மிதித்திருக்கலாமென்று மறுபடியும் நீராடித் திரும்பினார். எதிரில் ஒரு பஞ்சமன் வர, அவன் மீது தான் பட்டிருக்கலாமோ வென்று மறுபடியும் நீராடினார். இந்தத் தாமதத்தில் பிரபுவைத் தரிசிக்க முடியாமற் போயிற்று. மற்றொரு வைதீகர் மட்டும் நன்றாக ஸ்நானம் செய்து வீண் சந்தேகம் கொள்ளாமல் உடனே பிரபுவினிடம் சென்று அவருடைய தயைக்குப் பாத்திரரானார். இதைப்போல் தான் உண்மையில் பகவத் கருணைக்கு உரியவனாயிருக்கும்போது, மூட புத்தியால் தான் பகவானுக்கு வெகு தூரத்தி லிருப்பதாய் எண்ணும் மனிதன் பலமுறை ஸ்நானம் செய்த வைதீகனைப் போல் பல ஜன்மங்களை எடுக்க வேண்டியதுதான். பழய கந்தலைத் தீண்டினோமோ, பஞ்சமனைத் தொட்டோமோ வென்று ஐயமுற்ற விப்பிரனுக்கு அடிக்கடி ஸ்நானம் செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்ட உண்மை போல், ''நான் பாபி, எனக்குப் பகவானின் கருணை ஏது?'' என்று ஸ்மரணை செய்யும் ஜீவனுக்குக் கோடான கோடி ஜன்மங்களுண்டாவது நிச்சயம். ஆகவின், தான் சுத்தன், தான் முக்தன், பகவத் கருணைக்குப் பாத்திரன் என்று திடமாய் நம்பும் நிச்சய ஞானத்தை யடைய ஒவ்வொருவரும் முயற்சி செய்யவேண்டும். இதற்காகப் பெரியோர்கள் யோகப்யாஸம் செய்து ஞான மார்க்கத்தை யனுஸரிக்கிறார்கள். இவர்களுடைய வழியை நாம் பற்றிக்கொள்வது க்ஷேமகரம்.

---

எந்த சங்கதியிலுமே அதைச் செய்துகொண்டிருக்கும் நடுவிலே அதை விட்டுவிட்டு எழுந்திருக்க எவருக்கும் மனம் ஒப்பாது. காரியமான பிறகே முடிவில் தான் சாந்தமாய் எழுந்திருப்பர். போஜன மத்தியில் அதை விட்டு எழுந்திருக்க மனம் சம்மதிக்குமோ? இவ்விதமே ஒவ்வொன்றிலும்.

**"தூங்கு கையில் அகப்பட்ட பூமாலை"** யைப் போல, நமது கையிற் சிக்கிய நமது வாழ்நாளை நலங்குலையச் செய்வது நியாயமா? ஒரு வேலையும் செய்யத் தோன்றாதவர்கள் புற்களைப் பிடுங்கிப் பசுக்களுக்குப் போடலாம். தேவாலயங்களிற் சென்று திருப்பணிகள் செய்யலாம். இதில் மனம் ஒருமித்திருக்கும். இவ்விதம் மனம் ஒன்றுபடும் பழக்கம் முற்றினால் பிறகு அது நன்மையைச் செய்யும். இப்படி எந்தக் கருமங்களில் மனம் ஈடுபட்டிருக்குமோ, எந்தக் கருமங்களால் திருப்தி யுண்டாகுமோ அவற்றைச் செய்துவரின் நாளடைவில் நல்ல தேர்ச்சி யுண்டாகும். எந்தக் காரியத்தைச் செய்து முடித்த தக்ஷணம் குற்றமில்லாத ஸந்தோஷ முண்டாகிறதோ அது புண்ய கர்மம். எதைச் செய்தவுடன் பயமும் துக்கமும் ஸம்பவிக்கின்றனவோ அது பாப கர்மம். பசியினால் வருந்தும் ஒரு ஏழைக்கு அன்னமிட்டவுடன் நமது மனம் திருப்தியை அடைகிறது. ஒருவன் செய்த குற்றத்தை மன்னித்து அவனைத் தண்டியாமல் புத்தி சொல்லி யனுப்பிய தக்ஷணம் நமக்கு ஆநந்த முண்டாகிறது. எஜமான் இட்ட வேலையை அழகு பெறச் செய்தவுடன் ஸந்தோஷ முதிக்கிறது. இவையெல்லாம் ஸத்கருமங்களே. எவ்விதத்திலேனும் மனதை இவ்வாறான நல் விஷயங்களில் பிரவர்த்திக்கும்படி செய்து நாம் பரிசுத்தர்களாவது நன்மை. அப்பொழுது நம் வாழ்நாட்களைப் பயனுள்ள விஷயத்தில் உபயோகப்படுத்தினவர்களாவோம்.

***

**"விரக்தி மார்க்கம் வேத சிலாக்கியம்"** ஒரு பொருளிலும் ஆசை வையாதிருத்தலே விரக்தியாகும். ஆசையில்லாவிட்டால் அலைச்சலில்லை. நாடகம் பார்க்கவேண்டுமென்ற ஆசை யில்லாதவர்களுக்கு அதைப் பார்க்கவில்லையே என்ற ஏக்கம் ஜனிக்காது. கிச்சிலிப் பழத்தைத் தின்ன இஷ்டமில்லாதோர் அது கிடைக்கவில்லையே யென்று வியஸனப்படார். இப்படியே ஒவ்வொரு வஸ்துவும் தனக்கு வேண்டாம் வேண்டாமென்று தள்ளியவர்களே துறவிகளாவர்.

***

**"அகங்காரத்தின் குணம் அத்யத்புதம்"** ஒவ்வொருவனும் பிறருடைய அகங்காரத்தைக் கண்டு வெறுப்படைகிறான். தன்னிடம் அக்குணம் உண்டென்பதை யறிந்தும் வியஸனப்படுவதில்லை. ஊராரின் உள்ளத்தில் அகங்காரம் குடியிருக்க ஸம்மதியாத நாம் நம்முடைய உள்ளத்தில் அதைக் குடிவைத்துக்கொண்டிருப்பது எத்தனை ஆச்சர்யம்! அகங்கார மென்னும் குணம் நம்மையே நல்வழியினின்றும் மாற்றிவிடுகிறது.

***

**"எல்லாம் எனையாளும் ஈசன் செயல்"** சிற்பி ஒரு சிலையைச் செய்ய வேண்டிக் கல்லைச் செதுக்குகிறான். ஒவ்வொரு செதுக்கிலும் ஒவ்வொரு அங்கம் ஹீனமடைவது போல் காணப்படுகிறது. கடைசியில் சிலை வெகு ஸொகுஸாய் முடிகிறது. அதைக் கண்டு ஆயிரக் கணக்கான ஜனங்கள் அகமகிழ்கின்றனர். அதுபோல் பகவானாகிய சிற்பி நமக்கு நற் பெயரை யுண்டாக்குமாறு

---

பெரிய மனிதன் வாய்திறந்து கேட்கிறாரே யென்று கடன் கொடுத்தால், அவர் தான் கடன் வாங்கியதையே மறந்துபோய்விடுகிறார். கேட்கவும் முடிகிறதில்லை. மூடத்தனமாய் இழந்த பணத்திற்காக ஆத்திரமும் வருகிறது!

இடையிடையே துக்கங்களைக் கொடுத்துக்கொண்டிருக்கிறார். முடிவில் அவருடைய கருணை தெரியும். எல்லாவித துன்பங்களையும் ஈசன் செயல் என்று ஸஹித்து நமது கடமையைக் குறைவின்றிச் செய்து முடித்தால் நல்ல பக்குவிகளாவோ மென்பதில் ஸந்தேக மில்லை. ஆகவே, மத்தியிலுண்டாகும் விபத்துக்களைப்பற்றி வியஸனமடைந்து மனோ தைர்யத்தை இழக்கலாகா தென்றேற்படுகிறது.

***

"**ஆக்கல், காத்தல், அழித்தல்**" என்கின்ற குன்றாத முத்தொழிலை யுடையவரும், விண்ணுலகத்தாருக்கும் மண்ணுலகிலுள்ளவர்களுக்கும் மன்னாதி மன்னரும், நீதி வழுவாத செங்கோலை யுடையவரும், யாதொரு குற்றமு மில்லாதவருமாகிய கடவுள், ஸதா காலமும் தமது வாசஸ்தலமாக உன்னைத் தெரிந்துகொண்டு உன் ஹிருதய கமலத்தில் வசிக்கும்படியான மேன்மையை நெஞ்சமே நீ பெற்றிருந்தும், இவ்வளவு கிருபை யுடையவரை நீ நாடாமலும், அவரிடம் அன்பு (பக்தி) பாராட்டாமலும், நாக்குத் தழும்புபட வாழ்த்தித் தினந்தோறும் அவருடைய புகழைப் பாடாமலும், அவரை நினைந்துருகாமலும், பரவச மேலிட்டு மிகுதியாக ஆநந்தக் கூத்தாடாமலும், அக்கடவுளைக் கொண்டாடாமலும் இருந்தால் நெஞ்சமே நமக்கு உதவி செய்பவர்கள் வேறே யார் சொல்வாய்? இனியேனும் தெளிவு பெற்று அவரைத் துதித்து உய்யக் கடவாய். இக்கருத்தைப் பின்வரும் பாடலில் காண்க:—

"வீடாத முத்தொழிலோன் விண்ணவர்கோன் மண்ணவர்கோன்
கோடாத செங்கோலான் குற்றமில்லா னித்தமுனை
வீடாகக் கொண்டுறையு மேன்மையுற்று மிவ்வருளை
நாடா யளிநீடாய் நாத்தழும்பப் போற்றிநிதம்
பாடாயுருகாய் பரவசமீக் கூர்ந்துநனி
யாடாய்கொண் டாடாய்வே றாருதவி சொன்மனமே."

---

## தாடி வளர்த்தலின் குணங்கள்.

உள்நாக்கு வளர்ந்து இருமலில் அவஸ்தைப்படுகிறவர்கள் தாடி வளர்ப்பார்களானால் தொந்திரவு நின்றுவிடுகிறது. கண்டத்தில் குளிர்காற்றுப்பட உள் நாக்கு வளருகிறது. தாடியின் மயிரால் கண்டம் கம்பிளி சுற்றினாற்போல் காப்பாற்றப்படுகிறபடியால் உள்நாக்கு வளர்வதில்லை. இந்தக் கஷ்டம் அனுபவிக்கிறவாகள் தாடி வளர்த்துப் பார்க்கலாம். தாடி சிகிச்சை பெண்களுக்கு உதவுமா?

அன்னிய ஸ்திரீ புருஷர்களுக்குள் ஏற்படும் அண்ணன் தங்கை என்ற உறவின் முறைகள் பகற் காலத்திற்குப் பிறகு வெகுவாய் நீடித்து நிற்பதில்லை. அவர்கள் விரைவில் எவ்விதமோ காதலன் காதலிகளாகி விடுகிறார்களாம்.

அமிர்தகுணபோதினி

சுக்கிலஞூ ஆடிமீ 1உ

# அபிமானம் மற்ருென்றில் தாவுதல்.

ஆழ்ந்த அபிமானம் ஓர் அரிய வரம். அது ஒரு பெரும் நிதி. ஆசை ஊன்றியதின் வழியே அபிமானமும்சேர்ந்துவிர்த்தி கொள்கின்றது. அபிமானம் என்பதற்கு 'ஒன்றைத் தன்னுடையதாக நினைத்தல்' என்றும், 'விரும்புதல்' என்றும், 'உருக்கம்' என்றும் பொருள்படும். முதன்முதலாக அது குறிப்பிட்ட ஒன்றினிடத்தே தோன்றி அதைப் பற்றிக்கொண்டு வளர்கின்றது. அதே நிலையில் அந்த அபிமானம் கலங்காமலும், மாறுபடாமலும், விட்டுப் போகாமலும் எஞ்ஞான்றும் தொடர்ந்து விசாலிக்குமாயின் சாலச் சிறந்ததாம். சோதனை ஞாலத்தில் அந்தப் பாக்கியம் அபூர்வமே. எவ்விதமாகவோ மனிதனோ மனுஷியோ ஏமாறிப்போய், தங்கள்மீது அதுவரையும் மற்றவர் கொண்டிருந்த அபிமானத்தைத் தாங்கள் எதிர்பாராத பிறர்மீது மாற்றிக்கொண்டுவிடும்படியாய் இடம் கொடுத்துவிடுகின்றனர். காலகதியும் அவ்வாறு நேரவைக்கின்றது. தன் மக்களிடத்து ஒருவன் பாராட்டியிருந்த அபிமானம் அவர்களின் தாய் தவறிவிடும்போது கெட்டுவிடுகிறது. புதிதாய் வந்த இளையாளுக்கு உதித்த மக்களிடத்து அந்த அபிமானம் தாவிவிடுகிறது. அது முதற்கொண்டு மூத்த மனைவியின் குழந்தைகள் புசித்தார்களாவென்று கூடக் கவலைப்படுவதில்லை.

மனைவிமீதிருந்த அபிமானம் மற்றொரு அன்னிய ரமணியிடத்துத் தாவிவிடுங்காலை மனைவி அலக்ஷியம் செய்யப்பட்டுவிடுகிருள். சிறு பருவத்தில் பதியை யிழந்த தனது தங்கையை ஒரு தமயன் தனதுசொந்தக் குழந்தையாக எண்ணி, உயிருக்குயிராகப்பாராட்டி, முதலில் தன் தங்கை புசித்தாளா வென்பதை விசாரித்துவிட்டு அதன் பின்பு தான் உண்ணுகிருன். அந்தத் தங்கையும் அத்தமயனைத் தெய்வமாகக் கருதிப் போற்றுகிருள். இவ்வாருன உத்தம

---

கலகப்பிரியர்களான சிலர் தங்கள்மீது மற்றவர்கொண்ட துவேஷத்தை நம்மீதும் அவர்கள் துவேஷப்பட்டதாக மாற்றிச்சொல்லி நமது விஸ்வாச மனத்தைக் கெடுக்கப் பார்க்கின்றனர். இதில் ஏமாறிவிடக்கூடாது.

அபிமானம் பின்னுக்கு ஸர்வநாசமாய் விடுவது என்ன பரிதாபம்! அத்தங்கை தன் தமயனிடத்துக் கொண்டிருந்த அபிமானம் கள்ளக் காதலனை ஒரு பந்துவினிடம் தாவிப்போய்விடுகின்றது. உடனே ஏதாகினும் சண்டை சச்சரவிட்டுக்கொண்டு தனது அன்பான தமயனைப் பிரிந்து அந்தப் பந்துவுடன் வேறு குடித்தனமாகிவிடுகிருள். இவ்விதமே, ஒருவன் தன் விவாகத்திற்குமுன் தன் ஸகோதரிகளிடம் கொண்டிருந்த அபிமானத்தைத் தனக்கு மனைவி வந்ததும் அவள்மீது தாவவிட்டு ஸகோதரிகளை மறந்துவிடுகிருன். அண்ணாவின் உறவு அண்ணியார் வரும் வரையில்தான் என்றாகிவிடுகிறது.

ஸகோதர அபிமானமும் அவரவர்களுக்கு மனைவி வந்தபின் அங்கு தாவிவிடுவதால் முன்போல் சகோதரர்கள் ஒருமித்து அன்பாயிருக்குங் காட்சி மாறிவிடுகிறது. ஒருவரை யொருவர் வஞ்சித்துப் பொருள் திரட்ட முயல்கிருர்கள்; ஜென்மவிரோதிகளும் ஆகிருர்கள். தன் மனைவியைச் சேர்ந்தோர்களென்று ஒருவன் கொள்ளும் அபிமானம் அந்த மனைவி மரித்து வேருெரு நங்கை இல்லாளாய் அமையுங்காலை அவளைச் சேர்ந்தோரின்மீது தாவி முன்னவர்களை மறக்கச் செய்து விடுகிறது. தன் மூத்தாளது பெண்ணின் கணவனைய் இருந்தபோது அவனை வெறுத்த இளைய மாமி, பிற்காலத்தில் அம்மூத்தாளின் பெண் மரித்து, தன் குமார்த்திக்கே அவன் கணவனைய்விடும்போது அவனை இராஜோபசாரத்துடன் நடத்துகிருள். இது தன் குமார்த்தியின் மீதிருந்த அபிமானத்தை மருமகனின்மீதும் தாவவிடுகிற வகையில் நேரும் மாறுதலாகும். இந்த அபிமானத்தை அவன் மூத்தாளது பெண்ணின் கணவனைய் இருந்தபோது காட்டவில்லை. சந்ததியில்லாமல் ஸ்வீகாரம் செய்து கொண்டவன் பிறகு தனக்கு மக்கள் உண்டாகிவிடும்போது, ஸ்வீகார புத்திரனிடம் கொண்டிருந்த அபிமானத்தைத் தன் மக்கள்மீது தாவ விட்டு, அது முதல் ஸ்வீகார புத்திரனை வஞ்சிக்கத் தலைப் படுகிருன்.

ஏராளமான ஐச்வரியங்கள் படைத்த ஒருவன் அதைக் குறித்த இரண்டொருவருக்குப் பங்கிட நினைத்து மிக்க அபிமானத்துடன் இருக்கையில், பிறகு மற்றவர் போதனையால் புத்திமாறி அவர்களிடம் கொண்ட அபிமானத்தை வேறு புதியவர்களின்மீது தாவவிட்டு ஸகல சொத்துக்களையும் அப்புதியவர்கட்கு எழுதி வைத்துவிடுகிருன். தன் ஸகோதரனின் குமாரனிடத்து அபிமானம் கொண்ட தங்கை அவனுக்கே தன் பெண்ணையும் தனது ஸம்பத்துகளையும்

---

ஹா! காசே! கையைவிட்டுப் போகிருயே என்று முணு முணுத்துக் கொண்டுசெலவிடுவதில், அந்த முணுமுணுப்பு வெளிக்குத் தெரிந்து போய், மடமட வென்று செய்த செலவுக்கும் பேரில்லாமற் போகிறது.

கொடுத்துவிட நினைத்திருக்கையில், பிறரது போதிப்பால் மனம் மாறி அந்த அபிமானத்தை வேறொருவரிடம் தாவவிட்டு, அவரது குமாரனுக்குத் தன் புத்திரியையும் செல்வராசிகளையும் தந்து விடுகிறாள். தன் குமாரத்தியையும் ஸகல பாக்கியங்களையும் தனக்குக் கொடுத்த தாய்மாமனிடம் வைத்துள்ள அபிமானத்தை, அவர் புத்திரியாகிய தன் மனைவி இறந்து புதிதாய் மணந்த மனைவியிடம் தாவவிடுவதில், அதுமுதற்கொண்டு தாய்மாமனை முற்றிலும் மறந்து விடுகிறான். புதிய மனைவியின் பந்துக்களே தாய்மாமனைவிட நெருங்கிய சுற்றமென்று எண்ணத் தலைப்படுகிறான்.

எளிய நிலையில் ஆப்த மித்திரர்களாயிருந்தோரில் ஒருவனுக்குப் பதவி உயர்ந்துவிடும்போது, தன் ஏழை நண்பனிடத்திருந்த அபிமானத்தைத் தன்னையொத்த உயர்ந்த அந்தஸ்தில் இருக்கும் ஸ்நேக ஸமூகங்களின் மீது தாவவிடுவதில் அந்தப் பழய நேசனை மறந்துவிடுகிறான். தான் மோட்டாரில் செல்லும்போது அந்தப் பழய நண்பன் பாதசாரியாய் நடந்து போவதைக் கண்டாலும், அவனைத் தன்னுடன் ஏற்றிக்கொள்வது தனது புது கௌரவத்திற்குக் குறைவென்று கருதிவிடுகிறான். ஓரிடத்தில் வைத்த அபிமானத்தை மற்றோரிடம் தாவவிடுவதில், அந்த அபிமானத்தை யிழந்தோரின் கண்ணீர் அளவிடப்போமோ? இங்ஙனம் கைவிடப்பட்டோரைக் காக்க ஈசன் ஒருவனுண்டு என்பதையும் மறக்கக்கூடாது. இவ்வாறு கைவிட்டு விலகினோர் எத்துணைக் காலம் தமது ஓங்கிய பிரதாப வாழ்வில் இருந்தனரென்பதுவும் ஒரு சோதனையான கேள்விதான்.

இவ்விதமே, தனது சொந்த மதத்தின்மீது ஒருவன் வைக்கும் அபிமானத்தைக் குறித்தும் இங்கு சில விஷயங்களைக் குறிப்பிடலாம். அந்த அபிமானம் தன் மதத்தின்மீதும், மதாநுசாரமான ஸம்பிரதாயங்களின்மீதும் ஆழமாகப் பதிந்திருக்கையில், வைதீகக் கட்டுப்பாட்டிற்குள்ளடங்கி நோன்பு விரதாதிகளைப் பக்திபூர்வமாய் நிறைவேற்றிப் பரிசுத்தனாய் விளங்குகிறான். இவ்வித உத்தமமான அபிமானத்தைப் பிந்தியநாளில் நாஸ்திகத்தின்மீது தாவ விட்டுவிடுவதில், அதுமுதற்கொண்டு தனது மதத்தின்மீது சந்தேகம் கொண்டவனாகி, தனது முன்னோர்களைப் பழித்து, ஸதா குற்றமே காண்பவனாய், நோன்பு விரதாதிகளை மூடபக்தியென ஒதுக்கி, வேத சாஸ்திர புராணங்கள் அனைத்தையும் கட்டுக்கதை யென்று கூறுதற்கு முற்பட்டுக் கொள்கின்றான். இதன் முடிவென்ன? அவனது மனைவி மக்களும் அவனைப்போலவே நாஸ்திகராய் தெய்வ நம்பிக்கையற்று

---

சில உபாத்தியாயர்கள் தாங்கள் பள்ளிக்கூடத்தில் குழந்தைகளுக்குக் கற்பித்துக் கொடுப்பதொன்றைத் தவிர, வேறு எந்த விஷயங்களிலும் அறிவு வளரப் பெறாதவர்களாய்ப் பெரிய மௌட்டியத்தில் மதிமயங்கி நிற்கிறார்கள்!

சொந்த மதத்தை அபிமானிக்கத் தவறிப்போகின்றனர். அதைப் பழிப்பதே நித்திய காலக்ஷேபமாகிறது. இதன் பயனாக, இவர்களின் குமாரன் தனது முன்னோர்களது மதத்தை இகழ்ந்துவிட்டு அன்னிய மதத்தில் பிரவேசித்து விடுகிறான். அப்போதுதான் தங்கள் குமாரனை உயிருடன் இழந்தோமே, அவன் வேறு மதம் மாறி வேற்று மனுஷ்யனாகிவிட்டானே யென்று இந்த நாஸ்திகத் தாய் தந்தையர்களின் நெஞ்சு குத்தித் துளைக்கின்றது! ஏக புத்திரனைக் கொண்டிருப்போர் அவனை இவ்விதம் இழக்கநேரில் அது இன்னும் அதிக பயங்கரமாகும். அவனுக்கு விவாகமாகி மனைவி மக்களும் இருந்து, அவர்கள் அனைவரையும் விட்டுவிட்டு அன்னிய மதம் பிரவேசிக்க நேர்ந்திருக்குமாயின் அது எல்லாவற்றிலும் பெரிய அனர்த்தமாகும்.

இவ்வளவுடன் போயிற்றா? தனது மதத்தையும் பூர்வ ஸம்பிரதாயங்களையும் பழித்தவனது மனைவி, ஒரு கணவனுடனேயே வாழ்க்கை புரிதல்தான் கற்பு என்பது ஒரு மூட நம்பிக்கையென்றும், மதத்தின்பேரால் தொடர்ந்துவந்த குருட்டு வழக்கங்களில் அது ஒன்றென்றும், பலபல எண்ணத் தொடங்கி விடுகிறாள். இதிலிருந்தும் குடும்பத்தின் ஒரு உத்தம ஒழுங்கே கெட்டுவிடுகின்றது. தன் மதத்தை ஸதா பழித்துவந்ததின் விளைவு இது. தன் மதநம்பிக்கையின் மீதிருந்த ஆஸ்திக அபிமானம் அதில் தவறு காணும் நாஸ்திகத்தின் மீது தாவியதின் தீங்கு இது. தன் மதப்பற்றுடனுள்ள ஆஸ்திக சிந்தையொன்று தான் இல்வாழ்க்கையை இனிதாக வளர்க்க வல்லது. அதற்கு எதிரிடையாகிய நாஸ்திக சுபாவமான தன் மதப் பற்றொழிந்த நிலையோ குடித்தனத்தைக் குலைத்து உத்தம நெறிகள் யாவற்றையும் கொலை செய்துவிடுங் கோரமுள்ளது. மதத்தின் கட்டுப்பாடு நிலைதளர்ந்தால் குடும்பத்தின் கட்டுப்பாடும், குவலயத்தின் கட்டுப்பாடும் உடனே சிதறிவிடும்.

* *
*

பொல்லாங்கான பேதபுத்தியுடன் தனது அபிமானத்தை மற்றொன்றில் தாவவிடுதலிலுள்ள தீயவிளைவுகள் இங்ஙனமாக, இனி அந்த அபிமானத்தின் தாவுதலை நற்சிந்தையுடனேயே பிரயோகிப்பதிலுள்ள நலங்களையும் ஒரு சிறிது ஆராய்வோம். ஒரு உத்தமியான மாற்றாந்தாய் தனக்கு மூன்று நான்கு பெண் குழந்தைகளிருக்க, அவர்களின் விவாகத்துக்கு மிகுத்து வைக்கவேண்டுமென்ற சிந்தையின்றி, இருப்பதையெல்லாம் தனது மூத்தாளின் பெண்ணினது விவாகத்திற்குச் செலவிட்டு, சீர்வரிசைகளைத் தாராளமாய் உதவி, எவ்வாறேனும் அந்தப் பெண் சுகமாயிருந்தால் போதுமென்று

---

ஒருவரின் மனம் வேதனையிலிருக்கும்போது அதனை யுணராது அவரிடத்தில் சந்தோஷமாய்ப் பேசி ஆநந்தமடையலாமென்று வருகிறார்கள் சிலர்.

நினைக்கிறாள். தன் மக்களிடத்து வைக்கவேண்டிய அபிமானத்தைத் தனக்கு முன் இருந்தவளது பெண்ணின்மீது தாவவிட்டு விடுகிறாள். இதில் தன் சொந்த மக்களை வஞ்சித்தாளென்று உலகம் குறை பேசுமோ? அவளது உயரிய குணசீலங்களையே கொண்டாடும். தன் வேலையாளிடம் ஒரு எஜமானன் கொள்ளும் அபிமானத்தை அவன் குடும்பத்தின்மீதும் தாவவிடுவதில், அவனது குடும்பம் நன்றாய் வாழ வேண்டுமென்று வேலையாளின் சம்பளத்தை உயர்த்திவிடுகிறான். இதை எஜமானனுக்கு நஷ்டமாக எவரேனும் சொல்வரோ? தன் நாவின் ருசியினிடத்துத் தனக்குள்ள அபிமானத்தை வீட்டினர் யாவரும் திருப்தியாய் உண்ணவேண்டுமென்ற நினைவில் தாவவிடுவதில், தனக்கென்று உண்பதற்கு ஏதுவுமே இல்லாமல் சமைத்த பாத்திரங்களைக் காலி செய்துவிடுகிறாள். அவளை ஏமாறியவளென்று எவரேனும் பழிப்பரோ? அவளது நற்குணத்தையே பாராட்டுவர். தன் குடும்ப க்ஷேமத்தின்மீது தனக்குள்ள அபிமானத்தை தனக்கு வேண்டியவர்களது குடும்பங்களின் மீது தாவவிட்டுத் தன் வகையில் சற்று சிரத்தை குறைந்துவிடுவதில் எவரும் அதிற் பிழை காணார். தன் உயிரினிடத்துள்ள அபிமானத்தை மற்றொருவரது உயிரைக் காக்கும்பொருட்டுத் தாவவிடுவதிலும் அது மேன்மையான குணத்தையே பிறப்பிக்கும்.

இங்ஙனமே, உத்தம நோக்குடன் மிகப் பழயனவாயுள்ள சிலவற்றைக் கழித்துப் புதியன புகுத்துவதில், அதுவும் பாராட்டப் படவே செய்யும். நன்னூல் இலக்கணத்தைச் செய்த பவணந்தி முனிவர் பூர்வ இலக்கணத்தை அப்படியே வைத்துக்கொண்டு அதில் புதுத் திருத்தங்கள் மட்டும் புகவிட்டு, **"பழயன கழிதலும் புதியன புகுதலும் வழுவல—காலவகையினானே"** என்று கூறி முடித்தார். அத்திருத்தங்களை ஆக்ஷேபிப்பாருண்டோ? இல்லை. அவ்வாறாகவே, ஆஸ்திகத்தின்மீதும், பூர்வ மதானுசார அனுஷ்டானங்களின்மீதும் கொண்டுள்ள அபிமானத்தை **அதில்தானே திடசித்தத்துடன் ஊன்றவைத்துக்கொண்டு,** அதனில் காலத்திற்கு அவசியமான திருத்தங்களைமட்டும் உத்தம திருஷ்டியுடனே செய்ய விரும்புவதில் அந்த அபிமானத்தைத் தாவவிட்டால் அது பிழையாகாது. அதனைக் குற்றங்காணுந் தன்மையதாகவும் கொள்ளார். ஆஸ்திக சம்மந்தமாயுள்ள மூலகிரந்தங்களைச் சோதித்துத் தற்கால நிலைமைகளுக்கேற்ப உத்தம திருஷ்டியுடன் திருத்தங்கள் செய்வதில் தோஷம் ஸம்பவியாது. இவ்விதமாய்ப் புதுத் திருத்தங்கள் செய்வதற்கு முன்னதாகவே அந்தத் திருத்தங்களுக்கான ஸம்பவங்களும்

---

ஒன்றில் பழகி இன்புற்ற மனம் பின்னால் அது தீதென்று எத்தனை தான் அறிவு பெறினும், அந்த அறிவு ஒருபுறம் குப்பைத் தொட்டியில் கிடக்க, பழகிய பழய தூர்ச்செயல் மற்றொருபுறம் நிகழ்கின்றது.

அனுஷ்டானங்களும் தாமாகவே வழக்கத்தில் பலராலும் தழுவப் பட்டுள்ள நிலையில் வந்துவிடக்கூடும். உதாரணமாக, முன்பு ஸமுத் திர யாத்திரை ஜாதிப்பிரஷ்டத்திற் கேதுவானதென்று சொல்லப் பட்டுத் தற்போது அது ஸாதாரணமாய்விட்டதையும், இன்னும் அதுபோன்ற சிலவற்றையும் குறிப்பிடலாம். இப்பொழுது ஸமுத் திரயாத்திரையைக் குற்றமில்லையென்று திருத்தினால் அதனை எதிர்ப் போர் அரிதாகவே இருப்பர். காலசக்கரத்தின் வேகத்தால் உதவாத பழயன சில தாமே கழிந்து போகுமென்பது நிச்சயம்.

தர்ம சாஸ்திரத்தைத் திருத்துவதில் ஆக்ஷேபிப்போர் ஆழ்ந்த மதப்பற்றுதலாலேயே அங்ஙனம் எதிர்க்கிறார்கள். பூர்வகாலத்தில் பல அநுஷ்டானங்கள் இருந்துவந்து, பிறகு அவை இனி வருங்கா லத்திற்குத் தேவையில்லையெனக் "கலிவர்ஜிதம்" என்று, அதாவது கலிகாலத்தில் இந்த அநுஷ்டானங்கள் நலம் விளைவிக்காவென்று ஒதுக்கித் திருத்திய முன்னோர்களின் புது மாற்றங்களை இந்த ஆக்ஷேபகர்களுக்குத் தெளிவாக எடுத்து விளக்கி, அந்தக் காலத்தில் செய்யப்பட்ட திருத்தங்கள்போலவே, இக்காலத்திலும் முக்கிய மான சில திருத்தங்களை நன்னோக்குடனும் செய்யலாமென்று சமா தானப்படுத்தலாம். அவர்களும் காலத்தையொட்டி நாளடைவில் ஒப்புக்கொள்ளவேண்டியே வந்துவிடும். ஆனால், ஆஸ்திகத்தின் அஸ்திவாரத்தையே பெயர்த்துவிடும்படி புதுத் திருத்தங்கள் எதையும் செய்யக்கூடாது. அபிமானத்துடன் செய்யப்படும் திருத்தங்கள் எப்பொழுதுமே ஏற்றுக்கொள்ளப்படக்கூடும். இதனை நன்மைக்கான வற்றில் செலுத்தும் அபிமானத்தின் தாவுதல் என்றும் சொல்லலாம்.

புனாவில் 22-5-29-ல் கூடிய தர்ம சாஸ்திர ஆராய்ச்சித் திருத்த மகாநாட்டில் ஸ்ரீமான் நரசிம்ம சிந்தாமணி கேல்கர்—"மூலகிரந்தங்க ளைச் சோதனைசெய்து தற்கால நிலைமைகளுக்கு ஏற்பத் திருத்தங் கள் செய்யவேண்டியது அவசியந்தான்"—என்று பேசினார். அவர் கூறியதாவது:—

> "அநுஷ்டானத்தைச் சிரேஷ்டமாகப் பாவிப்பது ஹிந்துதர்ம சாஸ் திரத்தின் முக்கியமான கொள்கை. அந்தந்தக் கால அநுஷ்டா னங்களையே சாஸ்திரங்கள் தொகுத்துக் கூறியிருப்பதாக அவை கொண்டாடப்படுகின்றன. ஆயினும், ஒவ்வொரு தலைமுறைக் கும் ஒரு தர்ம சாஸ்திரம் எழுதப்படவேண்டுமென்பது சரியல்ல. ஆயிரக்கணக்கான வருஷங்களுக்குமுன் எழுதப்பெற்ற தர்ம சாஸ் திரம் எக்காலத்திற்கும் பிரயோகமாகுமென்று எதிர்பார்ப்பதும் சரியல்ல. ஆனால், மேனாட்டு நாகரீகத்தில் ஈடுபட்டவர்கள் அந்த ஜாதியினருடைய அனுஷ்டானங்களை அனுசரித்து நமது வாழ் வைத் திருத்த முற்படுவது விபரீத பலனையே தரும்."

என்றார். இவருடைய அபிப்பிராயத்தில், பூர்வ தர்ம சாஸ்திரத்தினிடத்து அபிமானம் பூர்த்தியாகவே இருக்கவேண்டுமென்றும், அந்த அபிமானத்தை நற்சிந்தையுடன் திருத்துவதிலே தாவவிடுதல் குற்றமாகாது என்றும் கொண்டு பேசியிருக்கிறார். இவ்விதமாக, அபிமானத்தை உத்தம கருத்துடன் தாவவிடுதலில் அது ஹிருதயத்தை மாசுபடுத்தாததுடன் என்றும் ஹிதத்தையே விளைக்கும். இதில் துவேஷ நோக்குடன் குற்றம் காணும் தீயதன்மை கலக்கப்படவில்லை. மதம், ஜனஸமூகம் இவ்விரண்டின் நலங்களையும் நாடுகின்ற உத்தம லக்ஷியமே இங்கு பிரகாஸிக்கின்றது. ஆகவே, எவர் சித்தமும் இந்த நன்னோக்குடனுள்ள அபிமான திருத்தங்களால் கெடுதற்கு இடனில்லை. மதமும் கெடுவதில்லை; ஆஸ்திக பக்தியும் ஆசார சீலங்களும் தாழ்ந்துவிடுவதில்லை.

அபிமானத்தை மற்றொன்றில் தாவவிடுவதில் நற்சிந்தையே குடிகொண்டிருப்பின் அங்கு நலமே பயக்கின்றது. அவ்வாறில்லாது, தனது பூர்வ அபிமானத்தை மற்றொன்றில் தாவவிட்டு, தான் முன்பு அபிமானித்திருந்ததைத் துவேஷித்து வெறுக்கும்போது, இந்தத்—"தாவவிடுகிற அபிமானமானது"—கனத்த பொல்லாங்கையும், எண்ணற்கரிய பிரிவினை முதலிய கேடுபாடுகளையும் விளைத்துவிடுகின்றது; மஹா அபாயகரமான வஞ்சனைமோசக் கோலைக் கருவியாகவும் மாறிவிடுகின்றது.

ஆதலின், அபிமானத்தை ஆதியில் கொண்ட இடத்திலேயே என்றும் நிலைக்கவைத்தல் நலமாம். அபிமானத்தைத் தாவவிடாதிருப்பதே சிரேஷ்டம். ஒருக்கால் அந்த அபிமானத்தைத் தாவவிட நேரின், நற்சிந்தையுடனும் உத்தமதிருஷ்டியுடனும் மனம் மாசுபடாத வழியில் சென்றிடுக. தீய சிந்தையை எஞ்ஞான்றும் அகற்றுக. துவேஷத்தினை அறவே ஒழித்திடுக. ஒரு கண்ணில் வெண்ணெயும் இன்னொரு கண்ணில் சுண்ணும்புமாகச் செய்யற்க. முன்பு அபிமானித்திருந்த மனிதரையும், மதத்தையும், வாணாள் முற்றும் கௌரவித்திடுக. கடவுளுக்கும், தர்மத்துக்கும், நியாயத்திற்கும், கற்புக்கும் ஏழையின் கண்ணீருக்கும் என்றுமே அஞ்சுக. தன் சிந்தை நல்லதாயின், தன் வருங்காலமும் வாணாளும் யாவும் நல்லதாகும். போவதும் தன்னால்; ஆவதும் தன்னால்.

---

பாத்தியதையுள்ளவர்கள் எவ்வித சுதந்தரமுமற்று மனம் புழுங்கிநொந்து மற்றவர்முன் கேவலப்பட, பாத்தியதை யற்றோர் அவ்வீட்டில் முதன்மை ஸ்தானத்தைப்பெற்று வெகு தடபுடலாக அதிகாரத்தைச் செலுத்துகிறார்கள்!

---

ஒரு மனுஷ்யனுடைய தயவு தேவையில்லாதபோது அவன் திமிருடன் விரைத்து நிற்பதை மதிப்பது கஷ்டம். அவனை லக்ஷ்யம் செய்வதும் அபூர்வம்.

# சாஸ்திர நுட்பங்கள்

(173-ம் பக்கத் தொடர்ச்சி.)

172. ஒரு செங்கல்லைச் சலத்தில் போட அதிலிருக்கும் காற்று சிறு கொப்புளங்களாய் வெளிவருகிறது. அக்காற்றெல்லாம் ஒழிந்த அவ்விடத்தில் சலம் பாய்ந்தபின்பு நுரைத்து வருவது நின்றுவிடுகிறது. இதனால் செங்கல்லில் புரைச்சல் உண்டென்று தெரிகிறது.

173. சலத்தை அடுப்பில் காய்ச்ச காற்று கொப்புளங்களாக வெளி வருகிறது. அதனால் ஜலத்தில் காற்று கொள்ளும்படியான புரைச்சல் உண்டென்று தெரிகிறது.

174. வஸ்துக்களில் புரைச்சல் இருப்பதனால், அழுக்கு ஜலத்தை வடிகட்ட சாத்தியப்படுகிறது. மை ஒத்தும் கடுதாசி, கரித்தூள், மணல், கம்பிளி முதலியவற்றில் புரைச்சல் இருந்து அழுக்கைப் பிடிப்பதால் அவை வடிகட்ட உதவுகின்றன.

175. வியாபாரத்துக்கென்று தூரதேசம் அனுப்பும் பஞ்சு, வைக்கோல்,கம்பிளி,மயிர், பருத்தி, கார்க்கு, காகிதம், தக்கை முதலியவைகளைப் பளுவால் அமிழ்த்திக் கெட்டிப் படுத்திச் சிறிதாக்குவதுண்டு. இவற்றில் புரைச்சல் இருப்பதால்தான் அழுத்தப்படும்போது இப்புரைச்சல் சிறிதாகிப் பருமனில் குறைகின்றன.

176. உலோகங்களிலும் புரைச்சல் இருப்பதால்தான் முத்திரை அவைகளில் படிந்து அதற்கு இடம் தந்துக் குறைகிறது.

177. ஸமுத்திரத்திலே மிதக்கும் முட்டை சுத்த ஜலத்தில் முழுகுகிறது. பாதரஸத்தில் மிதக்கும் இரும்பு ஜலத்தில் முழுகும். ஆக வெவ்வேறு திரவத்தில் பொருள்கள் அவைகளின் தடிப்புக் கணக்குப்பிரகாரம் முழுகும்.

178. இரும்பு ஜலத்தில் முழுகினாலும் அது தகடாக்கப்பட்டு, கோர்வையான கப்பல் மிதக்கிறது.

179. வரால் முதலிய மீன்களுக்கு முதுகெலும்பில் காற்றுப்பை அமைக்கப்பட்டிருக்கிறது. இதில் காற்றைச் சுருக்கினால் முழுகவும், விரிவாக்கினால் மிதக்கவுமாக ஏற்பாடுகள் இயற்கையிலேயே பொருந்தியுள்ளன. ஆகையால் இது முழுகி இஷ்டப் பிரகாரம் நீந்துகிறது. மனிதர் நீந்துவது இயற்கையல்ல. மிருகங்களுக்குத் தலை தானாகவே மிதப்பதால் அவைகள் நீந்துவது இயற்கை. பறவைகள் வெகு சுலபமாய் நீந்தும். அதற்கேற்றபடி அவற்றின் இறகுகள் லேசாயும், ஈரம் தாக்காமலும், காற்றடைந்தும் அடர்த்தியாக இருக்கின்றன.

180. எண்ணெய், சாராயம், பசுவின் பால், கருப்பஞ்சாறு, திராவகம் முதலியவைகளின் தன்மையையறிய வெவ்வேறு அளவு ஆயுதமுண்டு.

181. சமுத்திரமட்டத்தில் காற்று தடிப்பு. மலைமேல் காற்று லேசு.

182. ஸமுத்திர ஜலத்தில் தன் எடையில் 100-க்கு $3\frac{1}{2}$-பங்கு பலவித உப்பு கலந்திருக்கிறது. ஒரு காலன் $2\frac{2}{3}$-படி ஜலத்தில் 2500-குன்றிமணி உப்பு இருக்கிறது. இதில் சாப்பிடும் உப்பு 1890-குன்றிமணி யுண்டு. மற்ற உப்பு வகையில் பேதி உப்பும், மாக்னீஷியாக்ளோரைட் என்னும் உப்புமே. இவைதான் கசப்புக்கும் பிசுபிசுப்புக்கும் காரணம். சமுத்திர ஜலத்தில் நனைந்த துணி உலராமலே இருப்பதற்கு மாக்னீஷியம் உப்பு கலந்திருப்பதே காரணம்.




## 2. அற்ப குணம்.

(150-ம் பக்கத் தொடர்ச்சி.)

### 134. "நாய் இருக்கிற இடத்தில் சண்டையுண்டு."

நாய் நன்றி விசுவாசத்திற்குப் பெயர் பெற்றதாயிருப்பினும், அது தன் வர்க்கத்தைச் சேராத மனிதர்களிடம் காட்டுகிற ஒரு அன்பைக்கூடத் தன்னைச் சேர்ந்த இனத்திடம் உணர்த்துவதில்லை. ஒரு நாய் இன்னொரு நாயைக் கண்டதும் குலைத்துச் சண்டையிடத் தொடங்கிவிடுகின்றது. இவ்விதச் சண்டை அவைகட்கு இயற்கையாய் அமைந்துவிட்டது. இவ்விதமே, நாயின் ஈனகுணம் படைத்த ஸதிபதிகள் மிகுந்த அற்பத்தன்மை யுள்ளவர்களாய் ஸதா ஒருவருக்கொருவர் சச்சரவிட்டுக்கொள்வதிலேயே காலம் போக்குகிறார்கள். கணவனும் மனைவியும் அன்னியர்களிடத்தில் எவ்வளவோ வணக்கமும் இனிய வசனமும் உள்ளவர்களா யிருந்துகொண்டு, தங்களுக்குள் மட்டிலும் நாயைப் போல் ஒருவருக்கொருவர் குலைத்துக்கொண்டு வாதுக்கு நிற்கின்றனர். "மற்றவர்களிடத்திலெல்லாம் புன்னகை முகத்துடன் மதுரமாய்ப் பேசும் நீ என்னைக் கண்டால் மட்டும் ஏன் இவ்வளவு கேவலமாய்க் கடுகடுத்துக் சிடுசிடு என்று விழுகிறாய்" என்கிறான் கணவன். "மற்றப் பெண்களிட மெல்லாம் வெகு வணக்கமாக மிருது வசனமா யிருக்கும் நீங்கள் என்னைக் கண்டால் மட்டும் ஏன் இவ்விதம் எரிந்து விழுகிறீர்கள்" என்கிறாள் மனைவி. ஒருவருக்கொருவர் ஒத்தும் இசைந்தும் போகாத அற்ப குணமே இவ்வித சச்சரவுகளுக் கெல்லாம் காரணமாகிறது. இன்னும் சில அற்பர்களுக்கு ஸதா வீட்டில் சண்டையிடுவதே வேலை. இத்தகைய அற்பர்களுடன் சேருவதில் நாமும் அந்த சண்டையில் சம்மந்தப்படும்படி வந்து நேரும். நமது பெயருக்கும் ஹானி வரும். இவ்விதமான நாயின் தன்மையினர் இருக்கும் இடத்தில் எந்நாளும் சண்டையே யாதலின், இந்த அற்பர்களைச் சேராது ஒதுங்கிக்கொள்வது நலம்.

### 135. "நாய்க்குச் சண்டையைவிட வேலையுமில்லை, இருக்க நேரமுமில்லை.

இது மேற்சொன்னதை இன்னும் விவரமாகக் காட்டும் பழமொழி. ஒரு நிமிஷமாவது ஏதேனும் ஒரு சண்டை விளைத்துக்கொண் டிருந்தால்தான் அற்பர்களுக்குப் பொழுது போகும். அவர்களுக்குச் சண்டை யென்பது ஒரு பக்ஷணம் போலாம். சண்டை யிடாத நாள் வீணான நாள் என்பது அவர்க

---

வயிற்றை வஞ்சித்துப் பொருள் சேர்க்கும்படி பிள்ளை பெற்ற வயிறு வெகுதூரம் தொந்தரவு படுத்துகிறதாம். நாளைக்குத் தனக்குப் பிறகு குழந்தைகள் கண்கலங்காதிருக்க வேண்டுமே யென்பதில் எப்போதும் கவலையாம்.

ளின் சித்தாந்தம். இதற்குத் தக்கபடி அவர்கள் சண்டையில்லாமல் ஒரு போதும் இரார். எவ்விதமோ ஒரு அற்பத்துக்கும் ஒரு சண்டையைத் தொடங்கிக் கொள்வர். இதைத் தவிர அவர்களுக்கு வேறு வேலையுமில்லை. இச்சண்டையின் கொதிப்பிலே அவர்களுக்கு நித்திர நேரமும் இராதாம்! கடைசியில் இச்சண்டையால் அவர்கள் வாரிக்கொள்வது ஒன்றுமில்லை. அடக்கமில்லாத பெருந்தன்மையற்ற அற்பத்தனமே இச்சண்டைகட்குக் காரணம். இவ்வித சண்டைகளால் ஏதேனும் ஒரு காசு பிரயோஜனம் உண்டா?

### 136. "நாய் வாசலைக் காத்தென்ன? இல்லாதவன் பணத்தைக் காத்தென்ன?"

இந்த இரண்டிலும் ஒருவித பயனுமில்லை. நாய் வாசலைக் காப்பதற்கு இவ்வளவு எச்சில் சோறு கிடைக்கிறது. இல்லாத ஒருவன் பிறர் இட்ட ஏவற்படி அவர்களின் பணத்திற்குக் காவல் காப்பதில் அதற்கு ஏதோ ஒரு அற்பக் கூலி மட்டும் கிடைக்கிறது. தொழில் அற்பத் தொழிலானதால் அதற்கேற்றபடி அற்பமாய் மதிக்கப்பட்டு, அற்பத்திற்கு எச்சில் சோறிலும் அற்பக் கூலியிலும் திருப்தி ஏற்பட்டுவிடு மாகையால், அந்த அற்பப் பிரதிபலனை அதன் முன்னே எறிந்து அவ்வளவுடன் அதை ஒதுக்கிவிடப் படுகிறது. நாய் வாசலைக் காத்ததே யென்றாவது, அவன் பணத்தைக் காத்தானே யென்றாவது ஒரு விசுவாசமான எண்ணத்தை எவரும் கொள்வதில்லை. அற்பர்கள் செய்யும் தொழிலில் அவர்கள் அடையும் பிரயோஜனமும் அற்பமா யிருப்பதும் தவிர, அவர்களை மற்றவர்கள் மதிக்கும் மதிப்பும் அற்பமானதாகவே போய்விடுகிறது. இது அற்பத்தின் ஈனத்தன்மையை எடுத்து விளக்குவதாகும்.

### 137. "பன்றியோடு கட்டின கன்றும் மலம் தின்னும்."

கன்றுக்குட்டி அதாவது பசுங்கன்று மலம் தின்னும் வழக்கமில்லை. அவ்விதம் இருப்பினுங்கூட, அதைப் பன்றியோடு சேர்த்து ஓர் இடத்திற் கட்டிப் பழக்கினால், அதுவும் பன்றியைப் போல மலம் தின்னத் தொடங்கி விடலாம். ஏனெனில், சகவாச தோஷம் அவ்வளவு கெடுதியைச் செய்துவிடுகிறது. இயற்கையிலேயே உத்தம குண முடையவனாக ஒருவன் இருப்பினும், அவனது தீய சகவாசம் அத்தீயோர்களின் குணத்துக்கு அவன் வந்து விடும்வாறாகச் செய்துவிடும். பெண் நல்லதே யானாலும், தாய் வீட்டார் அவளுக்குப் போதனை செய்து கெடுப்பதால், அவளும் அடக்க குணத்தை விட்டுத் தனது மாமி முதலானோரை எதிர்த்துக்கொள்ளுகிறாள். நற்குண மில்லாத பெண்டிருடன் சேர்ந்த பல உத்தம ஸ்திரீகள் கெட்டழிந்திருப்பதற்கு எவ்வளவோ உதாரணங்கள் உண்டு. இவ்விதமே ஆடவர்களும் சகவாச தோஷத்தால் கெட்டுச் சீரழிந்திருக்கிறார்கள். மனிதன் தனிமையை ஒரு நாளும் விரும்புவதில்லை. மற்றவர்களுடன் சேர்ந்திருக்கவே பிரியப்படுகிறான். அவ்விதம் சேரும் இனத்திற்குத் தகுந்தபடி குண தோஷங்கள் அவனிடம் தோன்றுகின்றன. கருமித்தனமுள்ள பெண்ணை மணந்தவன் அவளைப் போலவே தானும் பிறகு கருமியாகித் தனது அற்ப புத்தியைக் காட்ட முற்பட்டுவிடுகிறான். அவனுடைய பழய தாராளக்கை சிறுகச் சிறுக மறைந்து விடுகிறது. ஒருவன் கெட்டழிவதற்கும், ஒரு குடும்பமே கெட்டழிவதற்கும் சகவாச தோஷமே காரணம்.

## 138. "பன்றி பல குட்டி போட்டென்ன ?"

இது ஒரு விசித்திரமான பழமொழி. இது அற்ப குணத்தை வெகு தெளிவாய் எடுத்துக் காட்டுகிறது. அற்பனுக்குப் பல குழந்தைகளே பிறக்கட்டும். அத்தனை குழந்தைகளில் ஒன்றேனும் நன்கு வாசித்து உயர்ந்த ஸ்தானத்தில் நால்வர் மதிக்கும்படி உயருகிறதா? இல்லவே யில்லை. எல்லாம் ஏதோ ஒவ்வொரு அற்பத் தொழிலில் அமர்ந்து அவ்வளவுடன் திருப்திபட்டுப் போகிற அற்பத்தனத்துடனேயே இருக்கின்றன. அதற்கேற்றபடி அவர்களை வளர்ப்பதும் அற்பத்தனமான குறுகிய புத்தியுடனேயே இருக்கிறதன்றி, அவர்களை உயர்த்தி மேன்மைப்படுத்தவேண்டு மென்கிற பெரிய எண்ணங்கள் உண்டாவதே யில்லை. அற்பர்களுக்குப் பிறக்கும் குழந்தைகள் அற்பர்களாகவே போகிறார்கள். அவர்கள் பெரிய பதவிகளில் அமர்ந்து முன்னுக்கு வந்து விளங்குவதில்லை. இவ்வித நிலைமையில் எத்தனை குழந்தைகள் பிறந்தாலும் என்ன பயன்? பன்றி பல குட்டி போட்டென்ன? எல்லாம் அற்பங்களே. அவற்றால் ஏதாகிலும் பிரயோஜன முண்டா? அற்ப குணத்தால் தாங்கள் கெடுவது மட்டுமே யல்ல, தங்களுக்குப் பிறக்கும் குழந்தைகளையும் முன்னேறவொட்டாமற் செய்து விடுகிறார்க ளென்பதை இப் பழமொழி விளக்குகிறது.

## 139. "குங்குமம் சுமந்த கழுதை டரிமளம் அறியுமா?"

எப்படி அறிய முடியும்? கழுதையின் அற்ப குணத்திற்கு குங்குமத்தின் பரிமளத்தை யறிகிற தன்மை ஏது? அதன் இயற்கைக்கும் குங்கும வாசனைக்கும் வெகு தூரமாயிற்றே. தன் முதுகில் குங்குமத்தைச் சுமந்துகொண்டிருந்துங்கூட அதன் அருமையை அது தெரியாதது போல், தகுந்த கௌரவமும் உத்தம குணங்களு முடையவனான தனது கணவனின் அருமையை ஒரு துஷ்ட மனைவி அறியாமற் போகிறாள். பத்தினித் தெய்வம் போன்று விளங்கும் தனது நாயகியின் குணசீலங்களை அதம புருஷனொருவன் அறிவதே யில்லை. சில தாய் தந்தையர்க்கு நற்குணங்கள் அமைந்த புத்திரர்களிடம் பிரீதியே இருப்பதில்லை. துஷ்டர்களாயுள்ள மைந்தர்களிடமே அதிக பாசம்வைத்து அவர்களுக்கே எல்லாம் செய்கிறார்கள். அடுத்த வீட்டுக்காரனின் யோக்கியதையைப் பக்கத்து வீட்டுக்காரன் தெரிந்து மதிப்பதே யில்லை. பந்துக்களும் பணத்தைப் பார்க்கிறார்களே யொழிய ஒருவனது குணசீலங்களைக் கௌரவித்துப் பாராட்டுகிற பெரிய புத்தி படைக்காமல் அவனது அருமையையும் அறியாதவர்களாய் விடுகின்றனர். சில நண்பர்களும் தம்மிடத்து மிக்க மதிப்பும் அன்பும் மேற்கொண்டிருக்கும் நேசர்களின் நிர்மலமான பிரேம ஹிருதயத்தை அறியத் தவறிப்போய் அவர்களிடம் வெகு அற்பமாக நடந்துகொண்டு, அற்ப சொற்பத்துக்கும் கணக்குகள் காண்பித்துக்கொண்டு தங்களின் அற்பமான மனப்போக்கை வெளியிட்டுக்கொள்கிறார்கள். இவ்வளவுக்கும் அற்பத்தனமே ஹேதுவாகி, அந்த அற்பர்களை நெருங்கிய சில நிமிஷங்களுக்குள் அவர்களின் அற்ப குணத்தைக் கண்டு சகியாது தூர விலகிவிடும்படி நேர்ந்து போகிறது. எவ்வளவு பெரியவர்களா யிருந்தாலும், எவ்வளவு படித்

---

ஒருவரின் வீட்டில் தனது நண்பன் வந்திருக்கையில் அவனைக் காணச் செல்லுகிறவர் உடனே சீக்கிரம் விடை பெற்றுக்கொண்டு புறப்பட்டுவிடுவதே கௌரவம். இரவில் அங்கு தங்குவது பிறகு வெறுப்பிற்கிடமாக முடியும்.

தவர்களா யிருந்தாலும், என்னதான் குடும்பத் தலைவர்களாக இருந்தாலும் அவர்களை இந்த அற்பகுணப் பிசாசு பிடித்துக்கொள்ளும்போது, மற்றவர்களுடைய குண சீலங்களைப் பாராட்டி அவரவர்களின் தரத்துக்குத் தக்கபடி மதிக்கவேண்டிய ஒரு தன்மையை மறந்துவிட்டு வெகு ஈனமும் அற்பத் தன்மையுமாக நடந்துகொண்டு விடுகிறார்கள். அவர்களின் அற்ப குணம் கடைசியில் எல்லோராலும் வெறுக்கப்படக்கூடியதாய் விடுகிறது. எவ்வளவுக்குப் பிறர் வெறுத்தாலுங்கூட, இந்த அற்பர்கள் தங்களின் அற்ப புத்தியை என்றைக்கும் விடுவதே யில்லை. தங்களின் அற்பத்தனத்தை ஒரு சாமர்த்தியம் போலவும் நினைத்துத் தங்களை உயர்த்திப் பெருமைப்படுத்தியும் கொள்கிறார்கள். அற்பத்தனம் தோன்றியதும் ஒருவனை மதிக்க வேண்டிய மதிப்பு குறைகிறது; நேசிக்கவேண்டிய நேசம் குறைகிறது. உறவாடவேண்டிய உறவு குறைகிறது. வியாபார லக்ஷணத்தின் ஒரு சத்தியப் பாதையும் உறுதிச் சொல்லும் குறைகிறது. ஆதரித்து அரவணைக்கவேண்டிய பெருந்தன்மையும் குறைகிறது. சிறியோர் பெரியோர் என்ற மரியாதையும் குறைகிறது. அடக்க குணமே அற்றுப் போய்விடுகிறது. தனது முழு ஈனத்தன்மையையும் வெளியில் வாந்தி எடுத்துக்கொட்டும்படி வைத்துவிடுகிறது. இவ்வித அற்பத் தன்மையில் மூழ்கிவிட்டவர்கள் குங்குமம் சுமந்த கழுதை போல் மற்றவர்களிடத்துள்ள நேசம், உறவு, அன்பு சிலாக்கியம் முதலிய பரிமளங்களை எப்படி அறியப்போகிறார்கள்? இத்தகையோரைக் குறிப்பிட்டு உரைப்பதற்கு இப்பழமொழியை வழங்குவர். (தோட்டநம்.)

## குடித்தனத்துக்கு உதவும் சோப்.

ஒரு பவுன் காஷ்டிக்சோடாவை, 20-பவுன் ஆட்டுக் கொழுப்புடன் சில மணிநேரம் காய்ச்ச உருகி உறையும். எடுத்து இழுத்தால் நாரோடும் வரையில் காய்ச்ச வேண்டும். அரை கோப்பை உப்பு இதனோடுசேர்க்க ஸோப் மிதக்கும். சலத்தில் இதைவிட்டுக் காய்ச்சி ஏதேனும் ஒரு வாசனையும் சேர்த்துக்கொண்டால் வெண்மையான சோப்பு உண்டாகுமாம். இதில் கொழுப்பு சேர்வது அசங்கிதமாய்த் தோன்றும். பன்றி இறைச்சியின் சாரம், மாட்டிறைச்சியின் சாரம் என்று எவ்வளவோ ஆங்கில மருந்துகள் வர, விசேஷமாய் ஹிந்துக்களே அதை வாங்கி உபயோகிக்கிறார்கள். மருந்துக்குத் தோஷமில்லையாம்! அவ்விதமே கொழுப்பு சேர்ந்த பலவித சோப்புகளுக்கும் தோஷமில்லை போலும்! காலத்துக்கேற்ற வார்த்தையோ?

ஒரு காரியத்தைத் தொடங்கி அதைப் பாதி பாதியாகவே போட்டு விட்டுக் கடைசியில் எதையும் முடிக்காமற்போவது சிலரது குணம்.



# பெரியாரின் மொழிகள்



(165-ம் பக்கத் தொடர்ச்சி.)

411. Every man is the architect of his own fortune.

ஒவ்வொரு மனிதனும் தனது அதிர்ஷ்டத்தைத் தானே அமைத்துக் கொள்ளுகிறான்.

412. A friend is seldom known till needed.

உண்மையான தேவை உண்டாணா லன்றி நண்பனை அறிய முடிவதில்லை.

413. Mind the corner where lifes road turns.

வாழ்க்கையெனும் வீதி வளைந்து செல்லும், மூலையைக் கவனத்துடன் நோக்கு.

414. Heaven gives the grab needed for the moment.

சமயத்திற் கேற்றபடி விஷயங்களுக்கு மாதுர்யத்தைப்பகவான் அளிக்கிறார்.

415. Strong reasons make strong actions.

உறுதியான காரணங்களின் பயனாக வலுவான கர்மங்கள் நிறைவேறுகின்றன.

416. Do good thy friend to keep him to thy enemy to gain him.

உனது நண்பனைக் கைவிடாமல் இருக்கும் பொருட்டு அவனுக்கு நன்மைசெய்; உனது எதிரியை வெல்வதற்காக அவனுக்கும் நன்மை செய்.

417. What has been done dont do over again.

ஒரு தடவை செய்து முடித்ததையே திரும்பத் திரும்பச் செய்யாதே.

418. Help yourself and heaven will help you.

தனக்குத் தானே உதவி செய்து கொள்பவனுக்குக் கடவுளின் உதவியும் கிடைக்கும்.

419. There is no better counsellor than time.

காலத்தைவிடச் சிறந்த புத்தி கூறுவோன் வேறு இல்லை.

420. If you cannot have the best make the best of what you have.

உனக்குச் சிறந்த வஸ்துக்கள் கிடைக்க வில்லையாயின், உள்ளதைக் கொண்டே உத்தமமாகச் செய்து கொள்.

421. Idleness is the parent of all the vices.

தீயகுணங்கள் யாவற்றிற்கும் சோம்பலைத் தந்ததாகும்.

422. Never fall out with your bread and butter.

நீ உட்கொள்ளும் உணவுடன் சச்சரவிட்டுக் கொள்ளாதே. வெறுப்படையாதே.

423. Cleanliness is next to godliness.

---

மனைவி நேரில் செலவுக்குக் கேட்கும்பொழுது கணவன் கொடுக்க மறுக்கிறான். ஆனால், அவன் வெளியூரில் இருக்கையில் மனைவியின் கடிதம் வந்தாலோ உடனே வீட்டுச் செலவுக்குப் பணம் அனுப்பிவிடுகிறான்.

பகவத் உபவாசனத்திற் கடுத்தது பரிசுத்தமாகும்.

424. Difficulties are meant to rouse not to discourage.

கஷ்டங்கள் மனிதனை உற்சாகப் படுத்தவே அன்றி அவன் தைரியத்தைக் குறைப்பதற்காக வருவதில்லை.

425. Few things are impossible to diligence and skill.

கூரிய கவனத்தாலும் காரிய சக்தியாலும் செய்து முடிக்கக்கூடாத விஷயங்கள் ஏதுமில்லை.

426. A clear conscience is a sure guard.

தூய்மையான மனசாக்ஷியே நிச்சயமான காவலாளனாகும்.

427. Men's thoughts are much according to their inclinations.

மனிதனுடைய குணத்தை யனுசரித்தே அவனது எண்ணங்களுமிருக்கும். (தொடரும்.)

P. E. பாஷியம் நாயுடு.
"மனோகர விலாஸ்" ஸ்ரீரங்கம்.

[இனி, ஸ்ரீமான் P.E. பாஷியம் "பெரியாரின் மொழிகளை" எழுதுவதற்கில்லை. அவர் எழுதியவை அடுத்த ஸஞ்சிகையுடன் பூர்த்தி. அதுவே கடைசி. 1907-ம் வருஷம் ஜனவரி மாதத்தில் பிறந்த அவர் தமது அதிபால்யத்தில் 18-6-29-ல் ஸ்ரீரங்கத்தில் காலமாயினா ரென்பதை ஆற்றொணாத் துயரத்துடனும் தெரிவிக்கின்றோம். பாஷியம் எமது உடன் பிறப்பான தமக்கையின் கடைசி குமாரனவன். நமக்கு வலதுகை போன்றிருந்தான். "அமிர்த குண போதினி"யின் ஆரம்பகால முதற்கொண்டு அவன் செய்துவந்த ஊழியம் அபாரமானது. 17-3-29-ல் நாம் ஸ்ரீரங்கத்தி லிருந்தும் சென்னைக்குப் புறப்பட, அது சமயம் ரயிலுக்கு வந்திருந்து நம்மை யனுப்பி வைத்தான். பிறகு நாம் பிணிவாய்ப்பட்டு மூன்று மாதம் போல் இருந்துவிட்டு 18-6-29-ல் ஸ்ரீரங்கம் சேர்ந்து வண்டியை விட்டிறங்கியதும் பாஷியம் போய்விட்டானென்று கேட்டு அலறிக்கொண்டு செல்ல, நாற்காலியில் மரணக்கோலமாய் வீற்றிருத்தலைக் கண்டோம். நாம் வருவதற்கு சற்று முன்பாகத்தான் பிராணன் பிரிந்ததாகத் தெரிந்தது. 17-3-29-ல் ரயிலடியில் பேசியதற்குப் பிறகு பேசவேயில்லை. நாம் ஒரு தினத்திற்கு முன்பாவது வந்திருக்கக் கூடாதா? அவனுடன் சற்றுப்பேசியாவது மனம் ஆறியிருக்கலாம். அதற்கும் பிராப்தமில்லை. ஈசன் செயல்! ப-ர்.]

தன் சொந்த அனுபவ சங்கதிகள் அப்படியப்படியே ஒரு நூலில் கொட்டப்பட்டிருந்தால், தன்னையே எழுதியிருப்பதாய் எண்ணாமல் தன்னைப்போல எத்தனையோ பேர் தான்பட்ட அநுபவங்களையும் பட்டிருக்கலாமென்றும், அது பொது அநுபவ அறிவு என்றும் உணருகிறபுத்திவேண்டும். தாயாதிச் சண்டை, மாமி மருகி சண்டை ஒரு வீட்டில் தானா நடக்கிறது? பிரபஞ்சசோதனா அநுபவம் எங்குமுண்டு.



## நமது கதாப் பிரஸங்கி.

# மதியற்ற மணத்தின் முடிவு.

(163-ம் பக்கத் தொடர்ச்சி.)

சில நாட்களில் குமுதத்தின் கருத்து இதுவென யாவரும் அறிந்தனர். "ஐயோ! பாவம்! இவர்களுக்கேன் இவ்வளவு பேராசை? பணத்தைக் கடித்துக் கடித்துத் தின்கிறதா? அழகு மிகுந்த இந்தப் பச்சைக் குழந்தையை அந்தக் கிழட்டுப் பிணத்துக்குக் கொடுத்து என் துன்பத்திற்காளாக்கவேண்டும்! பாவிகள்" என்று ஒரு சிலர் காதோடு காதாய்க் கூறிக் குமுதத்தின் பெற்றோரை வைது, குமுதத்தின் நிலைமைக்குக் கண்ணீர் வடித்தனர். ஆனால், அது மெய்க்கண்ணீரோ பொய்க் கண்ணீரோ அறியோம். ஒருக்கால் "தங்களுடைய சிறுமிகளைக் கொடுத்துத் தாங்கள் அந்த செல்வத்திற்கு உரிமை பெற இயலாதவர்களாகப் போனோமே" என்ற பொறாமையாலும் ஆகலாம். "கை நிறைந்த பொன்னைக் காட்டிலும் கண்ணிறைந்த கணவனே மேல்" என எவளோ ஒரு துரதிர்ஷ்டம் பிடித்த அசட்டுப் பிணம் சொல்லியிருக்கவேண்டும். உள்ளபடி 'கண்ணிறைந்த கணவனைக் காட்டிலும் கைநிறைந்த பொன்னே மேல்.' பணமில்லாவிட்டால் இந்தக் காலத்தில் என்ன காரியம் ஆகும்? ஆத்துக்காரன் அழகும் சுளகுமாக இருந்தால் போதுமா? அப்படித்தான் உன் புருஷனுக்கு (சுந்தரேச சாஸ்திரி) என்ன? அவரைப் புருஷனாக அடைய எத்தனையோ பெண்கள் தவம் கிடக்கிறார்களே! பைத்தியக்காரி! உனக்குக் கொடுத்து வைத்திருந்தும் அனுபவிக்கத் திறமையில்லையே" என்று குமுதத்திற்கு அவளுடைய பெற்றோர்க்கு முன்பாக இருந்தே புத்தி கற்பிக்கத் தொடங்கினர் வேறு சிலர். ஆ! பாரததேவி! எத்தனைத் தந்திரமுள்ள வஞ்சக மக்களை உனக்குச் சொந்தமாகப் பெற்று வைத்திருக்கிறாய்!

குமுதம் எவர் வார்த்தைக்கும் இணங்கியவளல்ல. அன்றிருந்து யாருடனும் நன்றாகப் பேசினவளல்ல. அவள் மேனி பட்டாடையை மறந்தது. கூந்தல் வாசனை யெண்ணெயை நீத்தது. "நாளைக்குச் சரிப்பட்டு விடுவள், அடுத்த நாளைக்குச் சரிப்பட்டு விடுவள்" என குமுதத்தின் பெற்றோரும், முருங்கையூர்ச் சாஸ்திரியாரும் எதிர்நோக்கி யிருந்தனர். இங்ஙனம் வருடம் பல கழிந்தன. ஆனால் குமுதத்திற்குத் துயர் அதி

---

வைத்தியம் செய்துகொண்டேயிருந்து வியாதி குணப்படுகிற நல்ல சமயத்தில் நடு வைத்தியத்தில் விட்டுவிட்டுப் போய்விடுகிற வைத்தியர்கள் சிலர் உண்டு. இவர்கட்கே வெகு நல்ல பெயர். பெரிய பதவிகளுங்கூட!

கரித்ததே யொழியக் குறையவில்லை. மாதவனை அன்று ஊருக்கு அடுத்த தோப்பில் கண்டதுதான். எனினும் அவனை ஒரு நிமிடமாவது தன் சிந்தையிற் சிந்தியாதிருப்பதில்லை. இங்ஙனம் இருந்த அவளுக்கு ஒரு நாள் இரவு கனவிற் காட்சியளித்தான் நம் மாதவன். "அக்கனவு நனவாகாதோ?" என்ற பேதுற்ற சிந்தையளாய், அவன் காட்சியளித்த பூங்காவனத்தை அதிகாலையில் நண்ணினள் குமுதவல்லி. மலர் பறிக்க வந்த ஜானகி யென்னும் மற்றொரு மாது குமுதம் அங்கே நிற்பதைக் கண்டதுந் தான் அவர்களுக்குள்ளே நாம் முற்குறித்த சம்பாஷணை நடைபெற்றதும், பின்னர் இருவரும் தனித்தனியே பிரிந்ததும்.

பிரிந்த குமுதம் உணர்வற்ற சிந்தையளாய் வீடு சேர்ந்தாள். அன்று முழுதும் பைத்தியம் மிகுந்தவள் போல் உணவை வெறுத்துப் படுக்கையிற் புரண்டவண்ண மிருந்தாள். இரவிற்கண்ட கனவே அவள் நினைவாயிருந்தது. தான் கற்பக விநாயகர் நந்தவனத்தையடைதலும், மாதவனை யழைத்தலும், அவன் தனது பின்புறம் நின்று கண்களைப் பொத்தலும், பின்னர் முன்னே வந்து காட்சியளித்துக் கொஞ்சிக் குலாவலுமாகவே அவள் மனக்கண் அவளுக்குப் பல முறை மகிழ்ஊட்டிய வண்ணமிருந்தது. பெற்றோர் தம்மாலானவரை முயன்றும் செயலற்று நின்றனர்.

மாலை என்னும் மாது குமுதவல்லியைத் தட்டி எழுப்பினள். (அதாவது மாலைக்காலம் வந்தது.) குமுதம் படுக்கையினின்றும் எழுந்து மீண்டும் காலையிற் சென்றடைந்த பூங்காவனத்தையே அடைந்தாள். ஆங்கே அதுசமயம் உண்மையிலேயே அந்நாடகத்தை நடிக்கமுயன்றாள். அதே நிமிஷத்தில் தன் தேக நிலையில் புதிய மாற்றம் உணர்ந்து தான் புஷ்பவதியானதாகக் கண்டாள். ஆ! வந்தது மோசம்! எப்போதெப்போதென்று காத்திருப்பவன் உடனே ஓடி வருவன். நலுங்குகள் தொடங்கும். வாத்திய கோஸங்கள் முழங்கும். பிறகு என்னை அவனுக்குப் பலியிடுவர். அதற்கு முன்னர் என்னை நானே பலியிட்டுக் கொள்கின்றேன். இதன் மத்தியில் சற்றே, என் மாதவனை நினைத்துச் சற்றே குதூகலிக்கவும் விரும்புகின்றேன் என்றாள். மாலைச் சூரியனின் பொன்னிறக் கதிர்கள் இளநிலாவென எங்கும் பரந்து அழகு தந்து நின்றன. அதுவே நடிப்பதற்கேற்ற காலமெனக் கருதினாள். "மாதவா! மாதவா!" என அழைத்தாள். ஒரு முறையல்ல; பலமுறை யழைத்தாள். தன் கண்களை யாரோ பின்புறமிருந்து மறைப்பதுபோல் அவளுக்குத் தோன்றிற்று. திரும்பிப் பார்த்தாள் பாவம்! ஏமாற்றமடைந்தனள். ஒருவரும் ஆங்கே காணப்படவில்லை. மீண்டும் மீண்டும் அழைத்தாள். அவள் அழைப்பு அவலமாகவே முடிந்தது. தன் கனவு நனவாகாது கனவேயானது கண்டு மனமுடைந்தாள். அன்று முழுதும் உணவேயில்லாமையால் அவள் கண்கள் ஒளி குறைந்தன. நா வறட்சியுற்றது. மேனி வாடிய பூங்கொடி போல் துவண்டு நின்றது. அப்பூங்காவின் ஓர்புறத்துள்ள தடாகத்தை யடைந்து, தன் இரவிக்கையைக் கழற்றிக் கரைமேல் வைத்ததும் கண்

---

ஒரு தாய் வயிற்றுப் பெண்ணை மணக்கும் ஆடவர்கள் தங்களுக்குள் அன்பை வளர்க்காமல் ஒருவர்மீதொருவர் பெண் சந்தேகம்கொண்டு விரோதத்தைப் பெருக்கிக்கொள்கிறார்கள். ஸகோதரிகளின் கணவர்களோடு பேசாதிருக்கவும் தமது மனைவியரைக் கட்டுப்பாடு செய்து வெகு எச்சரிக்கையாகிறார்கள்.

ணீர் ஆருய்ப் பெருகிற்றுஏழைக் குமு தத்திற்கு. ஓடியாடிப் பறந்து மகிழ்ந்த பறவைகளெல்லாம் அவளுடைய பரி தாப நிலைமையைக் காணச் சகியாது தத்தம் இடத்தையடைந்து வாயொ டுங்கின. காக்கைகள், "ஆண்டவனே! திக்கற்ற இச்சிறுமியைக் கா, கா" எனக் கத்தியவண்ணமே சென்றன. அவளது நிலைமையைக் கண்டு அழுது அழுது கண்ணும் முகமும் உடலும் சிவந்தசூரியன், "ஆ! இனி ஆற்றேன்; ஆற்றேன்; இவளைக் காண இனி ஆற்றேன்" எனக்கூறி மேற்கடலுள் வீழ்ந்து முடிந்தான்.

"அந்தோ!

'மண்பிறந்த மறிகடல் சூழ்
உலகத்தில் வாழ்பவரில்
பெண்பிறந்தார் யான்பட்ட
பெருந்துயரம் யார் பட்டார்?'

என்னருமை மாதவா! ஏழையால் எங்கெங்கு சென்று நீ வருந்துகின்றை யோ? உன் நிலைமை எவ்வாருயிற் ஞே? நானுவது காலாகாலத்திற் சிறிது உணவு தவருமல் உண்டு வரு கிறேன். உனக்கு அவ்வுணவும் மருந் தாயிற்ஞே என்னவோ? ஈசா! என் மாதவரை இதுபொழுது என் கண் முன்னே காட்டாயோ? இப்பிறவி தப்பிடினும் வருபிறவிதனிலேனும், மாதவரே! உமையடைய மாதவம் யான் புரிந்திடுவேன். ஆ! கங்கையாம் அன்னையே! திக்கற்ற உன் மகளுக் குத் தங்க இடம் அருள்" எனக் கூறி நீரில் வீழ்ந்து மறைந்தாள் நம் ஏழைச் செல்வி.

***  ***  ***

இரவு மணி ஏழு. கமலாபுரம் முழுவதும் பெரிய கலவரம். "குமு தத்தைக் காணவில்லை, குமுதத்தைக் காணவில்லை" யென்ற பேச்சே யாவர் வாயினின்றும் வந்தது. நமது செல்வியின் பெற்றேரும் மற்றேரும் கையில் விளக்குகளோடு அங்கங்கே தேடினர். அதுசமயம் ஜானகி என் னும் பெண் தனது கணவனிடத்துக் காலையில் நிகழ்ந்த நிகழ்ச்சியைக் கூறி னள். அதை அவர் குமுதத்தின் பெற் ஞேரிடம் கூறினர். "ஒருக்கால் அவள் மீண்டும் அதே யிடத்தை அடைந்திருத்தலும் கூடும்" என ஐயுற்ற மனத்தினராய் யாவரும் சோலையை அடைந்தனர். ஒவ்வொரு இடமாகத் துருவித்துருவித் தேடி னர். அப்பொழுது ஒருவர் "இதென்ன, துணி மாதிரி கிடக் கிறது?" எனச் சத்தமிட்டார். யாவ ரும் விளக்குகளோடு அங்கே ஓடினர். முன்னல் சென்ற சிலர் "ஓ! இது இரவிக்கைத்துணி!" என்றனர். குமுதத்தின் தாயார் விரைந்து ஓடி அத்துணியைத் தன் கையில் வாங்கிப் பார்த்ததும், "ஐயோ! என்வாயில் மண்ணைப்போட்டயா? என் வாயில் மண்ணைப்போட்டயா?" என மாறி மாறித் தன் தலையிலும் முகத்திலுமாக அடித்துக்கொண்டாள். அவள் கண வன் கிருஷ்ணையர் "பேசாமலிரு! அவளுக்கு ஒன்றுமில்லை; நம்மைச் சோதிக்கத்தான் துணியை இங்கே போட்டுவிட்டு எங்காவது மறைந்து கொண்டிருப்பள்" எனத் தன் மனைவியை அடக்கி, இன்னும் எல்லா இடங்களையும் நன்ருகத் தேடும்படிக் கூறினர். மற்றவர்கள் இல்லை, இல்லை; இந்தக் கிணற்றில் முழுகிப் பார்த்தபின்பு எங்கு வேண்டுமானு லும் தேடலாம்" என்றனர். ஐயரும் சம்மதப்பட்டார். இனி, கிணற்றில் இறங்கவேண்டுமே! அதற்குப் பயந்த

யோக்கியமான மனிதர்கள் மற்றவர்கள் தவறி நடப்பதைச் சகிப்பதில்லை அவர்களிடம் நெருங்காதிருக்கத் தங்கள் குடும்பத்தையே எச்சரித்துவிடுகி ருர்கள். இதை யறிந்து தவறி நடப்பவனும் தூரப் போய்விடுகிறுன்.

கோழைகள் ஒவ்வொருவராகப் பின்னடைந்தனர். அதுபொழுது கிருஷ்ணையரின் பண்ணையாள் முருகப் படையாச்சி முன் வந்து "சாமி! நான் இறங்கிப் பார்க்கட்டுமா?" என்று கேட்டான். "பாரப்பா" என்றார் ஐயர். கிணற்றில் "தொப்"பென்று குதித்தான். ஒரே முழுக்குதான். நீலமேகத்தினிடையே மின்னற்கொடி மின்னுவதுபோல், இளநீலவர்ணமான அத்தடாக நீரின் மேலே முருகப்பனால் நமது குமுதவல்லி தூக்கிக் கொண்டு வரப்பட்டாள். அந்தோ! அவளுடைய செழித்த கூந்தல் நாற்புறமும் சோர்ந்து கிடந்தது. ஒளி பரந்த நெற்றி அன்றலர்ந்த செந்தாமரை போன்றிருந்தது. உண்மையில் உயிர் நீத்தவளாகக் காணப்படவில்லை. தூங்குபவள் போலவே காணப்பட்டாள். முன்பு தன் மனைவிக்குத் தைரியம் கூறிய கிருஷ்ணையரே, "ஐயோ! அம்மா! எங்களையெல்லாம் நடு ஆற்றில் விட்டுவிட்டுப் பிரிய உனக்கு எப்படியடி மனம் வந்தது?" என்று கதறுகிற கூக்குரல் அச்சோலையெங்கும் எதிரொலித்தன எனின் மற்றவரைப்பற்றிக் கூறுவது மிகை. இனி "யௌவன வீரசிகாமணி" சுந்தரேச சாஸ்திரி தன் மனைவியைப் பறிகொடுத்ததற்கு எவ்வாறு பன்னிப் பன்னி அழுதார்? குமுதத்தின் உடல் அடக்கஞ் செய்யப்பட்டது எங்ஙனம்?" என்பவற்றை யறிய நமது நேயர்கள் விருப்பமில்லாதவர்களாக விருக்கலாம். நமக்கும் அவை குறித்து வரையப் பிரியமில்லை. பொற்கொடி, தங்கப்பதுமை அரியாயமாக உயிர் நீத்தபின் எது எப்படியானுலென்ன?

*** *** ***

இது நிகழ்ந்த சில மாதங்களுக்குப் பின்னர் ஓர் நாள் இரவு சுந்தரவடிவினன், நொந்து புண்ணுன சிந்தையன், நமது மாதவமில்லா மாதவன் கமலாபுரத்திற்கு அருகேயுள்ள ஓர் குடிசையை நண்ணினுன். அக்குடிசையின் வாயிற்புறத்தே ஒருவன் குறட்டை விட்டுத் தூங்கிங்கொண்டிருந்தான். "கருப்பன் சாம்பான்! கருப்பன் சாம்பன்!" என அவனை யழைத்தான் மாதவன். உடனே சாம்பான் தூக்கத்தினின்றும் எழுந்து "யாரது?" என்றான். "என்னைத் தெரியவில்லையா?" என்றான் மாதவன்.

கரு.—யாரு சாமி! தெரியிவியே?

மாத.—நான் தான் மாதவையர். சிதம்பரையர் மருமகன்.

கரு.—என்னுங்க; சின்னபண்ணை ஐயிரு மகங்களா? சாமீ! நீங்க எங்கேயோ ஓடிப்பூட்டிங்கினு எல்லாரும் அழுதுகிட்டிருந்தங்களே சாமி. எப்ப சாமி வந்திங்க? எங்கெங்கே போயிருந்திங்க சாமி?

மாத.—சாம்பான்! அதெல்லாம் இருக்கட்டும்; அது ஒருபெரிய கதை. நம்மவூரு பெரியபண்ணை ஐயர் மகள் தனது புருஷன் ஊருக்குப் போய் விட்டாளா, இன்னும் இல்லையா?

கரு.—சாமீ! நான் அதை என்னுன்னு சொல்லட்டும்?

(அடுத்த ஸஞ்சிகையில் முடிவு.)

பெ. இராமநுஜ ரெட்டியார்.

---

மஹாத்மாகாந்தி வசூலிக்கிற ஏராளமான திரவியத்தில் தமிழ் நாட்டினருக்கு எவ்வளவு உதவி ஏற்பட்டுள்ளதென்று தெரியவில்லை.

---

நிஜபக்தியில்லாமல் பூலோக சுகங்களைக்கோரிப் பல்லாயிரம் செலவிட்டாலும், அண்டசராசரங்களையும் அளாவிய அண்ணலுக்குத் திருப்தியாகுமா?

# ஊர் வம்பு

(48-ம் பக்கத் தொடர்ச்சி.)



இதற்கு முன்னர் நாட்டாண்மைக் காரர், பெரிய தனக்காரர் அல்லது மணியக்காரர் என அவ்வூரிலேயே பெருந்தன்மை வாய்ந்த ஒருவரை ஊரார் யாவரும் சேர்ந்து நியமித்து, எவ்வித வழக்குகளையும் தாங்களே கூடிப்பேசி முடிவு செய்தலும், அம்முடிவுக்கு உடன்படாதவரைத் தம்மினின்றும் பிரித்துத் தனியே ஒதுக்கிவிட, அப்பிரிவைச் சகித்துவாழ இயலாது, அறிவு வாப்பெற்று தம் தவறுணர்ந்து, அவர்களிடம் மன்னிப்புக்கேட்டுக் கூடிவாழ்வதுமாக நடந்துவந்தது. அதனால் கிராமத்தின் பொருள்கள் அவ்வூரிலேயே தங்கி அதை வளம்படுத்தி வந்தது. குளிர் நிழலும் இளங்காற்றும் தந்துதவ ஊரைச் சுற்றிலும் மரங்களைப் பயிர் செய்து வளர்த்தலும், நீர் வசதிக்காக ஏரிகள் கட்டி வாய்க்கால்கள் செப்பனிடலும், மாடுகள் மேயப் புல்தரை வளர்த்தலும், மக்கள் நல்லறிவு பெற அங்கங்கே ஆலயங்கள் சமைத்துத் திருவிழா நடத்தலுமாக இவ்வழியில் கிராமங்களின் செல்வம் செலவழிந்து வந்தது.

அப்பொழுது ஊர்களில் அமைதியும் ஆநந்தமும் தாண்டவமாடிக் கொண்டிருந்தன. நகரவாசிகள் கிராமவாசிகளைக் கண்டு பொறாமையுற்ற நாள் அது? ஓலைச்சுவடியும் குண்டெழுத்தாணியுங் கொண்டு கல்வி பயின்ற அந்நாளில் யாவரும் அறிவு நிரம்பிய பெருமக்களாக விளங்கினர். எழுதப் படிக்கத் தெரியாதவரும் புராணேதிகாசங்களின் கதைகளை அப்படியே ஒப்புவிப்பர். எவ்வளவு பெரிய கணக்காயினும் மனதுட் சிந்தித்துச் சில நிமிடத்திற்கூறிவிடுவர். மருத்துவமும் சோதிடமும் அறிந்திருந்தனர். இத்தகைய மேன்மக்கள் ஓய்வு நேரங்களை வம்பிலும் வழக்கிலுமா கழிப்பர்? சிறிது நன்கு படித்துள்ள ஒருவரை அரிச்சந்திரன் நளன், புரூரவன் முதலிய உத்தம புருடர்களின் வாழ்க்கை வரலாறுகளைப் படிக்கச்சொல்லி யாவரும் சுற்றியிருந்து கேட்டு மகிழ்வர். இது அன்றைய நிகழ்ச்சி! இன்று பொய்யும் பொறாமையும் நிறைந்த வம்பர்கள் சிலர் தனியரசு புரியுமிடங்களாயுள்ளன.

அவ்வம்பர்களின் பாவச் செயலுக்கு உட்பட மனமின்றித் "தானுண்டு, தன் தொழிலுண்டு'' என ஒதுங்கி வாழ விரும்பும் ஒரு சிலரையும் அப்பாவிகள் சும்மா விடுவதில்லை. நீ வையா விடினும் உங்கப்பன் வைதிருப்பான்'' எனக்கூறி யேழை ஆட்டுக் குட்டியைக் கொன்று விழுங்கிய திருட்டு ஓநாயைப் போல ஏதோவொரு சூழ்ச்சி செய்து, அதனாலவர்களை அம்

---

காரியமாகும் வரையில் பல்லிளிப்பு. காரியம் முடிந்ததும் கழுத்தைப் பிடித்துத் தள்ளி எவ்விதவேனும் விரோதம் உண்டாக்கித் துரத்திவிடுதல்.— இத்தகையோர் உங்கள் வகையில் யாரேனும் உண்டா?

1582

பலத்திற் கிழுத்துத் துன்பத்தில் அழ்த்தி விடுகின்றனர்.

இதற்கு முன்னர் ஆன்ருேர்களால் ஏற்படுத்தப்பட்ட ஆலயங்கள் யாவும் அழியும் நிலைமைக்கு வந்துள்ளன. திருவிழா முதலிய விசேடங்கள் ஒன்றுங் கிடையா. கோவில்களுக்கென வரும் பொருள்யாவும் முன்னிற்கும் "முண்டர்"கள் சிலரால்வுண்டு ஏப்பமிடப் படுகின்றன. "உண்டியும் உறையிடமும்தந்து கடவுளைக்காப்பாற்றுபவர் நாம்தாஞ? நன்று! நன்று!" என்று எள்ளி நகையாடும் நவீன நாகரிகர் பலர் இதுபொழுது தோன்றியுளர் என்பதை யாரும் அறிவர். அன்ஞேர் தம் கூரிய நுண்ணறிவால் இத்தகைய ஊழல்களைக் கண்டு பிடித்ததாகக் தருக்கி மகிழ்ந்து "இனி ஆலயங்களை யடியுடனழிப்பதுவே நமது முதற்கடமை" யென்பர். உடலில் தோன்றிய பிணியை யொழிப்பதற்கு மாருக உடலையே யழிக்கப் புகுந்த வைத்தியன் செயலோ டொக்கும் இவர் தம்தொழில். ஏற்கெனவே கிராமங்களைப் பாழ்படுத்தி வரும் ஊர் வம்பர்கட்கு "குரங்கு கையில் கொள்ளியைக் கொடுத்ததுபோலா"யிற்று இப்புத்திமதி. "பாரதமகாஜன சபையார்" ஆண்டுதோறும் "கிராம நிர்மாண வேலை" யெனத் தீர்மானஞ் செய்து கலைகின்றனர். கிராமங்களாலேயே நம் நாடு விடுதலை பெறவேண்டுமென்றும் முழங்குகின்றனர். ஆனல் நடை முறைக்கு அச்செயலைக் கொணரும் நாள் என்ருே? அந்நிய நாடாங்கன்னியர் பலரும் முளங்கால் மடித்துக் குறையிரந்து நிற்பத் திருவோலக்கங் கொண்ட, அம்பொற்ருமரையனைய அழகிய திருமுகமண்டிலத்துக் கருணைத்தேன் ததும்பும் கருநீலவிழிகளும், புன்னகை தவழும், இன்துவர்ச் செவ்வாயினையும் பெற்ற பாரத தேவி இன்று நீடிய கவலையால் வாடியமேனியோடு கண்ணீர் வடித்துக் கலங்கும் நிலைமையைக் கண்டும் தோழர்களே! உங்கள் மனம் இளகவில்லையா?

பே. இராமாநுஜ ரெட்டியார்.

ஒருவர் தன்னுடன் இருக்கும்படி ஒருவனைக் கெஞ்சும்போது அவன் ஓ! முடியாது, என்னை ஊருக்கு அழைக்கிருர்கள், நான் போகவேண்டும்என்பான். 'ஆகா போய்வா' என்று சொல்லி விடுவதே சரி, பிறகு வார்த்தையும் வளராது. அவனும் போகப் போகிறதில்லை. பிறாது அவசரத்தைப் பார்த்து, அவரை நெருக்கி நசுக்கி, அவருக்காகவே இருப்பதுபோல் நடிக்கிற தந்திரம் இது. அப்படியே போய் வா என்று நாம் கூறிவிட்டால் இவன் தந்திரம் செல்லாது.

தந்தையினுடைய நாணயத்தையும், யோக்கியதை, கௌரவம் இவற்றையும் அவர் குமாரன்மீது வைத்துப்பார்த்து உலகம் நம்பப்போக, அந்தக் குமாரனே தந்தையின் நற்பெயரைக் கெடுக்க வந்த கொள்ளிக் கட்டையாய், படுமோசக் களஞ்சியமாய், வாங்கின கடனை எப்பமிடுபவனுய் மாற, இவனைப் பெரிய பெயரால் நம்பினேர் வாயிலடித்துக் கொள்கிருர்கள்! தந்தைக்குத் தன் மகனின் செய்தியும் கடன்களும் தெரிய வந்து அவரது மானம் பறக்கிறது!

கஷ்டப்பட்டு வேலை செய்யாத சோம்பேரிகளுக்கு உதவி செய்தல் தர்மத்தோடு சேர்ந்ததாகுமா?

கவிதா  விலாஸம்

# சற்போத மஞ்சரி.

பரவை சூழ்ந்த பாருலக தினில்
நரர்காள் நீங்கள் நலிவ தேனோ

பிறத்தற்கரிய பிறவியில் பிறந்து
உறமுடன் நீங்கள் உளறுவ தேனோ

திருவள்ளுவனர் திருவருள் செய்த
திருக்குறள் தானும் தேசத் துலவ

முற்றுந் துறந்த முனிவ ரருளிய
பற்றொழி பாக்கள் பரவிக் கிடக்க

தாரணி புகழும் தாயு மானவன்
பேரணி பெருகும் பாக்க ளிலங்க

அலையு மனத்தை அடக்கு மவ்வை
உலையாம் பிறவியை ஒழிக்கும் பாக்களிலங்க

உண்மை நாயன்மார் உலகத் துலவிய
தண்டமிழ் சரிதம் தரணியி லிருக்க

ஊழ்வினை யறுத்து உலகி லுலாவ
ஆழ்வார்க ளருளிய அருந்தமி ழிருக்க

அறிவிலி மக்காள் அலைவதேனோ
அறிவைப்பெற்று அலைதலை வொழிமின்

நாத்திகனை நடந்து கொள்ளன்மின்
ஆத்திகராகி அண்ணலைத் தொழுமின்

மதத் துவேஷம் மனதிலுங் கருதேல்
இதத்துடனே இனிமை பழகுமின்

---

கடிதங்களில் தான் பெரிய சச்சரவு. நேரில் ஒரு சொல்லில் எல்லாம் சமாதானமாகிவிடுகிறது.

திருமூர்த்திகளைத் திருவுடன் பணிமின்
உருமூன்றான உண்மையைத் தெளிமின்

கீர்த்தியைப் பெற்று கிளையுடன் வாழ
மூர்த்தி உபாசனையை முன்னரே கொள்க

மறுமை யின்பம் மகிழுட னடைய
அறுமுக னடியே அரும்வழி யாகும்

ஆதிபகவனை அடிபணி வேண்டின்
சாதிச் சண்டையை சிந்தையி னினையேல்

பொருளுள் ளோனே புகழோனுவான்
அருளுள்ளோனே அந்தண னுவான்

கல்விச் செல்வம் கண்ணெனத் தருமே
கல்லா னுயின் கசடனே யாவன்

கற்றபடியே கருத்துட னெழுகுமின்
புறங் கூறுதலை புறத்தே தள்ளுமின்

தரும மின்றி தரணியி லுலவேல்
விருந்தோ டுண்ணலை விரும்பியே வாழு

அன்பில்லாமல் அவனியி லுலவேல்
நன்றி கொல்லா அரும்வழி நாடு

அடக்கமாக விருத்தலைப் பழகுமின்
தடக்கைகொண்டு தரணியில் வாழ்மின்
ஒழுக்கமாக உலகி லுலாவில்
விழுப்பந் தானே விரும்பியே வருமே

ஆரியர் பெருமை அவனியில் வேண்டில்
சீரிய கற்பைச் சிதற விடாதே

வெறுத்தற் குரிய வறுமை தன்னை
பொறுமை யோடுபொறுத் தலே மாண்பு

கயவர் கேண்மையைக் கனவிலுங் கருதேல்
அயலான் பொருளை அறவே வொழிமின்

---

அழுகிய மாமிசம் விஷமித்து அதை யுண்டவர்களைக் கொன்றுவிட்டது.
(கராச்சியில் 27—5—29.)

பாப குணங்களைப் பண்புட னொழிக்க
கோபந்தன்னைக் குணமுட னொழிமின்

கொல்லா விரதங் கொள்மின் கொள்மின்
புலாலை மறுத்து புகழை யடைமின்

இல்லற வாழ்க்கையை இனிது நடாத்த
நல்லவர் கேண்மையை நித்தமும் நாடு.

ஒழுக்கமாக உத்யோகஞ் செய்ய
உழவுத் தொழிலே உண்மைத் தொழிலாகும்

இன்னோரன்ன இனிமை யுரைகளை
இன்பமாய் நீங்கள் மனதி னிறுத்தி

பண்ணவ னருளால் பண்புடன் நீங்கள்
கண்ணிய மாகக் கலந்து வாழ்குவீரே.

க. பழனிவடிவேலு.

II

## பெண்கள் உடுத்தும் உடை.

ஆயிழை மாரி லமங்கலி சுமங்கலி
ஆரென் றறிதல் அரிதாய் விட்டதே!
பாவையர் யாரும் பழையமா திரியாய்த்
தொங்கல் போட்டுச் சொகுசா யுடுத்தும்
உடையை விடுத்து ரோசமில் லாமற்
பெண்கூத் தாடுவோர் தரிக்கும் பெற்றிபோல்
முதுகிற் சேலையை மொண்டணி யாகத்
திணித்துக் கூனற் சேயிழை யாரென
வெட்கமில் லாது வெளியே வருகிறார்!

---

எவரை நம்பலாம்?—உள்ளத்திலிருப்பதை மறைக்கத் தெரியாமற் பேசுவோரை உண்மையில் நம்பலாம். உம் உம் என்று விழுங்கி விழுங்கிப் பேசுவோரோ நம் சங்கதிகளைக் கிரகிக்கவந்த சண்டாளர்களே தவிர, தங்கள் கருத்தைச் சொல்லவந்தவர்களல்ல. இவர்களை நம்புவது கழுத்துக் கத்தியே.

III

# செலவும் குழப்பமும்.

(1)

இல்லறமே நல்லறமாம் இதிற்படும்பா டெவ்வறத்து மில்லை யில்லை
சொல்லவெனிற் பலநாளாய் பலவிடத்தும், பலவகையால் தொழில்
[செய்திட்டால்
மெல்லவரும் சம்பளமச் சம்பளமோ வந்தவன்றே விரைவினோடு
செல்லுமது செலவாகும் விந்தைதான் ஒருவகையால் செப்பலாமோ.

(2)

அப்போதே முக்கியமாய்ச் செயவுரிய புதுச்செலவு மநேகமுண்டாம்
இப்போதிங் கென்செய்வோ மெண்ணுகடன் கேட்டொருவரீந்தாரா
[னல்
எப்போதெப் படியதனைத் திருப்புவதென் றெயுளத்தி லெண்ணி யெண்
முப்போதும் படும்பாடு முழுதுமெடுத் துரைத்திடினு முடிவுறாதே. [ணி

(3)

இன்னமே திதிற்பெரிய துக்கமொன்று மில்லையெனி லியம்பக்கேண்
முன்னமே தந்திருக்கும் கடன்காரர் வந்திருக்கி முகஞ்சுளிப்பார் [மோ
அன்னமோ இரங்கும்? அதை வற்புறுத்திவிழுங்குகின்ற வத்துன்பத்தில்
பின்னமோ பெரிதுடையசிறுங்குழப்பம் வீட்டினுள்ளே பிறக்குமன்றே.

(4)

கலகமே உணவாகி குழப்பமே உடையாகி கடனே பூணாய்
செலவுகளே பாயாகி வற்றாத தரித்திரமே செல்வமாகி
நலமறியா வெறுப்பதுவே துயிலாகி வாழ்கின்ற நாள்கள்நோக்கில்
கலநுனியில் காக்கையைப்போ லிழக்கவொணா நிலைமையினிற் கழற
[லாமே.

*கலநுனி—கடல் நடுவில் செல்லுங் கப்பல்.*

S. கண்ணபிரான் பிள்ளை.

---

*பாத்தியதை யுள்ளவர்களை அந்தப் பாத்தியதையை யநுபவிக்கக் கூடாத படி வீட்டுப் பெரியோர்களை மித்திரபேதம் செய்து கலக்கியவர்களுக்குப் பாத்தி யதை யுடையவன் தக்க சன்மானம் செய்யக்கூடிய சந்தர்ப்பமும் பிறகு வரும்.*




சீனா ஜப்பானில் உணவை ஏற்றுமதி செய்வதில்லை. மண்ணில் கிரகிக்கப்பட்ட தாது வர்க்கங்கள் அயல் நாட்டுக்குப் போவதில்லை. அப்பதார்த்தங்களையும், நாட்டில் மடித்துக் கழிந்தவைகளையும் சாக்கடை மூலமாய் சமுத்திரத்திற்குப் போகவிடாமல் எருவாக்கிவிடுவதால், வியவசாயம் விருத்திபட்டு, மண் இளைக்காமல் கொழுமைப்படுகிறது.

முந்திரிப் பழத்தை ஐரோப்பியர்கள் வறுத்து சக்கரையில் பதம் செய்வர். இப்பழத்திலிருந்து ஒயினும் எடுப்பர். இது குடிப்போருக்கு நீர் அதிகம் இறங்கும். பஞ்ச் என்னும் சாராயக் கலப்பிற்கு வாசனை ஏற்ற இப்பழத்தை வற்றுத்துச் சேர்ப்பார்கள். இதன் புஷ்பக்கிளையில் ஒருவித புளிப்பு உண்டு. இது ஒருவித லெம்னேட் செய்ய உதவும். இதிலிருந்து ஒயினும் காடியும் செய்வார்கள். முந்திரியில் பச்சைக் கொட்டையில் பருப்பு எடுத்தால் அநேக நாள் கெடாமல் இருக்கும். சுட்ட கொட்டையில் கிடைக்கும் பருப்பு சில நாளில் கெடும்.

கோவேறு கழுதைக்குக் குதிரையை விட ஆயுள் அதிகமாம்.

ஜப்பான் தேசம் 9-கோடியே 44-லக்ஷத்து 40-ஆயிரத்து 300-ஏகர்- விஸ்தீரணம். அதாவது சற்றேறக் குறைய சென்னை ராஜதானியின் விஸ்தீரணம். இதில் 17144049 ஏகரா ஜனங்களுடைய சொந்த தோப்புகள். இவர்கள் பயிர் நிலம் 11800000 ஏகர். அரிசியும் மீனும் முக்கிய உணவு. முட்டை, கோழி அப்போதைக்கப் போது உபயோகமாகிறது. பால் வெண்ணெய் அவர்களுக்குக் கிடையாது.

ஜப்பானில் மண் கொழுமையடைந்து வெண்ணெய்போல் நயப்பாயும், கைக்குச்சியை அமிழ்த்தத் தடையின்றி உள்ளே இறங்கும்படியாயும் இருக்கிறது, வயலில் வருஷத்தில் புருஷனுக்கு 210-நாட்களிலும், பெண்ணுக்கு 105-நாள்களிலும் வேலை யிருக்கும். எருவை நீரில் கரைத்தும், அல்லது குங்குமம் போல் நயமாக மட்க்ச்செய்தும் உபயோகிப்பார்கள். மீன் புண்ணாக்கு இவைகளைத் தூளாகச்செய்து எருக்குழியில் மற்றக்குப்பைகளோடும் சேர்ப்பார்கள்.

ஜப்பானில் தகுந்த அளவு ஆடுமாடு மிருகங்கள் இல்லையாதலால், மனிதரின் மலமே எருவாகிறது. இந்த எருவுடன் மீன் எரு, பிண்ணாக்கு எரு இரண்டும் சேர்த்து உபயோகிப்பர்.

ஐதராபாத் சந்தைக் கடைகளில் ஒட்டகம் சாதாரணமாய் விற்கப் படுகிறது. நூறு ரூபாய்க்குள் ஒரு ஒட்டகம் கிடைக்குமாம். இது 11-மாதம் கர்ப்பம் இருந்து குட்டிபோடும். குட்டி ஒரு வருஷம் பால் குடிக்கும். 8-நாளில் குட்டி 3-அடி உயரம் இருக்

---

கையில் காசு இல்லாதபோது கேவலம் செய்தவர்களுக்குச் சரியான பதில் எதுவெனில், தக்க பணப்புஷ்டியுடன் அவர்களின் முன்பு நடமாடுவதே. அவர்களின் நெஞ்சைக் குத்தி வேதனைப்படுத்த அது ஒன்றே போதும்.

கும் 17-வருஷத்தில் நல்ல பிராயம், 40-50-வருஷம் வரையில் வாழ்கிறது.

பச்சைப்பாலில் இயந்திர மூலம் எடுத்த வெண்ணெய் 20-நாள் போல் கெடாதிருப்பதுடன், ருசியும் தினே தினே அதிகரித்து, நெய்யும் மிகுந்த சுவையாயுள்ளது.

தேன் பூச்சிகள் ஒருவனைக் கொட்டினால் தேகத்தில் விட்டிருக்கும் முள்ளைக் கத்தியால் நோண்டி எடுக்கவேண்டுமே யல்லாது, சதையைப் பிடித்து நசுக்கக்கூடாது. அவ்வாறு நசுக்கினால் விஷம் அதிகம் சதையில் இறங்கும். நவச்சாரவாயு (Ammonia) ஸோடாவும் ஜலமும், லெமன் எஸ்ஸென்ஸ் (Essense of Lemon) முதலியவைகளைக் கொட்டின இடத்தில் வைக்க நோய் வாங்கும்.

நெருப்புக் கோழிகளை லாபத்துக்கு அமெரிக்காவில் வளர்க்கிறார்கள். 6-மாதக் குஞ்சு 20-சவரன். ஒரு வருஷத்துக்கோழி 30-பொன். நாலாவது வருஷத்தில் போகப் பக்குவம் அடைகிறது. அப்போது ஜதை 100-பவுன். பக்ஷி ஒன்று 12-ராத்தல் இறகு கொடுக்கிறது. ராத்தல் 5-சவரன் விற்கிறது. வருஷத்தில் 30-முதல் 90-முட்டையிடும்.

கொருக்காப்புள்ளி மரம் 100-150 வருஷம் வரை இருக்குமாம்.

அமெரிக்கர் ஆப்பில் பழத்துக்கு ஒரு ராத்தலுக்கு 9-பைசா கொடுக்க, ஒரு ராத்தல் வாழைப்பழத்துக்கோ $3\frac{1}{2}$ அணா கொடுத்து வாங்கி அருமையாய்ப் புசிக்கிறார்கள்.

பூலோகத்தில் ஒரு கோடியே ஐந்து லக்ஷம் ராத்தல் கற்பூரம் பல வேலைகளுக்கும் வேண்டி யிருக்கிறது. செல்லுலாயிட் (Celluloid) செய்வதற்கு 70-பாகமும், கன்காடன் (Gun cotton) என்னும் வெடிப்பஞ்சுசெய்ய 2-பாகமும், இடங்களைச் சுத்தப் படுத்த 15-பாகமும், மருந்துக்கு 43-பாகமும் உபயோகப்படுகின்றது. 20-பாகம் கற்பூரம் பார்மோசா (Formosa) தீவில் உற்பத்தியாகிறது. செல்லுலாயிட் என்பது கை வளையலுக்கு உதவும் மாய அரக்கு. இது மாயப் பவளமாகவும் வருகிறது. இவைகள் நெருப்பில் பட்டால் கற்பூரம் போல் எரியும். விலை சரசமென்று இதை நம்மவர் வாங்கி யணிவது அபாயமாம்.

பாலினால் செய்யும் வர்ணம் மர வேலைகளுக்கு உதவுகிறது. $2\frac{1}{2}$-படி எருமைப்பாலில் ஒரு வீசை சிமிட்டி கலந்துகொண்டே யிருக்கவேண்டும். அடியில் படியும் சிமிட்டியைப் புருஷால் எடுத்துத் தடவிக்கொடுக்க வேண்டும். ஆறு மணிநேரத்தில் கல் போல் பிடித்துக்கொள்கிறது. பிறகு இது விடுவதில்லையாம்.

ஐரோப்பாவில் கோழி, வாத்து முதலியவைகளின் மயிர் சேகரிக்கப் பட்டுத் தலையணைக்கு உதவுகிறது. 2-ராத்தல் கொண்ட தலையணை $3\frac{3}{4}$ முதல் $5\frac{1}{4}$ ரூபாய்க்கு விற்கிறது. எதிலும் பிழைக்க வழிதேடுவது மேனாட்டிரின் சுபாவம்.

ஒரு மனிதன் ஒரு நாளைக்கு முக்கால்படி ஜலம் குடிப்பது அவசியமாகிறதாம். அதற்கு மேற்பட்டு அருந்துவது அவசியத்துக்கு மிஞ்சியதாம்.

---

தமது குடும்ப அமைப்பைப்பற்றிய உள்விஷயங்களில் விசேஷ சிரத்தையுள்ளவரென்று தங்களைக் காட்டிக்கொள்ளாமலே அதிலேயே சொந்தலாப திருஷ்டியா யிருப்போர் சிலர் உண்டு. இவர்கள் மற்றவர்களை ஏமாற்றி மயக்குவதில் தீரர்கள்.

ஒவ்வொரு நபருக்கும் வித்தியாவிஷயமான செலவு:—

| | | |
|---|---|---|
| ஜர்மனி | ரூ. | 5—7—2 |
| பிரான்சு | ரூ. | 3-13-11 |
| இங்கிலாந்து | ரூ. | 3—0—0 |
| ஜப்பான் | ரூ. | 1-10—8 |
| ஸ்பெயின் | ரூ. | 1—7—2 |
| இதலி | ரூ. | 1—1-11 |
| பரோடா | ரூ. | 0—7—0 |
| இந்தியா | ரூ. | 0—1—1 |

**பால் கறக்கும் மரம்** (Gymnema lctifera) ஸிலோன் தீவில் உண்டு. இது எருக்கச் செடிவகையில் சேர்ந்தது. இதன் பால் பசும்பால்போல் குடிக்க உதவுகிறதாம்.

சீன தேசத்து சந்தைகளில் வாழை நார் வஸ்திரம் ஒரு கஜ அகலம் 5-கஜ நீளமுள்ள துணி 17-ரூபாய்க்கு விற்கப்படுகிறது. இதன் விசேஷ மென்னவெனில் அநேக வருஷம் கெடாமலிருப்பதேயாம்.

ஒருவனுக்குக் கெடுதிசெய்வதற்கு

சந்தர்ப்பங்கள் அடிக்கடி கிடைத்துவிடலாம். அவன் நம்மை எவ்வளவோ கேவலப்படுத்தியவனுயிருக்கலாம். மோசமும் செய்திருக்கலாம். அத்தகையோனுக்கு இன்ன வழியில் கெடுதி செய்ய முடியுமென்று மட்டும் காட்டி அவன் மனதில் தைக்கச் செய்துவிட்டு, செய்ய முடிகிற கெடுதியைச் செய்யா திருந்துவிடு. அதுவே தேவ குணம். கெடுதிக்குப் பதில் ரகசியமாய் நன்மைபுரி.

## தெய்வத் தூண்டுதல்.

மேலதிகாரி கொடுப்பதாக எழுதிய குமாஸ்தா வேலைக்கு ஒப்புக்கொள்ளச் சம்மதித்துக் கடிதம் எழுதப் போகையில் மனம் ஒருவிதமாய் மாறி மானேஜர் வேலையே தனக்கு வேண்டுமென்றும், கேவலக் குமாஸ்தா வேலை தனக்குத் தகாதென்றும் எழுதிவிட, அப்படியே மானேஜர் வேலை கிடைத்துவிடுகிறது! காலுக்கு வெள்ளி கொலுசு வேண்டுமென்று வெளியூரிலுள்ள தன் கணவனுக்கு எழுதப் போகும்போது, பக்கத்திலுள்ள பெண், அது பிறகு ஆகட்டும், இப்போது கைகொலுசுக்கு எழுது எனத் தூண்ட, அவ்விதமே பொன் கைகொலுசு கிடைத்துவிடுகிறது. மூன்றணு பேசிய வண்டிக்காரன் பிறகு அதற்கு அதிர்ப்திபட நாலணு கிடைத்துவிடுகிறது. இவை தன்னையே அறியாது தற்செயலாகத் தோன்றும் தெய்வத் தூண்டுதல்களாகும்.




# கமலாவதி.

(*All Rights Reserved by the Authors.*)

நாகர்க்கூர் என்பது கம்பல் ஆற்றங்கரையிலுள்ளது. இவ்வாறானது நாகர்க்கூரைப் பாம்புபோல வளைந்துச் செல்லும். நாகர்க்கூரோ சுற்றி மதிலும், மதிலை யடுத்த அகழியும் சூழப்பெற்றிருக்கும். உள்ளே ஒரு உயர்ந்த கோட்டை யுண்டு. அக்கோட்டையும், அககோட்டை மேல் பறக்கும் கொடியும் நெடுந்தூரம் காணப்படும். அந்நகரில் இரண்டு கோயில்கள் உள.

சுமார் நானூறு வருடங்களுக்கு முன்னர் ஆனி மாதத்திலோர் நாள் அதிகாலையில் அரசன்மகள் கமலாவதி படுக்கையினின்றும் எழுந்து பலகணி வழியாய் வெளியிற் பார்த்தாள். இளங்காற்று சில்லென வீசிற்று. மலர்களில் மணங் கமழ்ந்தது. சமீபத்தில் ஆற்றோரமாய் மதிலடியில் வெளிச்சம் தோன்றியது. அவ்வெளிச்சத்தைக் கண்டு அவள் ஆச்சரியப்பட்டாளாயினும், அப்பால் பலகணியைச் சாற்றிப் படுத்துறங்கினாள். அந்தோ! அவ்வெளிச்சம் யாதென்று யோசித்திருந்தாலாவது, அடுத்துறங்கிய காவலாளர்க்கு அறிவித்திருந்தாலாவது தனக்குக் கேடு சம்பவித்திராது. **தான் இருந்து கேட்டை விலக்கவேண்டிய வேளையில் அந்ததான் இல்லாமல் விரைந்து சென்றுவிடுவது விதியின் கொடுமை. கேடும் பின்னர் அணைப்பாரில்லாத நெருப்புபோல் எதிர்ப்பற்றுச் சூழ்ந்துகொள்கின்றது.**

ஓர் மொகலாயர்படை அந்நகரைக் கைப்பற்ற எண்ணி ஒருவரும் அறியாது நெடுந்தூரம் நடந்து அன்று அர்த்தராத்திரியில் அவ்வாற்றங்கரை சேர்ந்தது. அப்படையைச் சேர்ந்த சிலர் சுருட்டுப் பிடித்துக்கொண்டிருந்தார்கள். அச்சுருட்டின் வெளிச்சமே கமலாவதி கண்ட வெளிச்சமாகும். சண்டைசெய்து ஊரைக் கொள்ளையிட்டுப் பணம் பறிக்க வேண்டுமென்பதும், கோயிலிலுள்ள வைர நகைகளையும் மற்றவைகளையும் வாரிப்போக வேண்டுமென்பதும் மொகலாயருடைய கருத்து. அவர்கள் தலைவனான

பிறர் பெண்களைக் கற்பழித்தவன் தன் மனைவியிடத்து மற்ற புருஷர்களின் நாற்றம் கூட வராதபடி வெகு ஜாக்கிரதையா யிருப்பானும்!

பத்ஜங்கோ முப்பது வயதுள்ள வாலிபன். மற்போரிலும் குத்துச் சண்டையிலும் சமர்த்தன். அச்சம் என்பதும், தோல்விஎன்பதும் அணுவேனும் அறியாதவன். கமலாவதியின் கட்டழகைக் கேட்டு அவளை எப்படியாவது கொண்டு செல்லவேண்டு மென்பது அவன் எண்ணம். அவனுக்கு வேண்டியது பொன் அன்று; பூமி யன்று; பொன்னினும் பூமியினும் உயர்ந்த பொற்புள்ள கமலாவதியாகும். கமலாவதி கிடைப்பாளாயின் தனக்குக் கிடைக்கும் பொருள் அனைத்தும் தன் சேனைகளுக்குக் கொடுக்க சம்மதம் தான்.

கமலாவதியோ சுரிகுழலும், சுந்தரமுகமும் உடையாள். அன்னம் போன்ற நடையும், தளிரை யொத்த மேனியு முள்ளாள். கருந்தடங்கண்கள் மான் பார்வையோ, சேற்கண்டையோ, செந்தாமரையோ செப்புதற்கரிது. இவளுடைய அழகும், குணமும் எங்கும் பரவியிருந்தமையால் இவளை மணஞ்செய்யவேண்டி இளவரசராவார் ஒருவர் மேலொருவராக ஆயிரவர் விழுந்து வந்தார்கள். ஆகவே பத்ஜங்கு இவள்மேற் காதல் கொண்டது ஆச்சரியமன்றே. மொகலாயருள் பலர் அன்றெல்லாம் நடந்த அலுப்பால் ஆற்றின் மணலில் படுத்துறங்கினார்கள். ஓர்பால் ஆகாயத்தை அளாவியுள்ள மா மலையும், நாகர்க்கூரின் கட்டிடங்கள் பலவற்றுள்ளும் உயர்ந்து காணும் கோயிற் கோபுரங்களும் அச்சத்தைத் தருவனவாகும். ஓர்பால் ஆற்றங்கரை குன்றம் போலும் உயர்ந்து கன்னங்கரேலென்று கறுத்துக் காணும், தலைக்கு மேலே ஆயிரக் கணக்காய் விண் மீன்கள் மின்னிக்கொண்டிருக்கும், அவ்விண்மீன்களினொளியால் தரையிற் கிடக்கும் கூழாங்கற்களும், சலசல வென்றோடும் தண்ணீரும் பிரகாசித்துக் கொண்டிருக்கும். மொகலாயர் பிடிக்கும் உக்கா ஓசையும், ஆற்றிலோடும் தண்ணீர் ஓசையுமல்லால் வேற்றோசையில்லை.

(தொடரும்.)

ப. சி. கோவிந்தசாமி ராஜா.

ஒருவர் உன்னை எதிர்த்துப் பேசியதாக ஒருவன் சொல்லுகையில், அதற்காக நீ கொள்ளுகிற மனவருத்தத்தை அவன் தெரிந்துகொள்ள விரும்புகிறான். அவன் ஏதும் கிரகிக்க முடியாதபடி யாவும் மனத்துள் அடக்கி சிரித்தபடியே சாதாரண நிலையில் உன் முகத்தைக் காட்டினால், அவன் ஏதும் உணர்வதற்கின்றி ஏமாறிவிடுவான். உன் அபிப்பிராயத்தைப் பிறர் அறியாதபடி செய்.

---

தான் ஸம்பாதிக்கும் பணம் தன் மனைவிமீது நகைகளாகவும், தன் மக்கள் பேரில் பாங்கியிலும் இருந்தால் அது தனக்கு எந்த நாளிலும் உதவுவது நிச்சயம். ஆனால் பந்துக்களின் கைக்குப்போன பணம் தனக்கு உதவுமா?

ஏமாறுகிறவரையில் அவனைக்கொண்டாடி உயர்த்துவார்கள். ஏமாறியது போதுமென்று அவன் விழித்துக்கொள்ளுகையில் அவனை வஞ்சகன்—பேத புத்தியுள்ளவனென்று பலரிடமும் சொல்லிச் சபித்துத் தூற்றுவர்.




## Letter XIX.

*The answer*

Sir,

It was never my design to oppress you. I have had long trial of your honesty, and therefore you may rest perfectly satisfied concerning your present request. No demand shall be made by me, upon you for rent, until it suits you to pay it; for I am well convinced you will not keep it from me any longer.

I am yours sincerely

*Sundara Rangan*.

## 19-ம் கடிதம்.

அதற்குப் பதில்.

ஐயா,

உம்மை வருத்தப்படுத்த ஒருபோதும் நான் நினைத்ததில்லை. உமது யோக்கியதை நெடுநாளாக எனக்குத் தெரியும். ஆகையால் நீர் இப்போது கேட்ட காரியத்தைக் குறித்து ஒரு விசாரமும் படவேண்டியதில்லை. குடிக்கூலியைக் கொடுக்க உமக்கு இசையுமளவும் உம்மை நான் அதைக் கேட்கிறதில்லை. நாட்பட எனக்கு அதைக் கொடாதிருக்க மாட்டீரென்பதெனக்கு மிகுதியும் நிச்சயமாயிருக்கின்றது. இப்படிக்கு,

உண்மையான உமது ஊழியனாகிய

**சுந்தா ரங்கன்.**




அன்பு மிக்க ஐயா,

நான் தங்களது அமிர்தபானத்தை அருந்தி அதன் சிறு துளிகளைக் கீழ்கண்ட விலாசதாரருக்கு ஊட்டியதில் அன்னாருக்கு ஆனந்தம் பொங்கி அறிவு மயங்கியதால் அம்மயக்கத்துடனேயே தன் விலாசத்திற்கு ஒரு மாதிரி பத்திரிகை வைகாசிமீ பத்திரிகை வரவழைக்கச் சொன்னார். பின் அம்மயங்கிய அறிவு திரும்பி சுவாதீனத்திற்கு வந்தபின் பணத்தை மணியார்டர் செய்யச் சொல்லி சந்தாதாரராகச் சேர்ந்து கொள்ளப் பிரியப்பட்டார். ஆகவே, அவருக்கு மாதிரி காப்பி யனுப்பிக் கௌரவித்தும் சந்தாதாரராக்கி ஆதரிக்கவும் கோருகிறேன். நமது "அமிர்த குணபோதினி"யிலுள்ள ஒவ்வொரு வார்த்தைகளுக்கும் ஒவ்வொரு முத்தம் கொடுக்கலாமென்றும் ஒவ்வொரு பக்கத்தின் கீழ்பாகத்தில் கோடிட்டு வரைந்துள்ள ஒவ்வொரு வாக்கியத்தையும் எழுதிப் பிரேம் கண்ணாடி போட்டு மாட்டலாமெனவும் எண்ணுகின்ற,

**கா. ஆறுமுகம்.**

# பிரபஞ்ச தரிசனம்



## அக்பர் சமஸ்தானத்தின் உன்னதம்

### III

நிலத்தையெல்லாம் நன்றாக அளவு செய்து அக்பர் பாதுஷா வரியேற்படுத்தினார். அந்த வரி ஒரு ஹிந்து அரசரால் முதலில் உண்டாக்கப்பட்டது. அதை அபுல்பேஜில் என்கிற பண்டிதர் தாம் எழுதிய சரித்திரத்தில் விவ்ரமாக வரைந்திருக்கிறார். அக்பர் பாதுஷா ஏற்படுத்திய நிலவரிக்கு மூன்று பிரயோஜனமுண்டு. முதலாவது: நிலத்தின் விஸ்தீரணத்தைத் தெரிந்துகொள்வது. இரண்டாவது: ஒவ்வொரு நிலத்தின் சாகுபடியை இவ்வளவென்று கணக்கிட்டு வரியேற்படுத்துகிறது. மூன்றாவது: இவ்வளவு பணம் இவ்வளவு தானியத்துக்குச் சமானமென்று நிதானிப்பது. இந்த ஏற்பாட்டை முன்னிட்டு நிலத்தை முற்றும் அளந்து அதின் விஸ்தீரணத்தைக் கண்டுகொண்டார்கள். சாகுபடியையும் இவ்வளவென்று ஏற்படுத்தினார்கள். நிலத்தினுடைய வளத்தையும் மற்ற சௌகரியத்தையும் கவனித்தார்கள். நிலத்தைத் தோல்வாரினால் அளந்தால் அந்த வார் நீளவும் குறுகவும் கூடியதானதால் அளவு திருத்தமாக ஏற்படாதென்று அதற்குப் பிரதியாக இருப்புச் சங்கிலியால் அளந்தார்கள்.

* * *

சாகுபடியில் மூன்றில் ஒரு பாகம் வரியாக ஏற்பட்டது. அது அதிகமென்று காணப்பட்டால் ஒவ்வொரு குடியானவனும் நிலத்தை அளக்கச் சொல்லி மாசூலையும் பாகித்துக் கொடுக்கலாம். முதலில் வருஷத்துக்கு ஒரு தரம் வரி ஏற்படுத்தினார்கள். பின்பு பத்து வருஷத்துக்கு ஒரு தரம் மாற்றினார்கள். உத்தியோகஸ்தர்களுக்குப் போட்டிருந்த வரிகளையெல்லாம் நீக்கினார்கள்.

* * *

அக்பர் பாதுஷா காலத்தில் தரகர்களை நீக்கிவிட்டார்கள். தான்யங்கள் மேல் போட்டிருந்த வரிகளையெல்லாம் பாதுஷா அடியோடு எடுத்துவிட்டார். அவர் பட்டத்துக்கு வந்த பதினேழாம் ஆண்டில் எண்ணெய், உப்பு, சர்க்கரை, வாசனைத் திரவியம், செப்புப் பாத்திரம், நார்ப்பட்டு, கம்பளம், விறகு, புல் முதலானவைகளுக்குப் போட்டிருந்த வரியை எடுத்துவிட்டார். குடியானவர்களுக்கு இன்றியமையாத சாமான்க

இறந்துபோவார்களென்று நினைத்தவர்கள் இறப்பதில்லை. சிறு வயசு; இறக்கமாட்டார் என்று எண்ணியவர்கள்தான் திடீரென்றுபோய்விடுகிறார்கள்.

ளுக்கு வரியில்லை. தனவான்களுக்கு உபயோகப்படுகிற பொருள்களுக்கு மாத்திரம் தீர்வை யேற்பட்டது. யானை, குதிரை, ஒட்டகம், பட்டு, ஆயுதம், செம்மறியாடு, வெள்ளாடு முதலியவற்றிற்குத் தீர்வை நூற்றுக்கொன்று வீதம். அக்காலத்தில் உப்பு வரி, சாராய வரி முதலிய வரிகள் கிடையாது. அபினி வரியும் இல்லை.

***

ஆதி காலத்தில் குடிகள் ஆறில் ஒரு கடமை அரசனுக்குச் செலுத்தி வந்தார்கள். ஆப்கான் தேசத்து ஷியர் என்பவர் அதை நாலில் ஒரு கடமை யாக்கினர். அக்பர் பாதுஷா அதை மூன்றிலொன்ருக்கினர். அவர் போட்ட நிலவரி முன்னிருந்ததை விட அதிகமாயினும், அதை நன்ருக நடத்திவந்தபடியால் குடிகளுக்கு அதிஞல் குறைவில்லை யென்று அபுல் பேஜில் சொல்லியிருக்கிருர். மற்ற அநேக வரிகளை எடுத்துவிட்டபடியால் பேரீஜ் குறைந்துவிட்டது. வரிகளை வாங்குவதற்குச் செல்லும் செலவும் அவ்வாறே குறைந்தது. ராஜ்யத்தின் வரும்படி சற்றேறக்குறைய ஒரே யளவாயிருக்கக் குடிகளுடைய சௌக்கியமோ அதிகரித்தது.

***

முற்காலத்தில் நிலவரியைக் குடிகளும் ஜமீன்தாரும் பங்கிட்டுக் கொண்டிருந்தார்கள். குடிகள் தங்களுடைய உழைப்புக்குத் தகுந்ததை எடுத்துக்கொண்டு மற்றதை ஜமீன்தாருக்குக் கொடுத்து விடுவார்கள். இந்து தேசத்தை மோகலாயர் கைப்பற்றியபோதும் அப்படியே நடந்து வந்தது. மோகலாயர் கொஞ்சமாயிருந்தபடியால் தாங்கள் கைப்பற்றிய தேசத்திலிருந்த ஜமீன்தார்களோடு சமாதானமாக வாழ்ந்திருக்க வேண்டியதாயிற்று. மோகலாயர் யாவரும் ஒருங்குசேர்ந்து வாஸம் செய்தார்கள். எப்போதும் ஆயுதபாணிகளா யிருந்தார்கள். அக்பர் பாதுஷாவினுடைய ராஜ்யம் ஆங்கிலேயருடைய ராஜ்யத்தைப் பார்க்கிலும் சிறிதாயினும் அவருடைய வரும்படி அதிகமாகவும் வரிகள் குறைவாகவும் இருந்தன.

***

அவர் ஏற்படுத்திய நிலவரியில் பிசகுகள் இருந்தபோதிலும், அவருடைய அரசாக்ஷியில் ஐம்பது வருஷ காலத்தில் குடிகளுக்குள் பின் சௌக்கியம் மிகுதியாயிருந்தது. அக்பர் காலத்தில் நிலவரி இருபத்தைந்து கோடி ரூபாய். அக்பர் ஏற்படுத்திய தீர்வை நூற்றில் முப்பத்து மூன்றுக்கு மேலில்லை. அக்பருடைய வரும்படி யெல்லாம் இத்தேசத்திலேயே செலவாய் விட்டது. ஆங்கிலேயர் அரசாக்ஷியிலோ பெரிய தொகைகள் வெளித் தேசத்துக்குப் போய் விடுகின்றது.

அக்பர் பாதுஷாவின் காலத்தில் கிராமங்களிலிருந்து சாகுபடி கணக்குகளும் மற்றநேக விதமான கணக்குகளும் வந்துகொண்டிருந்தன. தேசத்தின் வாஸ்தவமான நிலைமையைத் தெரிந்துகொள்வதற்காகவே மேற்படி கணக்குகள் ஏற்படுத்தப்பட்டன. குடிகளுக்கு வேண்டியது இன்னதென்று தெரிந்துகொள்ளவும், அவர்களுடைய க்ஷேமத்தின் பொருட்டுச் செய்ய வேண்டிய காரியங்களை அறியவும் அந்தக் கணக்குகள் உபயோகப் பட்டன. அவற்ருல் கொடுமைகள் வெளிப்பட்டன. அநேக குறைகள் நீங்கின.

(தொடரும்.)

---

இரக்கமும் பச்சாத்தாபமுமே மனிதரை ஏனைய ஜீவராசிகளினின்றும் பிரிக்கும் குணங்கள்.




இன்று கூடிய நமது கடையில் போகிணி செட்டியார் கூட்டு வியாபாரத்தைப் பற்றிப் பேசினார். "உழைக்கிறவன் ஒருவன், பணக்காரனைப் பெரிய ஸ்தானத்தில் இருந்துகொண்டு எவ்வித உழைப்பையும் கொள்ளாமல் பணத்தையும் செலவிடாமல் கூட்டாளி என்கிற பெயரை மட்டும் சம்பாதித்துக்கொள்கிறவன் ஒருவன்; ஆக இருவரும் சேர்ந்து வியாபாரம் செய்யத் தொடங்குகிறார்கள். கடை நன்றாக விருத்தியாய் விடும்போது அவ்வளவுக்கு உழைத்து அதை முன்னுக்குக் கொண்டுவந்த உழைப்பாளியின் பெயரைப் பணக்காரக் கூட்டாளி வெளியில் சொல்லிக்கொள்ள மறுத்துவிட்டு-தன் உழைப்பாலேயே கடை அவ்வளவு தூரம் முன்னுக்கு வந்ததென்றும், தான் கட்டிய வீட்டிற்கு அந்த உழைத்த உழைப்பாளி சுவருக்கு வர்ணம் பூசியதுபோல் வேலை செய்ததைத் தவிர வேறு எதுவும் செய்யவில்லையென்றும் சொல்லி எல்லா கௌரவத்தையும் தானே பெற்றுக்கொள்ள முயல்கிறான். இது உண்மையில் உழைத்த உழைப்பாளியை அலறச் செய்துவிடுகின்றது. ஐயோ! ஏன் இந்தக் கூட்டு வியாபாரத்தில் தலையிட்டோம்? நாமே சொந்தமாய் உழைத்திருந்தால் இந்தப் பாடு இராதே என்று உள்ளம் உடைகிறான், நொந்துபடுகிறான். எப்பொழுதுமே கூட்டு வியாபாரத்தின் லக்ஷணம் ஆபத்தாகவே இருக்கிறது" என்று பேசினார்.

***

"ஒருவனுக்கு ஆகவேண்டிய காரியங்களை அவன் நினைத்தவாறாக வெல்லாம் தொடர்ச்சியாய் ஒவ்வொன்றிலும் கடவுள் நிறைவேற்றிச் செல்லுகிறார். அவனே ஆச்சரியப்பட்டு விடும்படியான அபார சக்தியையும் புத்தி வன்மையையும் கடவுள் அவனுக்குக் கொடுத்து அவனை ஒவ்வொரு வேலையும் திறமையாய் நடத்தப்படுதற்கு வழி செய்து கொடுக்கிறார். அவன் சென்ற இடத்திலெல்லாம் அவனது காரியங்களை வெற்றியுடன் முடிக்கும்படி அனுக்கிரகிக்கிறார். தொட்டதெல்லாம் நிறைவேறி விடுகிறதே என்று அவனே ஆச்சரியப்பட்டு ஓ! இது கடவுளின் தூண்டுதல் என்று பிரமிக்கிறான். அவனுக்குச் செலவிடப் பணத்துக்கு எவ்வளவு தத்தளிப்பாயிருந்தாலும், பல வருவாய்களின் மூலம் அந்தக் கஷ்டத்தை நிவர்த்தித்து, பணத்தின் தடையால் எந்தக் காரியமும் விக்கினமாய் விடாதபடி செய்து ஸகலமும் ஒழுங்காய் முடியும்படி புரிகிறார். இது மகத்தான ஆசீர்வாதமல்லவோ! இவ்வளவு நேர்மையாகக் காரியங்களை முடித்துக் கொடுத்த கடவுள், மாங்கல்யம் சூட்டப்

---

தன் குணங்களைத் தன்னவர்களுக்குச் சுடச்சுடத் தெரிவிக்காமலே தெரிவிப்பதற்கு வெளியூரில் இருக்கிறவனுக்குத்தான் நல்ல வசதியுண்டென்கிறார் ஒருவர்.

போகும் சமயத்தில் அந்த மணப் பெண்ணின் ஆவியைக் கொள்ளை கொண்டு விடுவதுபோல் ஒரு பலத்த இடையூறை அக்காரியத்தின் முடிவில் கொண்டு வந்து நிறுத்திவிடுகிறார். வெகு உத்ஸாகத்துடன் தொடர்ந்து வேலை செய்தவன் இந்த சோதனையைக் கண்டு திடுக்கிட்டுத் தவித்துப் போய்விடுகிறான்! ஹா! எவ்வளவு ஒழுங்காய்க் காரியங்கள் நிறைவேறின; அதற்கு எவ்வளவோ ஸந்தோஷப்பட்டேனே, முடிவில் இலையில் உட்கார்ந்து புசிக்கப் போகும்போது இலையிற் படைத்த சாதத்தின் மீதே வாந்தி யெடுத்து அதையும் கெடுத்துத் தானும் உண்பதற்கு இல்லாதது போல் இந்த நினையாத சோதனை எதிர்ப்பட்டுக்கொண்டு விட்டதே யென்று ஏங்குகிறான். தெய்வச்செயல் ஒருவிதமாக இருக்கவில்லை; மனிதன் தனது அல்ப புத்தி கொண்டு அதை ஒரு விதமாய்த் தீர்மானிக்கவும் கூடவில்லை'' என்று அல்லாபிச்சை நவின்றார்.

* * *

''ஓர் இரவு பட்டினியிலே'' என்று தொந்திராயர் பின்வருமாறு பேசினார். ''எனக்குப் பிணியே வாராது என்று நினைத்ததும் ஒரு காலம்! விதிவசத்தால் நோயுற்றேன். அதனால் இரவு முற்றும் மெலிகையில், என் மனைவி சுகமே புரிவாள் துயில்! நடுநிசிவரை விழித்துக் காத்துக் கஞ்சி தந்து கை கால் தலை யெல்லாம் பிசைந்து உட்கார்ந்தவாறு தூங்கி என்மேல் விழுந்த பெரியோர்கள் யாவருமே காலத்தின் வசமாகி மறைந்தனர். பித்தனாய் அன்னோரை நினைக்கின்றேன் இது போழ்திலே!

யான் காத்துப் பேணவேண்டிய மனைவி மக்களெனும் இளையவர் கூட்டம் தான் இந்நாள் உள்ளதே யன்றி, என்னைக் காத்துப் பேணும் என்னிலும் முதியவராம் பெரியோர் எவரையும் காண்கிலேன்! இனி அவர் வருவதும் ஏதே!

என் நோய் நீங்க என் நண்பரின் இல்லத்தில் இருந்தபோது, ஒருதினம் இரவு எனக்கு எதுவுமே வேண்டாம், புசிக்கச் சக்தியில்லை யென்றேன்.

நோயாளியின் சொல்லும் ஓர் சொல்லோ! ஒன்றை வேண்டாமென்பவன் மறுநிமிஷமே அதில் ஆசை கூர்வான். உலகப் பண்டங்கள் முழுதும் அப்பொழுது விரும்புவான். புசிப்பது மட்டுமில்லை; வாயும் கசப்பு, வயிறும் கொள்ளாது!

பட்டினியாகவே அன்றிரவு ஏழு மணிக்கே பாய் விரித்துப் படுத்த நான் என் நித்திரை கலைந்து விழிக்கையில் மணி பதினொன்றானது.

எழுந்தேன், மிக்க சோர்வு, வெகு ஆயாஸம், தாங்கொணாப் பசி, ஏதாவது நான் உண்ணுதற்கென வைக்கப்பட்டுளதோ வென்று என்னைச் சுற்றிலும் ஆராய்ந்தேன்.

ஏதுங் காணேன். நான் இரவுக்கு வேண்டாமென்றதால் எதுவும் வைத்திலர் போலும்: என் செய்வேன்! அது சமயம் விளக்கு அணைத்து யாவரும் துயின்றவாறு இருந்தனர். எவரை எழுப்புவதோ! எழுப்பி என் பசியைச் சொல்ல மனதும் நாணியது. களைப்புடன் படுத்துக் கண் மூடினேன்.

மிகுமிகு ருசிகரமுள்ள ஊறுகாய் ஒரு ஜாடி உருக்கமுடனே என் நண்பர் கொண்டுவந்து என்னை எழுப்பிக் கொடுத்தார். அத்தனையும் ஒருமிக்க உண்டு ஜாடியைக் காலி செய்தேன். பசியும் தணிந்ததென நினைக்கையில் —விழித்துக் கொள்ளவே, ஓ! இது கனவென அறிந்தேன். பசியும் அதிகமாயது.

மறுபடியும் கண் மூடினேன். வாழைப் பழமாவது வாங்கி வைத்திருக்கலாகாதா? அது இருந்தால் பசியாறுமே யென எண்ணுகையில், அநேக பக்ஷணங்கள் நிறைந்த தட்டொன்று என் முன் வைக்கப்பட, அப்பபடாவென்று புசித்துக் களைப்பாறினேன். பின்பு விழித்தேன்—இதுவும் ஓர் கனவே!

மீண்டும் கண் மூடினேன்.

நித்த நித்தம் பாலும் கஞ்சியும் பருகத் தெவிட்டுதலாலே, தயிர் விட்டுப் பிசைந்த சாதமும், உப்பிலிட்டு ஊறப்போட்ட வறுத்த குடை மிளகாயும் இருந்தால் எதுவுமே வேண்டேன் எனச் சொல்விக் கொண்டேன். அவ்விதமே செய்து என்முன் வைக்கப்பட வெகு ஆசையாய் உண்டேன். பின் விழித்தேன்—இதுவும் கனவே!

பசியோ சகிக்கத் தாளவில்லை. பக்கத்திலோ பாயின் துணையன்றி வேறு எவருமில்லை. கடிகாரமோ மிக்க மெதுவுடன் சென்று கொண்டிருந்தது. மணியோ ஒன்றுதான் ஆனது. கண் மூடினேன்.

ஆகாசத்தில் பறந்தேன். இந்திர லோகம் போனேன். ஒரு மனைவி இருக்க இன்னொருத்தியையும் மணந்தேன். ஒருத்தி மாதவிலக்கானால் இன்னொருத்தி சமையல் வேலை செய்ய உதவுவாளென எண்ணினேன்! இருவரும் என் இருபுறத்திலும் சயனித்தனர். இருவரின் கால்களும் பொத்து பொத்தென்று இரவு முற்றும் என் மேற்பட்டு நல்ல உதைப் பூசை கிடைத்தது! ஐயோ! அங்கும் வந்தது பாழும் பசி! இவளை எழுப்பினேன்; அவளை எழுப்பினேன். எந்தச் சிறுக்கியும் எழுந்து என் பசிக்கு உணவு தந்தாளில்லை! புறண்டு புறண்டு படுத்தனர். பசியோ பசி! நிசி இன்னும் தொலைந்திலது. வாய்விட்டு நான் கதறவே—விழித்துக் கொண்டேன். ஆ! இதுவும் கனவே!

கனவே இதுவெனினும், ஒரு நங்கை யிருக்கையில் மற்றொரு மங்கையை மணந்த மடமைச் செயலின் மா பெருந்தொல்லை ஒரு சிறு கனவாய்ப் பொய்யாய்ப் பழங்கதையாய் ஒழிந்ததுவும் என் பாக்கியமே யன்றோ?

வெகு சோர்வு. மணியும் நாலானது. விடிந்ததும் பசி தீர நாலணா இட்டிலி நன்று யுண்ண வேண்டுமென நினைத்தேன். இனி என்றைக்கும் நடு இரவுக்கான ஓர் உணவும், பருகுதற்கு ஜலமும் கையில் இன்றி இரவுப் படுக்கையை விரிப்பதில்லை யெனத் தீர்மானித்தேன். கண் மூடினேன்.

எத்தனைதான் பிணியால் வெறுப்பு மிகினும், சகித்து, முக்கி முக்கிச் சிறிதேனும் உணவு உட்கொண்டிருப்பின், இத்தனை கனவும் பசித்தொல்லையும் இராதே; ஏனோ இரவு உணவு வேண்டாமென்றேன்—என என்னையே நொந்துகொண்டேன். விழித்தேன். இங்ஙனம் சிந்தித்ததுவும் கனவில்தானெனக் கண்டேன். பொழுதும் என் உள்ளம் குளிர விடிந்தது. சூரியோதயமும் ஆனது. பிறகு நான் உண்பதற்குப் பேசவும்வேண்டுமோ?"

என்று தமது பட்டினியை ஓர் கதையாய்க் கூறி முடித்தார். ஓர் இரவுப் பட்டினிக்கு இத்தனை அலறுகையானால், எத்துணை ஏழைகள் நித்தமும் பட்டினியாய்க் கிடக்கின்றார்கள்! அவர்களின் கண்ணீரை எண்ணினார் யார்? கடவுளே கதி! இத்துடன் நமது கதையும் முடிவு பெறுகிறது.

பொன்வண்டு செட்டியார்.




## ஒருமித்த மூன்று வகைகள்.

1. அறி-யாமை, ஐயம், திரிபு
2. இச்சா-சக்தி, ஞான-சக்தி, கிரியா-சக்தி
3. உத்-தேசம், இலக்-கணம், பரீக்-கை
4. உம்மை, இம்மை, மறுமை
5. உயிரி-லுள்ள தீ, உதரத்-துள்ள தீ, [சினத்-தில் எழும்-தீ
6. கரும-காண்-டம், ஞான-காண்-டம், [பக்தி-காண்-டம்
7. காமம், வெகுளி, மயக்-கம்
8. காலம், தேசம், வர்த்த-மானம்
9. செய்தல், செய்-வித்தல், உடன்-படல்
10. தலைப்-படு தானம், இடைப்-படு தானம் கடைப்-படு தானம்
11. தன-வைசியர், பூ-வைசியர், கோ-வைசி [யர்
12. பூமி, அந்த-ரம், சுவர்க்-கம்
13. மெய் கூறல், புகழ் கூறல், பழி கூறல்
14. மேட வீதி, இடப வீதி, மிதுன வீதி

II

1. மலை வளர் சிறகு கண்டேன்
2. வாரிதி நன்னீர் கண்டேன்
3. அலை கடல் கடையக் கண்டேன்
4. அயன் ஐந்து சிரசும் கண்டேன்
5. இந்-திரன் இரு கண் கண்டேன்
6. சிலை மதனன் உருவம் கண்டேன்
7. சிவன் சுத்தி கழுத்து கண்டேன்

(இவ்வளவு கண்டிருந்தாலும்)

8. **கொடுத்து வாங்கக் காணேன்.**

நீலா
லாலா
பாலா
லீலா
நதி
பதி
துதி
கதி
உரு
கரு
பொறு
சிறு
மண்
பொன்
பெண்
கண்
விதி
வழி
மதி
தானே

(தொடரும்.)

# சிறுமணித்திரள்

(169-ம் பக்கத் தொடர்ச்சி.)

574. நித்திரையைக் கெடுத்துக் கொண்டு படுக்கையினின்று எழுந்து வந்தால் அப்போது முகமும் உள்ளமும் எப்படி இருக்கும்? இதை நினைத்துப் பார்த்ததுண்டா?

575. அந்தக் காந்தாமணியின் காந்தி பொருந்திய ஒருவித சக்தியானது அப்புதுமணமகனின் தேகமெங்கும் வியாபித்து இதுகாறுமில்லாத ஒரு புதிய தேஜஸை யுண்டுபண்ணி அவரைக் கம்பீரப்படுத்துகிறது.

576. கபடமான ஹிருதயஸ்தர்களுக்கன்றோ ஆலோசனைகள் வேண்டும். நிர்மலமான சித்தத்தில் அந்த ஆலோசனைகளுக்கு என்ன வேலை இருக்கிறது?

577. போலீஸின் உறவும், பாம்பின் உறவும்—இரண்டும் ஒன்றுதான்!

578. எவன் மற்றவர்களை விபத்திலிருந்து ஸம்ரக்ஷிக்க வல்லவனோ அப்படிப்பட்டவன் தனது சொந்த விபத்திலிருந்தும் தப்பித்துக்கொள்ள முடியும்.

579. தாயாதி ஒரு விஷ ஸர்ப்பம்.

580. "பறவை கூண்டினுள் புகுந்தது. வரும் காலமறியேன். அதை அறியும் திறனும் இல்லேன். குறிப்பிடும் இடத்தையும் அறியேன்". (ஒரு பாட்டு.)

581. ஒளி வீசும் இள வுலகம் எது?—எங்குளது? எதற்காக உளது?

582. தம் இல்லத்தை யணுகுவாரிற் குறித்த சிலரைத்தான் பெண்களின் கண்கள் மௌனமாக வரவேற்க சம்மதிக்கிறது.

583. அவசரமான நிலைமையில் கூடச் செலவழிக்க முடியாதபடி சிறிது பணத்தை எடுத்து அதிக கவனத்துடன் உன் பெட்டியின் அடியில் பத்திரமாக வை. அதன் பயன் பிறகு தெரியும்.

584. அக்குத்தொக் கில்லாதாளுண்மையும், வெட்கஞ்சிக்கில்லாதான் வீரியமும், துக்கப்பட்டுண்ணுதான் சோறும்—இம்மூன்றும் கைக்கித்தின்ன ஞயோடொக்கும்.

585. ஆடோடாடிய காடும், அரசனோடோடிய ஊரும், அடிக்கடி தாய்வீடோடிய பெண்ணும் இம்—மூன்றும் பேயோடாடிய கூத்தாம்.

586. ஆறுநேரான குளமும், அரசரோடேறுமாறான குடியும், புருஷனைச் சீறுமாறான பெண்டிரும் இம்—மூன்றும் நீறுநீறாய்விடும்.

587. ஆனைவாலொத்த கரும்பும், அறுநான்கிற் பெற்ற புதல்வனும், புரட்டாசி பதினைந்தில் நட்ட நடவும் இம்மூன்றும் பெரியோர்கள் வைத்த தனம்.

588. இரும்பை அறம்போல் தேய்க்கின்ற உறவும், இல்லறத்தில் வல்லாண்மை பேசுமனையாளும், நல் மரமேற் புல்லுருகிப் பாய்கின்ற நட்பும்—இம்மூன்றும் கொல்லான் வரவிட்ட கூற்று.

589. எழுதிப் பாராதான் கணக்கும், உழுது விதையாதான் செல்வமும், அழுதுபுரண்ட மனையாளும்—இம்மூன்றும் கழுதை புறண்ட களம்.

(தொடரும்.)

# ரகர—றகர பேதங்கள்.

(172-ம் பக்கத் தொடர்ச்சி.)

105. **பரம்பு**—கழனி திருத்துப் பலகை. **பறம்பு**—மலே. (106) கருப்பன் கழனி திருத்திப் பின் பரம்பை எடுத்துக்கொண்டு பறம்பின் மேல் ஏறினுன்.

107. **பரவை**—கடல், **பறவை**—புள், பட்சி. (107) விரைந் தெழும்பிய பறவை தூலதூரம் போய்க் கரை காணுது பரவையில் விழுந்து அமிழ்ந்தது.

108. **பரி**—குதிரை, **பறி**—பறி யென்னேவல். (108) பரியின்மீது ஏறியிருக்கிற அவன் கையிலுள்ள வாளைப் பறி.

109. **பரித்தல்**—சுமத்தல், **பறித்தல்**—களைதல். (109) பள்ளி கழனியிடம் பறித்த புல்லைக் கடை வீதியில் விற்கப் பரித்து வந்தாள்.

110. **பாரு**—தீ, **பாறு**—பருந்து. (110) பாறு எரி நட்சத்திரத்தின் பாரு பட்டு மாண்டது.

111. **பாரை**—கடப்பாரை, **பாறை**—திட்டை. (111) பாறையை அப்பாரை கொண்டு இடி.

112. **பிரசாதனம்**—சோறு, **பிறசாதனம்**—தேக்கு. (112) பிறசாதனம் கொண்டுவந்த கூலியாளுக்குக் கோவிலிற்போய் பிரசாதனம் வாங்கிக் கொடுத்து வா.

113. **பிரப்பு** — பேருண்டி, **பிறப்பு**—ஜனனம். (113) மக்கட் பிறப்புக்குப் பிரப்பு வியாதியைத் தரும்.

114. **பிரை**—பால் முதலியவற்றை யுரைவிக்கும் பொருள். **பிறை**—சந்திரபிறை. (114) அநந்தன் இம் மூன்றும் பிறையில் பாலுக்குப் பிரை குத்திஞல் மணமாயிருக்குமென்றான்.

115. **புத்திரி**—மகள், **புத்திறி**—கறிமுள்ளி. (115) அவர் புத்திரிக்கு ஜன்னி கண்டிருப்பதால் புத்திறி ஒரு சுமை கொண்டுவா.

116. **புரணி**—ஊன், **புறணி**—பின்புறம். (116) அவன் புறணியில் துர்க்கந்தப் புரணித் துண்டொன்று இருப்பதைப் பார்.

117. **புரம்**—மூன், **புறம்**—பின் புறம். (117) அவன் நேற்றுப் பகல் இராஜபுரத்தில் சொன்னதொன்று, இன்று அவர் புறத்தில் சொல்லுவ தொன்று.

118. **புரவு**—கொடை, **புறவு**—புறு. (118) புறவு ஒன்றை அரசனுக்குப் புரவாக ஓர் வேடன் அளித்தான்.

119. **பேரு**—சமுத்திரம், **பேறு**—இலாபம். (119) வறுமையுடையோன் பேரு கடந்து சம்பாதிக்கப்போயினும் பேறு கிடைக்காது.

120. **போரி**—பொரி என்னேவல், **போறி**—அறிவு. (120) ஐம் பொறியால் அறிவு விருத்தியடையும். பொரிக்கறி நாவுக்கு ருசியாயிருக்கும்.

121. **போரித்தல்**—பொரியச் செய்தல், **பொறித்தல்**—சித்திரமெழுதல். (121) வாசனைத் திரவியங் கூட்டிக் கறி பொரித்தலைச் செய்யாது ஏட்டிற் பொறித்து உண்டால் சுவை தருமா ?

(தொடரும்.)

---

பிறர் நல்வழிப்படவேண்டுமென்று கருதுபவர்கள் குற்றங்களை எடுத்துக் காட்டிக் கண்டிக்கவே முயல்வர். எக்கேடு கெட்டாலென்ன என்போரே சரி சரி யென்று தட்டிக்கொடுத்துத் தாளம் போடுவர்.

# மூளைக்கு வேலை.

## I

### விடுகதை வினு ?

1. நாகரத்தினம் ரத்தினத்தினுடைய தகப்பனுர். ஆனல், ரத்தினம் நாகரத்தினத்திற்கு மகனல்ல. அப்படியானல் ரத்தினம் நாகரத்தினத்திற்கு என்ன விதமான பந்து ? மூ. நா. தெண்டாயுதபாணிப் பிள்ளை.

கோலாலம்பூர்.

2. மூன்றெழுத்தாலாகிய ஓர் சொல். நடுவெழுத்தும் கடை யெழுத்தும் 'வாசனை 'யைக் காட்டும். முதலெழுத்தும் கடைசி எழுத்தும் விஷத்தின் பெயரைக் குறிக்கும். மூன்று எழுத்தும் ஒன்றுசேரில் ஆருகும்.

3. நான்கெழுத்துச் சொல். முதல் மூன்றும் முடவனுகும். மூன்றும் நான்கும் சேரில் வளைவாகும். நடுவிரண்டும் நீக்கில் குளிராகும். நான்கெழுத்தும்சேரில் திங்களின் பெயராகும்.

4. மூன்றெழுத்தாலாகிய ஓர் சொல். நடுவெழுத்தும் கடைசி எழுத்தும் ஒரு எண்ணைக் குறிக்கும். ஒன்றுடனே மூன்றைச் சேர்க்கில் பத்தினியின் பெயராகும். கடைசி எழுத்தை நீக்கில் அர்த்தமாகும். எல்லா எழுத்தும் சேரில் ஓர் விருக்ஷமாகும். வி. சிவசுப்பிரமணியன்.

## II

ஆனிமாத ஸஞ்சிகையில் 135-ம் பக்கமுள்ள எழுத்துமாற்றுச் சொற்களின் விடை :—1. மந்தகாச பூர்ண சந்திரன். 2. பிரபோத சந்திரோதயம். 3. அதி மனேரம்யமாய். 4. விநோதரசமஞ்சரி. 5. தவவேடமிதுதகுமா ?

### தனது ஜீவாதாரத்தின் பிரிவு.

ஒரு உயிர் மற்றொரு உயிரின் துணைகொண்டு, அதன் ஆதரவை நம்பி உலகில் நடமாடுகிறது. அந்த ஜீவாதாரமான உயிர், தாய்—பாட்டியாகவோ, முதன் மனைவியாகவோ, குமாரன்—குமார்த்தி—சகோதர சகோதரியாகவோ இருக்கலாம். அந்த உயிர் மறைந்திடில் அதை நம்பி நின்ற உயிரோ வீங்கி, தன் தலைமைப் பதவியும் இழந்து, தனக்கு அடங்கவேண்டியவரே தன்னை எதிர்க்க, எல்லா கேவலத்துக்கும் அலக்ஷியத்துக்கும் அவமானத்துக்கும் உட்பட்டு ஐயோ! அலங்கோலமாகி விடுகிறது! அதன் ஜீவாதாரத் துணை உயிருடன் இருந்தால் இப்படி நேருமா ? எங்கோ கிடந்த இந்த அல்ப பதர்கள் தலைமை ஸ்தானமாய் அதிகாரங்கள் செய்ய சாத்தியப்படுமா ? எல்லாம் ஊழ்வினை.



# ஹாஸ்ய சஞ்சீவினி



1. பிச்சைக்காரன் :—“நான் அநேக புஸ்தகங்களெழுதியிருக்கிறேன். சொற்ப காலத்திற்கு முன்னும் “பணஞ் சம்பாதிப்பதற்கு இலகுவான நூறு முறைகள்” என்னுமோர் புஸ்தம் தயாரித்தேன்.

வழிப்போக்கன் :—“அப்படியானால், நீரேன் பிச்சையெடுக்கிறீர் ?”

பிச்சைக்காரன் :—இதுவும் அந்த 100-முறைகளிலொன்று.

2. வக்கீல்:—(டாக்டரைப் பார்த்து) “டாக்டர்கள் சில சமயங்களில் பெருந் தப்பிதங்கள் செய்துவிடுகிறார்கள்.”

டாக்டர் :—“ஆம். வக்கீல்கள் சில வேளைகளில் செய்கிற தப்பிதங்களைப் போல்”.

வக்கீல் :—“ஆனால் டாக்டர்களின் தப்பிதங்கள் நிலத்திற்குக்கீழ் 4-அடியில் தாழ்த்தப்படுகின்றன”.

டாக்டர் :—“உண்மைதான். வக்கீல்களின் தப்பிதங்களோ பலமுறைகளிலும் நிலத்திற்கு மேல் 4-அடி உயரத்தில் ஊஞ்சலாடுகின்றன”.

3. ஓர் சிறு பையன் பள்ளிக்கூடத்தில் இலக்கங்களெழுதும்பொழுது பத்துமட்டுஞ் சரியாய் எழுதி பதினொன்றுக்கு 1-எழுதியிருந்தான். அவனை நோக்கி,

உபாத்தியாயர் :—“நீ இன்னும் பதினொன்று எழுதக் கற்றுக்கொள்ளவில்லையா”?

பையன் :—“எனக்குத் தெரியும். ஆனால் மற்ற ஒன்றை நான் இங்கு எழுதின ஒன்றுடன் எப்பக்கம்போடுகிறதென்று தெரியாது விட்டுவிட்டேன்.”

4. ஒரு உபாத்தியாயர் தன் வகுப்புப் பிள்ளைகளுக்கு தண்ணீரைப் பற்றியுள்ள ஓர் பாடத்தை நன்றாய் விளங்கப்படுத்திவிட்டு ஓர் பையனைப் பார்த்து “தண்ணீரை முன்னமைத்து ஓர் வாக்கியஞ் சொல்.”

பையன் :—“கிணறு வெட்டப் பூதம் புறப்பட்டது.”

உபாத்தியாயர் :—“இந்த வாக்கியத்தில் தண்ணீர் எங்கே ?”

பையன் :—கிணற்றுக்குள்.”

வே. கிருஷ்ண பிள்ளை.

1. ஒரு ஹோட்டலில் ஏற்கெனவே புசித்துவிட்ட ஒருவர் காற்றுக்காக ஜன்னலைத் திறக்கும்படி அங்கிருந்த வேலைக்காரனுக்குச் சொன்னார். அச்சமயம் அங்கு புசிக்கவந்த மற்றொருவர் “ஜன்னலைத் திறக்காதே, எனக்குக் குளிர்கிறது” என்றார். வேலைக்காரன் எவர் சொல்லைக் கேட்பதெனத்

---

தன் வீட்டுக் கலக சம்பந்தமான கடிதங்களுக்கு வெளியூரில் இருக்கிறவன் அந்த விஷயத்துக்குப் பதில் தராமல் தாராளமாய் க்ஷேமத்துக்கு மட்டும் கடிதம் எழுதி ஒதுங்குவதே சரி.

திகைத்து நிற்க, அப்பொழுது ஹோட்டலின் எஜமானன் வேலைக்காரனை நோக்கி—" சாப்பிட்டு விட்டவரைப் பற்றிக் கவனியாதே ; சாப்பிடவந்தவர் சொல்கிறபடியே செய்" என்றான்.

2. ஒருவர் தமது வேலைக்காரனை நோக்கி வண்டியையும் குதிரையையும் கொண்டுவா வென்றார். வேலைக்காரன் வண்டியை மாத்திரம் இழுத்து வந்து, "வண்டியை இழுப்பதற்கே என்னால் கஷ்டமாயிருந்ததால் குதிரையை நான் பிடித்துவர முடியவில்லை" என்றான்.

3. ஐரோப்பிய யுத்த சமாதான உடன்படிக்கையில் ஜெர்மன் கெய்சர் எந்த இடத்தில் கையொப்பமிட்டார் என்று ஒரு உபாத்தியாயர் மாணவனைக் கேட்க, அதற்கு அம் மாணவன் "உடன்படிக்கையின் அடிப்புறத்தில் கையொப்பமிட்டார்" என்று உடனே பதில்கூறினான்.

தன்னால் ஆகக் கூடாத ஒரு காரியத்தை முடிப்பதாகச் சொல்பவன் வேலை செய்யத் தொடங்கிய ஆரம்பத்திலேயே ஒரு மூலையில் உட்கார்ந்துவிட்டு நாளைக்கு ஆகட்டுமென்கிறான். இவன் சாதித்து விடுவானென்று நம்பியவனோ ஏமாறித் திகைக்கிறான். இப்படி நம்பவைத்து நட்டாற்றில் விடுவது ஒரு தற்கொலைக்குச் சமானமாகும். இதில் என்ன பெருமையோ? ஆயினும் இதை சாமர்த்தியமாக எண்ணுகிறார்கள்.

4. கல்யாணமெல்லாம் முடிந்தபின் எனக்கு ஓர் உண்மையான சங்கதி தெரிவிப்பதாகக் கூறினையே, அது என்ன என்று மணப்பெண்ணின் தந்தை புதிய மருமகனைக் கேட்டார். அதற்கு மருமகன்—"நான் முன்பு எனக்கு சொத்துக்கள் இருப்பதாகச் சொல்லியதெல்லாம் பொய் யென்றும், எனக்கு இருப்பதெல்லாம் இருபதினாயிரம் ரூபாய் கடனே தவிர வேறு கிடையாதென்றும் பிரியமாய்ப் பதில் சொன்னான்.

---

வஞ்சக நினைவுள்ளோர் அந்த வஞ்சகத்தை வெளிக் காட்டாமலே அவர்களின் வஞ்சகத்தைத் தீர்த்துக்கொள்வார்கள். அதற்கான காலத்தை எதிர்பார்த்து ஏதும் தெரியாத பூனைபோல் பாசாங்கு போடுகிறார்கள்.

உழைக்கிறவன் விழித்துக்கொண்டு தான் இதுவரை செய்தது வீணுக்கென்று தெரிந்து முன் ஜாக்கிரதையாகி, "ஏமிலேது" என்று ஒதுங்கிக் கையை விரிக்கக்கூடிய காலம் எவ்வளவு தாமதமாக வருகிறதோ அது வரையில் அவனை ஏமாற்றி அனுபவிக்கலாம்.

# இருச்சொல் விநோதம்.

1. அச்சுவண்டி யோடுவதேன்?—மச்சா னுறவாடுவதேன்?—**அக்காளையிட்டு**
2. அரக்க ரிலங்கை யழிவதேன்?—அடுப்பிற்சாதம் கொதிப்பதேன்?—**தீயிட்டு.**
3. அரிசி யெருதி லேறுவதேன்?—அசடருமைக் காததேன்?—**சாக்கிட்டு.**
4. அறுத்த காது கூடுவதேன்?—சிறந்த வாழ்க்கை யாவதேன்?—**தையலையிட்டு**
5. ஆலிலை பழுப்பதேன்?—இராவழி நடப்பதேன்?—**பறிப்பாரற்று.**
6. இளமையிற் பிள்ளை கெடுவதேன்?—எங்கும் மரங்கள் சாய்வதேன்?—**அடியற்று.**
7. ஈஸ்வர வருடம் பிறப்பதேன்?—இருந்தாப் போலிருந்து சாவதேன்?—**தாதுபோய்.**
8. எருக்கிலை பழுப்பதேன்?—எருமைக் கண் சாவதேன்?—**பாலற்று.**
9. ஏரி யுடைவதேன்?—எச்சிற் பாக்கு தின்னுவதேன்?—**போக்கற்று.**
10. கதவுசுழன்று கிடப்பதேன்?—கிழவி கிடந்து விழிப்பதேன்?—**தேம்பற்று.**
11. காவென்று கோவென்று ஆவதேன்?—காளை யெருது பாய்வதேன்?—**கொம்பையிட்டு.**
12. கீரை விரைப்பதேன்?—கீழோர் செல்வரைச் சுற்றுவதேன்?—**பிடுங்கித் தின்ன.**
13. குரல் நெருக்கிப் பேசுவதேன்?—கோதையர் காது சிறப்பதேன்?—**கம்மலையிட்டு.**
14. கூழு கொதிப்பதேன்?—குமரி யழுவதேன்?—**ஆற்றுவாரற்று.**
15. கோட்டைக் கதவு திறப்பதேன்?—நாட்டிற் றெண்டமிறுப்பதேன்?—**சாவியினால்.**
16. கோட்டை யிடிவதேன்?—கூத்தியார்க்குட்பட் டிருப்பதேன்?—மருந்தை**யிட்டு.**
17. சிறியவூர்பட்டணமாவதேன்?—வெறியர் மயங்கித்திரிவதேன்?—**குடியேறி**
18. சீதையை ராமன் பிரிந்ததேன்?—திரியோதனனுக்குத் தீம்பு வந்ததேன்?—**அம்மானையிட்டு.**
19. தனந்தேடி யுண்ணாமற் புதைப்பதேன்?—தரணியில் அமர பக்ஷமாவதேன்?—மதி **குறைந்து.**
20. திங்கள் வருவதேன்?—திருவிளக் கேற்றுவதேன்?—**ஞாயிறு போய்.**
21. திருடனென்று கட்டுவதேன்?—திரண்டு மயிர் சடையாவதேன்?...**சிக்கினால்.**
22. தேசத்தில் நோயுற்று மெலிவதேன்?—தேசத்தில் மழைபெய்து சிறப்பதேன்?—**மேகத்தால்.**
23. தேரோடுவதேன்?—திண்ணை மெழுகுவதேன்?—**அச்சாணியிட்டு.**
24. நாட்டிற் பஞ்சாங்கந் திரிவதேன்?—பாட்டுங் கூத்தும் வருவதேன்?—**பார்ப்பாரையிட்டு.**
25. நொண்டி நடந்து போவதேன் ?—மண்டி நெல் லளப்பதேன்?—**மாக்காலையிட்டு.**
26. பாம்போடுவதேன்?—பாறை யிடிவதேன்?—**அடிப்பாரற்று.**
27. பாரிற் பெட்டி திறப்புதேன்?—பயிர் செய் குடிகள் நைய்வதேன்?—**சாவியினால்,**

28. பானைச் சாதங் குறைவதேன்?—பாசிற்றண்ணீர் மொள்ளுவதேன்?—தோண்டியிட்டு.
29. முக்காற்பணம் முழுப்பணமாவதேன்?—மொண்டியாடு தண்ணீர் குடிப்பதேன்?—கால்கூடி.
30. மூடன் கற்றோனுவதேன்?–முழுப்புடவை நெய்வதேன்?–நூல் மிகுத்து.
31. மேதினியெங்குஞ் செழிப்பதேன்?—மெய்யெல்லாங் கொப்பளிப்பதேன்?—மாரியினுல்.
32. வாழைக்குலை சாய்வதேன்?–மாதர் கொண்டை முடிப்பதேன்?–சீப்பிட்டு
33. வீதியில் மனிதர் புரளுவதேன்?–வீடுகளெங்கும் மனிதர் நிறைவதேன்?–குடிமிகுத்து.
34. வெந்த கறி மணப்பதேன்?—வேந்தர் படை முறிவதேன்?—பெருங்காயத்தால்.
35. வெள்ளாட்டிக் காலைப்பிடிப்பதேன்?—வெள்ளம் புரளாதிருப்பதேன்?—அக்கரையிட்டு.
36. புருஷரைப் பெருமைப் படுத்துவதேன்?—பூசாலி பிச்சை யெடுப்பதேன்?—உடுக்கையினுல்.

# வாழை தினுசுகள்.

**கோதாவரியில்.**

1. வாமனகேளி.
2. கர்பூரசக்கரகேளி.
3. அம்ருதபாணி.
4. ஜகந்நாதகேளி.
5. ஸ்போட்டா.
6. பொந்த.
7. சக்ரகேளி.
8. எற்றசக்ரகேளி.
9. பூடிதபொந்த.
10. பதீசா.
11. கொம்மாடி.
12. பொந்தபதீசர்.
13. கினி.
14. நல்லசக்ரகேளி.

**தமிழ் நாட்டில்.**

1. பேய்பொந்தன்
2. பேயன்
3. கரூர் மொந்தன்
4. பூவாளை.
5. செவ்வாழை.
6. ரஸ்தாளி
7. டங்காளா.
8. மலைவாழை.
9. ராஜாரஸ்தாளி.
10. பூவன சுண்டன்.
11. கட்டளபூதன்.
12. தேன்வாழை.
13. நமரைவாழை.
14. மடல்வாழை.
15. பச்சைநாடான்.
16. குழிவாழை.
17. லாடம் (உதிரன்)
18. மணிலா.
19. ஆனைக்கொம்பன்.
20. ராஜாவாழை.
21. தொரைவாழை.
22. கிண்டிவாழை.
23. வயல்வாழை.
24. கரிவாழை.
25. நேந்திரம்.

☞ மனித வகுப்பில் ஜாதிபேதம் கூடாதென்றும் யாவரும் ஒன்றே என்றும் கூறுவோர் வாழையில் 39-தினுசுகள் இருப்பதற்கு என்ன பதில் சொல்வரோ? இந்த 39-க்குத் தக்கபடி வாழையின் குணமும் 39-ஆக வேறுபடுகிறது. ஜாதிபேதம் ஒழிப்பது எப்படி?

விவேகம்
விநோதம்
விசித்திரம்
விகடம்

விகடப்ரதாபன்

REGISTERED TRADE MARK

அநுபவம்
அற்புதம்
ஆச்சரியம்
ஆநந்தம்

# இக்காலத்துச் சிரிப்பான நாகரீகங்கள்!



நொந்த கண்ணிருக்க நோகாக்கண்ணுக்கு மருந்திட்டதுபோல, எத்தனையோ பசியும், பட்டினியும், பஞ்சமும், வறுமையும் குடிகொண்டு "வேலையில்லாத பி. ஏ."க்கள் முதலாய்ப் பெருகிப்போய் குடிக்கக் கூழுக்குங் கதியற்று, உடுக்கத் துணிக்கும் வழியற்று வானத்தை யண்ணாந்து பார்த்திருக்கும் என் ஏழை எளியதுகள் ஒருபக்கம் பெருமூச்சுவிட்டுக்கொண்டிருக்க, மற்றொரு பக்கத்திலே பலே தமாஷான நாகரீகங்கள் முற்றிப்போய் எங்கே பார்த்தாலும் வேடிக்கையும் விநோதமும் வெட்டிச் செலவுகளுமாகவே காணப்படுவதை இந்த விகடனாகிய நானும் தினந்தினமும் பார்த்து வருவதில் எனக்கும் இது ஒரு வேடிக்கையாகத் தோற்றினாலும், காலங்கண்ட எனக்கு வயிற்றெரிச்சலாகவே ஏற்பட்டு எல்லாவற்றையும் வெளியில் இழுத்து விடவேண்டுமென்ற ஆத்திரம் பொங்கிக்கொண்டது. முழுதும் அளக்க நேரமும் இடமும் இல்லாததால் மேல் போக்காகக் கொஞ்சம் காட்டிவிடலா மென்று சற்று மன ஆறுதலுடன் எனது அதனப் பிரஸங்கத்தைத் தொடங்கிக்கொள்கிறேன்.

***

**வ**ண்ணான் என்னவோ ஒரு உண்மையான உழைப்பாளி. அவன் ஆதி காலத்து மனுஷ்யன். ஒரு கூட்டமும் குடித்தனமுமாய் தன் ஜாதியாருடன் ஒருமித்து வாழ்ந்து கஷ்டமான ஜீவியத்தை சுலபமாய் நடத்தி நாணயத்துக்கும் நம்பிக்கைக்கும் ஊராரின் பிரியத்துக்கும் இரக்கத்துக்கும் பாத்திரமான ஒரு பங்காளி. அவன் வீடு குடிசையானாலும் அவன் செய்கிற வேலை பெரிய வேலை. அவன் வாங்குகிற காசு அதிகமில்லையானாலும் ஒவ்வொரு வீட்டிலிருந்தும் அவன் தூக்கிச் செல்லும் மூட்டை எப்போதும் கனத்தே இருக்கும். இது பழய காலத்து நாகரீகமாக, இப்பொழுது புது நாகரீகமொன்று புறப்பட்டுக் கொண்டு வண்ணாரக் கடைகள் பெருத்துப்போய்விட்டன! இத்துடன் நாவிதக்கடைகளின் சிங்காரமும் அளவுக்கு மிஞ்சி நாகரீக நடனம்

பசியால் வாடியவனுக்கு அமிர்தம் கிடைத்ததுபோல சில சோம்பேரிகளுக்கு நல்ல பணப்புஷ்டியுள்ள வீடு தங்குவதற்குக் கிடைத்துவிடுகிறது.

புரிகின்றன. இந்த இரு கடைகளும் எந்த ரோட்டு முடுக்குகளில் பார்த்தாலும் வெகு ஆடம்பரமான போர்ட் பலகைகளுடன் மிகு நாகரீகம் போலக் காணப்படும். இந்தக் கடைக்கார வண்ணார் உண்மையில் வண்ணார வகுப்பினரல்ல. சில வண்ணார்களும் இவர்களைப் பார்த்து கடை ஏற்படுத்திக்கொண்டிருக்கின்றனர். இந்தக் கடைக்கார வண்ணார்கள் நமது வீட்டுக்குவந்து முன்போல் துணியெடுத்துப் போவதில்லை. துணி மூட்டைகளைக் கட்டிக்கொண்டு நாமே தூக்கிக்கொண்டுபோய் அவர்கள் கடைகளில் ஒப்புவித்து விட்டு அவர்கள் கொடுக்கும் கணக்கை வாங்கிக்கொண்டு வரவேண்டியது. வெளுப்பதற்குக் கூலியோ வெகு விபரீதம்! நாலணு விலை பெருத துணியாயிருந்தாலும் சலவைக்கு ஒரு அணு தக்ஷிணை கொடுத்துவிட வேண்டும். அதிலும் கைக்குட்டை முதலிய சிறு துணிகள் போக்கடிந்துபோனால், அவர்கள் உத்தரவாதியல்லவாம்!

***

துணிக்கு இந்தக் காலத்தில் துட்டுப்போட்டு வயிறெரிந்து வாங்குகிறது ஒருபக்கமிருந்தால், இந்த வண்ணார் கடைகளில் போட்டுவிட்டாலோ சோடா பஸ்பம் முதலிய கார வஸ்துக்களில் ஊறவைத்து அந் நேரத்துக்கு வெள்ளையாய்க் காகிதத்தில் வெகு பக்குவமாய் மடித்து மிட்டாய்ப் பொட்டணம்போல் தளுக்குடன் கொடுத்து விடுகிறார்கள்! அப்புறம் இரண்டு மூன்று சலவைகளில் துணி நூலாகக்கூடக் காணுமல் பஞ்சுபஞ்சாகப் போகிறது! இந்த வண்ணார் கடைகளுக்கு ஏஜண்டுகளும் சொந்தக்காரர்களுமாகச் சிலர் ஏற்படுவதும் உண்டு. ஒருவரைப் பார்த்து ஒருவர் கடை வைக்கத் தொடங்குவதில் எல்லோருக்குமே லாபம் வந்து கொட்டிவிடுவதில்லையாதலால், நஷ்டப்பட்டுப் போகிறவர்களும் சிலர் இருக்கதான்வரும். முன் பின் அநுபவம்பெருத சிலர் ஒரு மாதம் இரண்டு மாதம் கடையை நடத்திவந்து செலவுகள் கட்டாமல் கடையை மூடிவிடுவதும், அவர்களிடம் துணியைப் போட்டவர்கள் அவர்களின் இருப்பிடங்களைத் தேடியலைந்து அவதிப்படுவதுமுண்டு. மோசக்கருத்துள்ள சிலர் நல்லலேவாதேவியாய் வியாபாரம் நடந்து கொண்டு வருகிற சமயத்தில் முதல்ரகங்களாக அப்பிக்கொண்டு கம்பி நீட்டிவிடுவதுமுண்டு. அப்பொழுது துணிமணிகளைப் போட்டவர்கள் விகடனைப்போல ஆவென்று வாயைத் திறந்து வானத்தைப் பார்க்க வேண்டியதுதான்! இது ஒரு சிரிப்பான நாகரீகம்!

***

இன்னெரு புது நாகரீகத்தைக் கேட்கிறீர்களா? அது நாவித நாகரீகம்தான்! நாற்காலிமீது குந்தி க்ஷவரம் செய்ய ஏற்பட்ட நாவித ஸ்ரீமான்களின் ஆடம்பர அட்டகாஸங்களை விகடன் என்னென்பேன்! அடா! அப்பா! முன்னே க்ஷவரம் செய்துகொள்ளப் புறப்பட்டால் காலணு, அரையணு, முக்காலணு, அல்லது ஒரே அணுதான் பிடிக்கும். இப்போதோ எங்கே பார்த்தாலும்—பாம்பே ஏர்கட்டிங் சலூன்—சிங்கப்பூர் ஏர் கட்டிங் சலூன்—என்று என்னென்னவோ ஊர் பேர்களால் கடைக

---

தாய் தன் சிறு குழந்தைகளுக்குத் துரோகம் செய்யாள். அவர்கள் பெரியவர்களாய் விவாகமானபிறகே அவளது மனம் மாறுகிறது. ஆனால் தன் பெண் குழந்தைகளிடம் எந்நாளிலும் மாருத ஒரேவித அன்பு தான்.

ளைத் திறந்து, அதைச் சிங்காரித்து, கண்ணாடி — மேஜை —நாற்காலி— பங்கா—முதலியவைகளை ஏற்படுத்தி வெகு விசித்திரமாக அலங்காரங்கள் செய்து, பிரஞ்சு கிராப்பு—இட்டாலி கிராப்பு—துருக்கி கிராப்பு—இங்கிலீஷ் கிராப்பு—நெட்டால் கிராப்பு— என்ற விதவிதமான மயிர் கத்திரிப்பு ரகங்களால் பால்யர்களை மயக்கி மூன்றணாமுதல் சில இடங்களில் எட்டணா வரையிலும் வாங்கிவிடுகிறார்கள்! இவ்வித கடைகளில் தினேதினே வந்து நாற்காலிமீது குந்தி எதிரே கண்ணாடியில் பார்த்துக்கொண்டு பங்கா விசிறியுடன் சுக க்ஷவரம் செய்துகொண்டுபோகும் கிழ மாப்பிள்ளைகளும் அநேகருண்டு. சந்து மூலைகளில் உட்கார்ந்து அரையணா ஒரு அணாவுக்கு க்ஷவரம் செய்து கொண்டிருந்தவர்களுங்கூட இப்பொழுது ஒரு கடையை வைத்துக் கொண்டு நாற்காலியைப் போட்டுத் தானும் நடுவில் குந்திக்கொண்டு நாலு அணா மூன்றணா கேட்கத் தொடங்கி விட்டார்கள்!

***

இங்கிலாந்து முதலிய மேல்நாடுகளிலே இப்படிப்பட்ட ஷாப்புகள் பல இருக்கின்றனவாம்! அந்த ஷாப்புகளில் மகா பிரபுக்களெல்லாம் வந்து போவதுண்டாம்! தங்களின் எவ்வளவோ ஆந்திரீகமான பரம ரகசியங்களைக்கூட இந்த ஷாப்பு நாவிதர்களிடம் சொல்லிவிடுவார்களாம்! அங்கே நாவிதரைப் பிரபுக்கள்கூடத் தங்கள் சிநேகரைப்போலப் பாவித்து வெகு நெருக்கமாக நடந்து கொள்வதுந் தவிர, அவனை ஒரு ஆலோசனைத் தலைவனாக மதித்துக் கௌரவிப்பதுண்டாம். அந்தப் பருப்பும், படிப்பும், பக்குவமும் இந்தப் பக்கத்தில் வேசாவிட்டாலும் ஆடம்பரங்கள் மட்டும் போவதில்லை. **என்ன நாற்காலி க்ஷவரம் செய்துகொண்டாலும், வீட்டில் அந்தக் கூழ தண்ணீர்தான் வார்க்கிறார்கள்!** விளையாட்டுப்பிள்ளை விஷமத்துக்கு அஞ்சாது என்பது போல வீண் டம்பங்களை ஏற்படுத்திக் கொண்டு காசு பணத்தை இவ்விதம் விரயம்செய்வதில்—அதை ஒரு நாகரீகமாக நினைப்பதைப் பார்த்துத் தான் விகடன் சிரிக்கிறேன்!

***

சதிர் கச்சேரியையும், பரதநாட்டியத்தையும் நாகரீகர்கள் பழித்து ஒழித்துவிட்டனர். பரத நாட்டியம் மஹா பக்குவமான ஒரு உத்தம சாஸ்திரம். அது மயக்குவித்தைக்காகப் பின்னாளில் கொள்ளப்பட்டாலும், அதன் உண்மைத் தத்துவங்களும் மகிமைகளும் வெகு பெரிது. அதை விகடன் வேண்டுமென்று பேச வரவில்லை. அதன் உட்கருத்தை விசாரிக்க மறந்து ஒதுக்கிவிட்டு, இப்போது டிக்கட்டுகள் வைத்துப் பாட்டுக் கச்சேரிகள் நடத்தி அதில் பல பெண்களைக் கொண்டுவந்து பாட வைக்கிறார்களே —அந்தச் சிரிப்பான நாகரீகத்தையே விகடன் சொல்லவந்தது!

***

இனி காபி ஹோட்டலில் எவ்வளவு புசித்தாலும் வயிறு கனக்காததும் ஒரு தமாஷான நாகரீகம்! தாகத்துக்கு எங்கும் நல்ல ஜலமிருக்க சோடா புட்டிகளைத் தேடிச் செல்வதும், அதில் முக்கியமான காற்றுச் சரக்கு முழுமொட்டையாகி வெறும் தித்திப்புத் தண்ணீரே குந்தியிருப்ப

---

ஒரு சங்கதியில் தன்மீது பிசகு இருப்பவன் மற்றவர் பிசகையே அதிகமாக எடுத்துக் காண்பித்துத் தன்னைப்பற்றி நல்ல எண்ணம் உண்டாக்கிவிட்டுத் தப்பித்துக்கொள்ள முயல்வான்.

தும், அதை அருந்திய பின்பு அந்த சங்கதி தெரிந்து மொண மொணப்ப தும் மற்றொரு சிரிப்பான நாகரீகம்! கோச்சு—சாரட்டு வண்டிகள் ஒழிந்து மோட்டார்களும், பஸ்ஸுகளும் புறப் பட்டு தினத்துக்குப் பத்து பெயரை மிதித்துப் பரலோகமேற்றுவதும் ஒரு சிரிப்பான நாகரீகம்! சர்க்கார் வைத் தியசாலைகளில் மருந்து வாங்கக் காலை ஏழு மணிக்குச் சென்று 12 மணி வரை காத்துக் காய்ந்து வாடி வீட்டுக் குத் திரும்புவதும் ஒரு நாகரீகம். ஆயுர்வேத வைத்தியத்தை இமயமலை உச்சிக்குத் தூக்கிவைக்கப் போவதாய் சொல்லி சில வைத்தியசாலைகள் புறப் பட்டுக்கொண்டு ஒரு டஜன் புட்டி களில் கால்பாகம் குணமாகக் கூடிய வியாதிக்கு ஒரு புட்டி ரூபா மூன்று என்று விலை வைத்து விற்பதும், ஒரு புட்டியை வாங்கினவன் எந்தக் குண மும் காணாமல் ஏமாறுவதும், கால் பாகம் குணப்படுத்தக்கூடிய ஒரு மரு ந்தை 12 பாகமாக்கி சிறு சிறு சீசாக் களில் அடைத்துவிட்டுப் பணம் பறிப் பதும் பெரிய மோசமான நாகரீகம்! இவர்களின் கேட்லாக்கிலிருக்கிற நற் சாக்ஷிகளோ வெகு பிரமிப் பாயிருக்கும். அவர்களுக்கு இவர்கள் செய்த வைத்தியம் வேறாக இருக்க லாம்! அத்துடன் சிலர் தாக்ஷண்யத் துக்கும் கைநோகாது நற்சாக்ஷி தந்து விடுவதில் உலகம் ஏமாறவைக்கிறது!

***

வைத்தியர்கள் தான் பத்திரிகை களில் விளம்பரம் செய்யப் புறப்பட் டார்களென்றால், இப்பொழுது சோதி டர்களும் ஒரு ரூபாய் ஆரூடம் சொல் வதற்கு விளம்பரக் கூட்டம்போட ஆரம்பித்துவிட்டார்கள்! இவர்கள் பத்திரிகைக்காரர்களுக்கு விளம்பரத் துக்குக் கொடுக்கிற பணத்துக்கு எத் தனை ஏமாந்தவர்களின் கடிதங்கள் வருமென்ற கணக்கே இவர்களுக் கு முதலில் தெரியாது! ஒரு இராஜா வை ஆறுமாதத்தில் இறக்கப்போவதா கச் சொல்லித் தான் அநேக வருஷம் வாழப்போவதாய் வல்லமை பேசிய சோதிட சாஸ்திரியொருவனை அருகி லிருந்த மந்திரி இரண்டு வெட்டாக வெட்டி விட்டுத் தன் மரணத்தை யறியாத இம் மூடனின் வார்த்தை யில் மயக்கம் கொள்ளவேண்டாமென் றானும்! அதுபோல இந்த விளம்பர ஆருட சாஸ்திரிகளுக்கு ஒரு ரூபா யைத் தரவும் வேண்டாம்! அவர்கள் தபாலில் வி. பி. யில் அனுப்பும் ஆரு டத்தின் அவகேடான பலன்களைப் பார்த்து மனம் பதறவும் வேண்டாம்! இதுவும் ஒருசிரிப்பான நாகரீகம்தான்!

***

இன்னொரு புது நாகரீகம் புறப் பட்டிருக்கிறது! பாரதம், ராமாய ணம் என்ற தாதா காலத்து சாஸ்திர புராணங்களை யெல்லாம் ஒதுக்கி விட்டு, தேவாரம்—திருவாசகம் முத லியவற்றை யெல்லாம் குப்பைத் தொட்டியில் எறிந்துவிட்டு, ஆதிபரா பரனை கடவுளை நேருக்கு நேராகத் தரிசிக்க ஒரு திருக்கூட்டத்தார் புறப் பட்டிருக்கிறார்கள்! ஆயினும், இவர் கள் பழிக்கிற தெய்வத் திருநாமங் களையே தங்களின் பெயர்களாக இன் னம் வைத்துக்கொண் டிருப்பதுதான் பெரிய அசங்கிதமாக இருக்கிறது. அப்பெயர்களை யொழித்து, வெண் ணெய், முட்டகோஸ், கேக், பாதம்

---

சூதுவாது அறியாமல் தம் உள்ளத்திலிருக்கிற எதையும் வெளியில் கொட்டி விடுகிறவர்களுக்கு எந்தக் குடும்பத்திலும் கெட்டபெயரே ஏற்படும். உள்ளத்திலொன்றும் வெளியிலொன்றுமாக நடிப்பவர்களுக்குத்தான் வெகு நல்ல பெயர் வரும். அவர்களுக்கே முதலில் சுட்ட தோசை!

பருப்பு, யௌவனம், தங்கம், வெள்ளி என்று தங்கள் பெயர்களை மாற்றிக் கொண்டு விட்டால் இன்னும் உண்மையான திருக்கூட்டத்தாராகலாம்!

***

இனி, நகை நாகரீகத்தைத் தெரிவிக்கிறேன். என்னூர் புருஷர்களும் வாலிப சாமிகளும் இரட்டைத் தங்கக் காப்புகளை நீக்கிவிட்டு ஒற்றைக் கைக் கொலுசு தரிக்கப் புறப்பட்டிருக்கிறார்கள்! கைக்கெடியாரத்துடன் அக்கொலுசை யணிகிற சோபித சொகுசுகள் வேறே! பழய நாளில் பணம் பெருத்த பருப்புக்கள் கெட்டித் தங்கக் கொலுசும் காப்பும் அணிந்தார்கள்! பிறகு அந்த மோஸ்தர் போய் தாமிரத் தகட்டையும் அரக்குப் பொடியையும் உள்ளுக்குள் புகவிட்ட கைக்கொலுசு, காப்புகள் புறப்பட்டன! இப்பொழுது அந்த மோஸ்தரும் போய் துடைப்பக்குச்சியின் பருமனில் பல தினுசு பொன் வளையல்கள் மாதர்களின் கரங்களை அலங்கரித்துக்கொண்டு வருகிறது! இவைகள் ஓடிவதோ வெகு துரிதத்திலே! வீட்டு மனுஷ்யன் பாடுபட்டுச் சம்பாதிக்கும் பணத்தில் முக்கால்பாகம் இந்தப் புது மோஸ்தர்கள் விழுங்கி விடுகின்றன!

***

கடைசியாக, ரவிக்கை நாகரீகத்தை விகடன் கொஞ்சம் சொல்லிச் சிரித்துவிடுகிறேன். முழங்கைக்குள் பழய பாட்டிகள் அணிந்தார்கள். அந்த ரவிக்கை பிறகு முழங்கையையும் தாண்டிக்கொண்டு நீண்டு புறப்பட்டது. அது இப்பொழுது சுருங்கி முழங்கையே இல்லாத ஒரு ரவிக்கை உள்ளுக்கும், அதற்கு மேலே வெகு சன்னமான ரவிக்கை முக்கால் கையுடனே கூத்தாடுகிறது! அதிலும் ஒரு புது மோஸ்தர் தோன்றி கழுத்தில் பாதிவரைக்கும் காலியாக விட்டு அதற்கப்பால் மறைக்கிற தினுசுகள் புறப்பட்டிருக்கின்றன. ஒரே தடவையில் மூன்று ரவிக்கைகள் தரிப்பதிலே குழந்தைகளையுடைய தாய்மார் பால்கொடுக்கும் கஷ்டம் ஒரு பக்கம்! இனி, ஆடவர்கள் தொடை ரவிக்கை தரிக்கப் புறப்பட்டிருக்கிறார்கள்! அதாவது முழங்காலுக்கு மேலே செராய் அணிவது தான். ஐரோப்பியர்களின் வெண்மையும் பளபளப்புமான தேகத்துக்கு இந்தத் தொடை ரவிக்கைகள் அழகாக இருக்கலாம்! அதைப் பார்த்து என்னூர் கருப்பு மூஞ்சித் துரைகளும் அணிய ஆரம்பித்து விட்டதில் அவர்களின் கருத்த கால்கள் இரண்டும் இரண்டாகப் பிரிந்து வெளிக்குத் தெரிகின்றன! இனி என்னூர் சீமாட்டிகளும் ஐரோப்பியப் பெண்களைப் போல் முழங்காலுக்குமேல் உடை தரிக்கப் புறப்படுவார்களோ என்னவோ! அடடா! என்ன சிரிப்பான நாகரீகங்களப்பா! இவற்றால் கையிலுள்ள பணத்துக்குச் செலவே தவிர, கடைசியில் எல்லாம் வீண் மோகங்களும் ஆடம்பரங்களுமே தவிர, சுகிர்தம், க்ஷேமம், ஒழுங்கு, நேரான மார்க்கம் ஏதுங்காணோமே யென்று விகடன் சிந்தித்துச் சிரிக்கிறேன். ராம்! ராம்! சுபம்! சூ!! சுவாஹா!!!

---

தன் வீட்டுக்குச் செலவிடுகிற பணம் தன் குழந்தைகளின் வயிற்றில் அன்னம், குழம்பு, பக்ஷணமாய்விடுகிறதென்று எண்ணுகிறான். வீண் முகஸ்துதிக்காரர்களுக்குச் செலவிடுகிற பணமோ தனக்கு உதவாமல் அவர்களுக்குமட்டுமே உபயோகப்படுகிறதென்றுஎண்ணுகிறான்.



என்னதான் ஒட்டிக்கொண்டு தாளம் போட்டாலும், அந்தக் காலமாய் விட்டவர்களுக்கு இவர்கள் ஈடாகாரென்று ஒப்பாரிக் கண்ணி ஓதுகிறதாம் !

***

மனதுக்குப் பிடித்த மனுஷ்யர்கள் கண் மூடிவிட்ட பிறகு தான், பணம் கிடைக்கும், மனுஷாள் அகப்படார் என்ற சுடலை ஞானம் உதயமாகிறதாம் !

***

வாழ்வும், தேடியபணமும் நிலைப்பதும், குப்புறப்படுத்துக் கொள்வதும் குடும்பத் தலைவனின் வாய் அசைப்பு-தலையசைப்புக்குத் தக்கபடி யிருக்குமாம்!

***

பொறாமைப் படுவோனுக்கு இனாமாகவே ஒரு சொக்காய் கொடுத்தாலுங்கூட, அவ்வளவுக்குக் கொடுக்க உனக்கு சக்தி வந்து விட்டதாவென்று ஆத்திரம் பொங்குவானாம் !

***

அவனைக் குறித்து எழுதும் கடிதத்தை, அதைப் பெறுகிற மட்டிச் சாம்பிராணி அவனுக்கும் காட்டி விடுவதால், கடிதத்தில் எவரைக் குறித்தும் எழுதாதிருப்பது மேலென்று நொந்துபோன கட்டை யொன்று நோவெடுத்துச் சொல்லுகிறதாம்!

***

நட்பு நிலைப்பதற்குக் கடனும், அன்பு பெருகுவதற்குச் சுயநலமும், விஸ்வாசம் வளர்வதற்கு இரண்டு கோட் சொல்லிகளும், குடும்பம் ஓங்குவதற்கு நித்தம் நாலைந்து விருந்துக் கூட்டங்களும் இருந்தால் போதுமானதென்று குட்டிச்சுவர் விழப்போகிற சுவருக்குக் கூறிற்றாம் !

***

"இருந்து விட்டுப் போகிறது தானே" என்று சொல்வதில், அது ஒப்புக்கு உபசரிக்கும் சொல்லா, அல்லது உண்மைச் சொல்லா என்று ஒருவர் விகடனைக் கேட்டதற்கு, எவ்வளவு செய்தும் விருதாவாய்ப் போகிற இடத்தில் அது உபசரிப்புச் சொல்லாகவும், தான் செய்கிற செலவுக்கு நன்றி விசுவாசம் நிலைத்துத்தன்னோடு ஒட்டி உதவக்கூடிய இடத்தில் மனதாரச் சொல்லும் உண்மைச் சொல்லாகவும்" இருக்குமென்று பதில் சொன்னானாம் !

***

பின்னுக்குச் சொட்டுச் சொல்லும் மனஸ்தாப விரோதங்களும் வாராதிருக்க இரண்டு உதாரணங்கள் சொல்லும்படி ஒருவர் விகடனைக் கேட்க, கூட்டாளியாக ஒருவனை வைத்துக் கொண்டு பிறகு மனஸ்தாபப்படுவதை விட அவனையொரு சம்பளக்காரனாக்கி வைத்து, அவ்வளவுடன் ஒதுக்க வேண்டுமென்றும், ஒரு பந்துவை வீட்டில் வைத்து, அந்த பந்து அந்த வீட்டில் எவ்வளவோ உழைத்தான்—உழைத்ததற்குச் சோறுபோட்டார்கள் என்று பிறகு பழிப்புச் சொல் ஏற்படுவதைவிட, பந்துவுக்குப் பதில் ஒரு வேலையாளை வைத்துக் கொண்டால் மனஸ்தாபங்கள் வாராதென்றும், கண்டித்தும் வேலையாளைக் கேட்கலாமென்றும் விடை இயம்பினானாம் !

***

செலவு செய்கிற வீட்டுக்காரனை ஒரு ஒதுக்கு மனுஷ்யனாகவும் அன்னியஸ்தனாகவும் தூரத்தள்ளி விட்டு, அவன் செலவில் குந்தித் தின்னுகிற கூட்டங்கள் மட்டும் தங்களுக்குள் வெகு விசுவாசமாய் உறவாடி ஒட்டிக் குலாவுகிறார்களென்று வைகையாறு கொள்ளிடத்திற்குச் சொல்லிற்றாம்.




**வியாபார தந்திரம்:—**

ஸ்ரீமான் எம். ஏ. நெல்லயப்ப முதலியாரவர்கள் இயற்றியது. படங்களுடன் கூடிய இரண்டாம் பதிப்பு. விலை ரூபா. 1-8-0.

இதன் ஆசிரியர் வர்த்தகப் பொருளாதார முறைகளில் ஒரு பெரிய வியாக்கியான கர்த்தா. விசாலமான அனுபவமும், நிர்வாகத்திறனும், நிதானித்த சொல்லும், தொழிற்றுறைகளில் தேர்ந்த பயிற்சியும் மிக்குற்றவர். அவரது மதிநுட்பமும், வியாபாரக் கலைகளின் நுண்ணறிவும் அபாரமானது. அவரது முதல் நூலான "வர்த்தகயுக்தி" பல பதிப்புகளைக்கொண்டு தமிழ் நாட்டில் விசேஷித்த கௌரவம் பெற்றிருக்கின்றது. அதைப் போன்றே இந்த **'வியாபார தந்திரம்'** என்ற நூலும் அதை வாசிப்பவர்களை ஒரு நூதன யௌவன பிராயத்தவர்களாக மாற்றவல்லது. எவ்வளவு சலித்த உள்ளமும் ஒரு புதிய வர்த்தகத்திற்குத் துணிந்து விடக்கூடிய ஆற்றலை இந்நூலின்கண்ணுள்ள விஷயங்கள் உண்டுபண்ணுவனவா யுள்ளன. இந்நூலின் அமைப்பே ஒரு புதுமுறை. இதிலுள்ள ஒவ்வொரு சொல்லும், ஒவ்வொரு வரியும் பொன் போல் போற்றற்குரியவை. வியாபாரத் துறைகளில் உத்ஸாகப்படுத்தி விடுவதற்கும், ஒரு புதிய ஊக்கங் கொடுத்துத் திடப்படுத்துவதற்கும், இந்நூல் ஒருமுதன்மையும் சிரேஷ்டமுமான கருவியாகலாமென்று நாம் நம்புகிறோம்.

**காங்கிரஸ் மஹா சபை சரித்திரம்:—**

இது சென்னை "சுதேசமித்திரன்" லிமிடெட் பதிப்பு. **முதல் பாகம்** 20-காங்கிரஸின் விவரங்கள் அடங்கியது' **இரண்டாம் பாகம்** 21-முதல் 36-வது வரையுமுள்ள காங்கிரஸ் மகா சபையின் விவரங்கள் கொண்டது. ஒவ்வொரு பாகமும் விலை ரூ. 2. உயர்ந்த கிளேஸ் பதிப்பு.

மஹாஉத்கிருஷ்டமான இந்நூலைப் பற்றிச் சரியான மதிப்புரை வரைவதாயின் நமது பத்திரிகையில் இடம் போதாது. அத்துணைக் கௌரவார்ஹமான மா பெரும் நூல் இது. ஆதியின் பல நூல்களை வெளியிட்டுத் தமிழகத்திற்கு இராஜீய ஞானம் புகட்டிய பெருமை "சுதேச மித்திரன்" காரியாலயத்திற்கே உரியது. தமிழ் நாட்டின் இராஜீய ஞானமே "சுதேசமித்திரன்" உண்டாக்கிய ஒரு பெரும் சொத்து. இந்த மஹா நூலை வெளியிடுவதற்கான பிரயாசையை "சுதேச மித்திரன்" காரியாலயத்தார் ஏற்றது தமிழ்ச் செல்வர்களின் பாக்கியவசமேயாகும். 36-காங்கிரஸ் மகா சபைகளின் விவரங்களை எத்துணையோ அழகாகவும் சங்கிரகமாகவும் வெகு தெளிவாகவும் விளக்கப்பட்டுள்ளன. பூர்வ-மத்திய-எதிர்கால இந்தியாவின் ஸகல நிகழ்ச்சிகளையும் இந்நூலால் தெரிந்து கொண்டு விடலாம். இராஜீயஞான வளர்ச்சிக்கும், விசாலித்த அறிவுத் தேர்ச்சியின் அபிவிருத்திக்கும் இந்நூல் ஒரு கல்பக விருக்ஷமாகும்.

---

கடவுள் இல்லையென்று யார் சொன்னார்கள்? அவருக்கு அஞ்சி நடப்போரைத்தான் காணோமென்று வயிறெரிந்தவர்கள் வேதனையுடன் கூறுகிறார்கள்.

இதற்கு இணை சமானமாக வேறெந்த நூலையும் சொல்ல வொண்ணுது. நம் கண் முன்பு வாழ்ந்து சென்றவர்களும் இப்போதும் ஜீவவந்தர்களா யுள்ளவர் களுமான மா பெருந்தலைவர்களின் அரிய உரைகளனைத்தையும் இம்மஹா நூலிற்கண்டுஆநந்தக் கண்ணீர்பெருக லாம். நமது பாரதவருஷத்தின் சென்று போன 36-வருடங்களின் சரித்திரத்தையும் இந்நூலைக்கொண்டு சுலபத்தில் அறிந்துவிடலாம். தமிழராயினோர் ஒவ்வொருவரும் இந் நூலை மனப்பாடம் செய்து விடுதல் தகும். வெகு சுலபமான தமிழ்நடை. வாசித்ததும் மனதில் பதியத்தக்கவித மாக இந்நூலின் வாக்கம்பீரம் அத் துணை அத்யந்த சிரேஷ்டதரமா யுள் ளது. சாமான்யவழக்கச் சொற்களிலே புதிய கருத்துகளை நுழைவித்து ஆங் காங்கு உபயோகித்துள்ள பான்மை வாசிப்பதற்கு மிக்க ரஸமாயிருக் கின்றது. (1907) "காங்கிரஸ் மகா சபையின் போக்கு மிகவும் "பிச் சைக்காரத்தனமாக "இருக்கிற தென்று" — புதிய கட்சியார் நினைத்ததைக் குறிப்பிடுகையில்— '**பிச்சைக்காரத்தனம்**' —என்ற சாமான்ய பதத்திற்குள் அடங் கும் விசேஷித்த பொருட் குவி யல்களின் எண்ணிக்கையையும் அர்த்த புஷ்டியையும் சொல் லொணுது. இம் மஹா நூலின் அருமையை வாசித்தே யுணர வேண்டும். இந்நூல் இல்லாத **தமிழரது வீடு இருளடர்ந்த ஒரு காடு** என்றே சொல்வோம். இதன் மூன்றும் பாகத்தையும் விரைவில் வெளியிடுமாறு வேண்டிக் கொள் கிறோம்.

நீ பேசுகிற வார்த்தையைச் சுருக்கி, 10-கேள்விகளில் 2-கேள்விக்குப் பதில் சொல்லி, அதிலேயே பாக்கி 8-கேள்விகளுக்கான பதிலும் அடங்கும்படி செய்துவிடு. பிறர் வாய் ஓயாமற் பேச சரக்கில்லாதபடி செய்து விரைவில் அவரே எழுந்திருக்க வைத்துவிடு. நீ வந்தனம் சொல்லிவிட்டு உன் வேலையைப் பார். இவர்கள் உன்னையே நம்பியவர்களல்ல. அன்பர்களுமல்ல. மயக்கிப் பிடுங்குகிற குட்டிகள்! அவர்கள் முகத்தைப் பாரு!

**[இப்புஸ்தகங்கள் "அமிர்த குணபோதினி" ஆபீஸில் கிடைக்கும்.]**

---

"நல்ல பயிற்சிபெற்ற நர்ஸோ அல்லது ஸ்திரீ உறவினரோ பக்கத்திலில்லாமல் ஸ்திரீகளைப் பரிசோதனை செய்யக்கூடாதென்று டாக்டருக்கு நன்கு தெரிந்திருக்கவேண்டும்." (அலகாபாத் ஹைகோர்ட் தீர்ப்பு.) (27—5—29.)

* *

"டாக்டர் அவளுடைய மேல்சட்டையைத் தூக்கிவிட்டு, அறைக்கச்சையும் தணித்துவிட்டு வயிற்றைச் சோதித்தார். பிறகு அவருடைய கை வயிற்றிலிருந்து மெதுவாக நகர்ந்து பெண்ணின் மர்மஸ்தானத்துக்குச் சென்றது." இவ்விதம் மானபங்கப்படுத்திய டாக்டருக்கு 6-மாத சிக்ஷை கிடைத்தது. (அலகாபாத் ஹைகோர்ட்.) (27—5—29.)

---

**"அமிர்த குணபோதினி" பிரஸ், 302, தங்கசாலைத் தெரு, சென்னை.**